ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" — "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" — "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—சூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹு புரட்டாதிமீ உஎவ (13-10-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—கடு.


## தோத்திரம்

ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனுள் அசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை யாதிநூ லையும்வகுத்துச்
சைவமுத லாமளவில் சமயமும் வகுத்துமேற் சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ யுன்னைநான் அணுகவுந் தண்ணருள் வகுக்கவிலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே பொய்யிலா மெய்யரறிவில்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப் போக்குவர வற்றபொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே சின்மயா னந்தகுருவே.

—தாயுமானசுவாமிகள்.

## கல்வி.

[திரு. S. சிவப்பிரகாசம்.]

### அறுசீர் விருத்தம்

கல்வியே யுலக மக்கள் கருதிடும் உண்மைச் செல்வம்!
கல்வியை யுணர்ந்தோர் அஃது கருந்தனம் என்றார்! மற்றச்
செல்வமோ அழிந்துபோகும்; சிறுமையில்கொண்டுசேர்க்கும்
கல்வியோ ஊற்று நீர்போல் தந்திடப் பெருகும் கண்டீர்!

கல்வியின் உபயோ கத்தைப் பயன்தனைக் கண்டா ராயின்,
கல்வியில் ஊக்கங் கொண்டே கற்றிடு வார்கள்; அதனால்
நல்விவே கம் சமர்த்து நல்கவே செய்வ தோடு,
புல்லறி வகற்றி ஞானப் பூஷணம் ஆக்கும் நன்றே.

பள்ளிக்குச் செல்லு வோர்கள் படித்துத்தி யோகம் செய்யும்
உள்ளத்தால் புரிகின் றார்கள் உபயோகம் என்ன கண்டார்?
உள்ளத்தை விருத்தி செய்யும் உற்றதோர் கல்வி எங்கே?
குள்ளமாம் மதக் கல்விக்குள் குருவிபோல் புகுதல் தீமை!

இத்தகைக் கல்வி யாலே என்னதான் பலனைக் கண்டோம்?
புத்தியின் விருத்தி யற்றுப் போனதே கண்ட லாபம்!
மித்தையாம் மதத்தின் கல்வி விலக்கியே பள்ளி தோறும்
வித்தகக் கலைகள் நாளும் விளங்கிடச் செய்கு வோமே!

அறிவினை யூட்டும் கல்வி அவிவேகம் போக்குங் கல்வி
சிறப்பினைக் கொடுக்குங் கல்வி தெளிவான தர்க்கக் கல்வி
நெறிமுறை வளர்க்குங் கல்வி நேர்மைவிஞ் ஞானக் கல்வி
மறுவறு கல்வி யாலே மக்களுக் கறிவுண் டாகும்!

கல்வியில் ஊக்கம் வேண்டும்; கற்பதில் தெளிவு வேண்டும்.
பல்விதத் தொழிலா ராய்ச்சி பண்ணலில் ஆசை வேண்டும்.
செல்வமும் அதுவே யாகும்! சீர்மையும் அதுவே யாகும்!
நல்லதோர் இன்ப வாழ்வு நாடிடும் கல்வி வாழி!

(க. ம.)

## புத்தகம்.

[சாமி சிதம்பரனார்.]

### கலி நிலைத்துறை

("முத்திநெறியறியாத" என்றபாடல் போலவும் பாடலாம்.)

புத்தகமே உனைமிகவும் புகழ்ந்திடுவேன்! புரந்திடுவேன்!
இத்தரையில் உனைப்போலே இனிமைதரு வாரெவரே?
வித்தைகளை அளித்தருள்வாய்! விதரணையைமிகத்தருவாய்!
சத்தியமாம் பொருள்பலவும் தெரிவிப்பாய் சந்ததமே.

எத்தனைநாள் உனையெடுத்தே படித்திடினும் இனியசுவை
அத்தனைநா ளுந்தருவாய்! அறுதல்இலா ஊற்றேபோல்;
உத்தமராம் பெரியோர்தம் உரையெல்லாம் உதவிடுவாய்!
புத்தமுதைப் போலினிக்கும் பலகவிகள் புகல்வாயே!

வறியோர்க்கு நிதிதருவாய்! வாட்டமெலாம் தவிர்த்திடுவாய்!
சிறியோர்க்கு மதிதருவாய்! சிறப்படையும் வழிகுறிப்பாய்!
பறிபோகும் சுதந்தரமும் பகுத்தறிவும் காத்தருள்வாய்!
அறிவோர்கள் வாழிடமாய் அமைந்தொளிரும் புத்தகமே!

நண்பரைப்போல்துணைசெய்வாய்! நாயகிபோல்நலந்தருவாய்!
அன்புறுதாய் தந்தையர்போல் அருமையுடன் ஆதரிப்பாய்!
பண்புறுபேர் ஆசிரியர் போல்அறிவு பகர்ந்திடுவாய்!
துன்புறுவோர் உனைச்சேரின் அவர்துயரம் தொலைப்பாயே!

நீதிசெயும் முறைசொல்வாய்! நிலமாளும் வழிதெரிப்பாய்!
பூதலத்தில்உறைபொருள்கள்புதுமையெலாம்விளக்குறுவாய்
சாதியிலையென் றுரைப்பாய்! சண்டையெலாம்விட்டொழிப்பாய்
போதனைகள் பலதருவாய்! புலவரென்றே எமைச்செய்வாய்!

என்புருக்கும் கீதங்கள் இன்னிசையோ டளித்தருள்வாய்!
அன்புநெறி காண்பிப்பாய்! ஆநந்த வாழ்வளிப்பாய்!
இன்புதரும் காட்சியெலாம் யாம்காணச் செய்திடுவாய்!
பொன்பொருளின்உயர்வுடையபுத்தகமேஉனைப்புகழ்வேன்!

# கொக்குவில் வாள்வெட்டு.

## முதாலம் எதிரிக்கு 2வருடக் கடூழியச்சிறையும் 3 வருடப் பிணையும்.

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் 8

கொக்குவில் வாசியான நாகன்—எல்லுப்போலையன் என்பவன் தெருவழியே வரும்போது (1) முத்துவேலு—ஞானசேகரம், (2) வைத்தியலிங்கம்—இரத்தினம், (3) மணியம்—கணபதி என்பவர்கள் கடந்த ஆனிமாசம் 22ந் தேதியன்று அவனை வழிமறித்து வாளால் வெட்டிக் காயப்படுத்தினர்கள் என்பதாகத் தொடுக்கப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிஸ்தலத்தில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

நாகன்—எல்லுப்போலையன் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:

"சில நாட்களின் முன்னர் ஒரு சனிக்கிழமையன்று மத்தியானம் 1-மணியளவில் நாகமுத்தர் என்பவனுடன் கூடிக்கொண்டு காசு வாங்குவதற்காகச்சென்று திரும்பிவந்தேன். அப்போது ஒழுங்கை யொன்றிற் கருகில் இவ்வெதிரிகள் மூவரும் இன்னுமிருவருமாக நின்றார்கள். நாங்கள் அவர்களுக்குச் சமீபமாகப் போனபோது இரண்டாம் எதிரியாகிய இரத்தினம் கையால் அடித்தார். பின்னர் அவர் வேலியுள்ளிருந்து ஓர்வாளை எடுத்து 1ம் எதிரியிடம் கொடுக்க 3ம் எதிரி 1ம் எதிரியிடம் வெட்டும்படி சொன்னான். பின்னர் 3ம் எதிரி பைசிக்கிளில் போய்விட்டான். உடனே 1ம் எதிரி எனது வலதுகையின் தோள்மூட்டிலும் வலக்கையிலும், இடக்கையிலுமாக மும்முறை வெட்டினர். அப்பொழுது 'என்னை வெட்டவேண்டாமென' நான் கும்பிட்டேன். பின்னர் எதிரிகள் ஓடிவிட்டார்கள். வரும்வழியில் இவர்கள் மூவரும் தம்பாபிள்ளையென்பவரும் ஒரு கருப்பு மனிதனும் நின்றார்கள். அவர்களும் எதிரிகள் போகும்பொழுதே போய்விட்டார்கள். எனக்கு வெட்டு விழுந்தபின் சிறிது தூரம் நடந்தேன். ஆனால் களை அதிகமாயிருந்தபடியால் இருந்துவிட்டேன். பின்னர்என்னுடன் வந்த நாகமுத்துவைப் பொலிஸ்விதானையிடம் அனுப்பினேன். அவர்வந்து என்னிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார். வெட்டிய வாளையும், இடத்தையும் நாகமுத்தனே பொலிஸ்விதானைக்குக் காண்பித்தான். சம்பவம் நடைபெறும்பொழுது அநேகர் நின்றார்களேயாயினும் எனக்காகச் சாட்சி சொல்ல முன்வரவில்லை. ஏனெனில் அவர்கள் யாவரும் எதிரிகளுடைய மனிதர்களாயிருந்தமையேயாகும். 1-ம், 2-ம் எதிரிகள் கொக்குவில் விதானையினது தம்பியினுடைய மகனும், மருமகனுமாவார்கள். 3-ம் எதிரியாகிய கணபதி எனது வம்சத்தைச் சேர்ந்தவன். நான் சாதியில் நழுவன். நானும் 3-ம் எதிரியும் ஒரேகாணியில் இருந்தோம். 3-ம் எதிரியினது தம்பிக்கு எதிராக நான் கோட்டில் சில மாதங்களுக்கு முன்னர் ஓர் வழக்கைத் தொடர்ந்தேன். அதில் இவனது தம்பிக்கு ரூபா 30 அபராதம் விதிக்கப்பட்டது. இது காரணமாகவே 3-ம் எதிரி ஏவிவிட்டு என்னை இந்நிலைமைக்குள்ளாக்கினர்கள். நான் 19 நாட்கள் யாழ்ப்பாணம் சிவில் ஆஸ்பத்திரியில் இருந்திருக்கிறேன்."

நீதிபதி 1-ம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு, இரண்டுவருடக் கடூழியச் சிறைத்தண்டனையும், அச்சிறைத்தண்டனை காலவெல்லை முடிந்தபின் 3 வருடங்களுக்கு நல்நடத்தைப் பிணையி லிருக்கவேண்டுமெனவும் தீர்ப்புக் கூறி, மற்றைய இருஎதிரிகளையும் விடுதலைசெய்தார்.

# சிவன்கோவிலடி வாள்வீச்சு

## எதிரிக்கு ஒருவருடச் சிறை.

யாழ்ப்பாணம் 10.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிஸ்தலத்தில் வண்ணார்பண்ணை வாசியாகிய வீராசாமி-சண்முகசுந்தரம் என்பவர்மீது சென்றவைகாசிமாசம் 24-ந் திகதியளவில் சிவன்கோவில் முன்பாக சரவணமுத்து-சோமசுந்தரம் என்பவரை வாளால்வெட்டிப் படுகாயப்படுத்தியதாகத்தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது வழக்காளியான சரவணமுத்து-சோமசுந்தரம் கூறியவை வருமாறு:—

"குறித்த இரவு நான் சண்முகசுந்தரத்தின் படக்கடைக்குச் சென்று காந்திப்படமொன்றின் விலைகேட்டபோது, அவர் அதனை எனக்கு விற்பதில்லை என்றும், நான் அதனை வாங்கத் தகுதியுடையன் அல்லவென்றும் சொன்னார். விற்பனைக்கு இல்லாமல் பின் எதற்குப் படங்களை வைத்திருக்கிறாய் என்று நான் திரும்பக் கேட்டேன். உடனே அவர் கோபம் கொண்டு என்னை வாயில்வந்தபடி பேசி அடிக்கவந்தார். நான் யாதும் பேசாது அவ்விடத்தை விட்டகன்றேன். இதற்கிடையில் ஓர் தடியால் எறிந்துவிட்டுப் பின்னர் என்னைத் தொடர்ந்துவந்து ஓர்வாளால் என்னை வெட்டுவதற்கு ஓங்கினார். நான் தடுத்தேன். வெட்டு கையில் விழுந்தது. உதிரம் அதிகமாக வடிந்தமையால் நான் மயங்கிவிட்டேன். ஆனபடியால்தான் பொலீஸ் ஸ்டேசனில் சென்று முறைப்படவில்லை. ஆஸ்பத்திரியிலேயே நான் என் முறைப்பாட்டைக்கொடுத்தேன்"

மீண்டும் சில சாட்சிகளை விசாரணைசெய்ததின்மேல் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு ஒருவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். ந. நி.

# சாவகச்சேரியில் கோர விபத்து.

## ஒருவர் மாண்டார்; இருவருக்குப் படுகாயம்.

யாழ்ப்பாணம் 9.

இன்றுகாலை சாவகச்சேரியிலுள்ள "ஸ்ரீவல்லிபுரம்மில்ஸ்" எனப்படும் யந்திர நிலையத்தில் இயந்திரத்தை இயங்கச்செய்வதற் காதாரமாயுள்ள 'காஸ் டாங்கி'யைச் சூடுபண்ணப்பட்டபோது திடீரென 'டாங்கி' வெடித்ததால் ஓர் கோரவிபத்து நிகழ்ந்தது. அவ்விபத்தால் ஆறுமுகம், முருகேசு, செல்லத்துரை, சின்னத்தம்பி ஆகியோர் பயங்கரமான ஊறடைந்தனர். இவர்களில் முருகேசு, சின்னத்தம்பி என்பவர்களது தேகச் சருமம் தீய்ந்துபோய்விட்டது. அவர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைசெய்யப்படுகின்றனர்.

முருகேசு என்பவர் இரவு ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டதாகத் தெரிகிறது. ந. நி.

# கஞ்சாக் கலந்த லேகியம்.

## 50 ரூபா குற்றம்.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் 8.

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் பொலிஸ்நீதிபதி திரு. K. ஆள்வாப்பிள்ளை முன்பாக வண்ணார்பண்ணை செட்டித்தெருவாசியான சிதம்பரப்பிள்ளை—நாகலிங்கம் என்பவர்மீது சென்றஆடிமாத மளவில் கஞ்சா கலந்த லேகியத்தைக் கள்ளத்தனமாக வைத்திருந்ததாகவும், விற்றதாகவும் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆரம்பமானவுடன் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்காகத்தோன்றிய திரு. நல்லையா கூறியதாவது:—"சென்ற 1934ம் ஆண்டில் எதிரி லேகியம் விற்றதற்காக அபராதம் விதிக்கப்பட்டார். அந்த லேகியம் சென்னை தண்டபாணிபிள்ளையிடமிருந்து எடுப்பித்ததாகும். அபராதமிறுத்ததின்மேல் எதிரி லேகியச் சொந்தக்காரரான தண்டபாணிப்பிள்ளைக்கு அந்த லேகியத்தில் கஞ்சா இருப்பதாக எழுதினார். அதற்கு அவர் "மகா மன்மத சிந்தாமணி" என்றழைக்கப்படும் அவ்விலேகியத்தில் கஞ்சா எதுவும் கலக்கப்படவில்லையென இலங்கை அரசாங்க பரிசோதனை அதிகாரி அதைப் பரீட்சை செய்தபின் கொடுத்த நற்சாட்சிப் பத்திரமடங்கிய விளம்பரமொன்றை எதிரிக்கு அனுப்பிவைத்தார். அவ்விளம்பரத்தை நம்பி எதிரி அந்த லேகியத்தில் 12-டின்கள் அனுப்பும்படி ஓடர்செய்து வருவித்து ஒரு டின்னை விற்றுக்கொண்டிருக்கையில் மதுபரிபாலனப் பகுதியினர் எதிரியின் வீட்டைச் சோதனை செய்து அங்கிருந்த 11 டின்களையும் எடுத்துச் சென்றனர்.

நீதிபதி: அவ்விளம்பரத்தில் இலங்கை அரசாங்கப் பரிசோதனை அதிகாரி அளித்திருக்கும் நற்சாட்சிப்பத்திரம் பொய்யானதெனத் தோற்றுகிறது.

திரு. நல்லையா: ஆம். அம்படித்தான் தோற்றுகிறது. எதிரி அதனை உண்மையென நம்பியே லேகியத்தை வரவழைத்தார்.

நீதிபதி: தபாற்கந்தோர் அதிகாரிகளாவது ரேகுப்பகுதியார்களாவது அவைகளை எடுப்பித்தவரிடம் கொடுப்பதன்முன் பரிசோதனை செய்யும் வழக்கமுண்டா?

திரு. நல்லையா: இல்லை.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு "எதிரி இதற்குமுன்னர் 5முறை குற்றவாளியாகியிருக்கிறார். சென்னையிலிருந்து லேகியம் செய்யப்பட்டு வருவதாகவும் எதிரி கூறுகிறார். அத்துடன் அங்கிருந்து வந்த விளம்பரமொன்றையும் தாக்கல்செய்திருக்கிறார். அவ்விளம்பரத்தில் மேற்படி லேகியததில் கஞ்சா இல்லையென்பதாக இலங்கை அரசாங்க பரிசோதகர் சோதனை செய்து நற்சாட்சி அளித்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. சென்றதடவை எதிரிக்கு ரூபா 50 அபராதம் விதிக்கப்பட்டிருப்பதால் நானும் எதிரிக்கு இப்போது 50ரூபா அபராதம் விதிக்கிறேன்" என தீர்ப்புச்செய்து கைப்பற்றப்பட்ட லேகிய டின்கள் அத்தனையும் அழித்துவிடும்படி கூறினார்.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம்ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டததின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் தலவாக்கொல்லை 72-ம் நம்பர்க் கடை ச. தில்லையம்பலம்என்பவரிடம் 1933-ம்௵ ஆனி௴ 17௳ தொடக்கம் 1934-ம்௵ ஐப்பசி௴ 15-ம்௳ வரையும் அடைவு பிடிக்கப்பட்டு இப்போது தவணை தப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

| மாஃ | உ | நம். | நகைவிபரம் |
|---|---|---|---|
| 1933௵ ஆனி | 17 | 2844 | 1 மோதிரம் பொன். |
| ஆடி | 3 | 2914 | 1 அட்டியல் பொன். |
| | 25 | 2952 | 1 கலாவரை மோதிரம் பொன். |
| ஆவணி | 5 | 2971 | 2 அச்சரக்கூடு பழுதுபொன். |
| | 8 | 2977 | 1 சோடி காப்பு. 1. சோடி மேலீடு பொன். |
| | 13 | 2981 | 1 கொடி அரைப்பவுனுடன் பொன். |
| | 14 | 2986 | 1 முழு டலர் தம்பக் சங்கிலியுடன் 4 அரைப்பவுண் குண்டுவைத்தது. |
| | 30 | 3019 | 2 சோடி கடுக்கன் பொன். |
| புரட்டா | 14 | 3043 | 1 சோடி கல்கடுக்கன் பொன். |
| ஐப்பசி | 4 | 3070 | 1 அட்டியல் பொன். |
| கார்த்தி | 9 | 3129 | 1 கல்வைத்த மோதிரம் பொன். |
| 1934௵ தை | 17 | 3220 | 1 அரைமுடி, 2 குண்டு, 2 தாயித்துவெள்ளி, 1 சிறு சொண்டைப்பூ பொன் |
| | 20 | 3223 | 1 மோதிரம் 1 கல்வைத்தது பொன். |
| | 28 | 3234 | " " " |
| மாசி | 6 | 3245 | 1 சோடி கல்கடுக்கன் பொன். |
| | 24 | 3257 | 1 சோடி நாகபடம், 1 சோடி தெ. தண்டட்டி, 26 பொட்டுமணி 1 சோடி ஒன்னப்பூ பொன், |
| பங்குனி | 28 | 3303 | 1 சங்கிலி அட்டியல் பதக்கத்துடன் பொன் பதக்கத்தில் கல்பதித்தது. |
| | 31 | 3308 | 1 அட்டியல் பொன். |
| சித்திரை | 12 | 3324 | 1 சோடி விசிறிமுருகு பொன. |
| வைகாசி | 4 | 3367 | 1 சோடி கல்கடுக்கன் பொன். |
| ஆவணி | 3 | 3454 | 1 கல்வைத்தமோதிரம் பொன். |
| | 14 | 3464 | 3 சோடி கடுக்கன் பொன். |
| | 27 | 3475 | 3 கல்வைத்த 1 மோதிரம் பொன். |
| புரட்டா | 15 | 3492 | 28 பொட்டுமணி பொன். |
| | 15 | 3493 | 1 வெள்ளி அறுணல் 1 அ. கூடு 1 மேல்காது முருகு பொன் |
| | 15 | 3494 | 1 சோடி கல் கடுககன் பொன். |
| | 15 | 3495 | 35 பொட்டுமணி 1 சோடி ஓலை பொன். |
| ஐப்பசி | 2 | 3514 | 1 சோடி பூட்டு கடுக்கன் பொன். |
| | 2 | 3516 | 1 சோடி பூட்டு கடுக்கன் பொன். |

விற்பனவு:— 1935௵ கார்த்திகை௴ 2-ந்திகதி சனிக்கிழமை காலை 9-மணி தொடக்கம் அதற்கு முன் எடுபட்ட நகைகள் புறநீங்கலாக மேற்படியாரின் கடையில் ஏலத்தில் விற்கப்படும். நகைகளின் விபரங்களுக்கு மேற்சொல்லிய கடையில் அல்லது கீழ்க் கையொப்பம் இட்டிருப்பவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

H. P. WICKRAMASINGHE, Auctioneer, Talawakele.

(37) 13-10-35—2

| பத்திரக்கிரயம் | |
|---|---|
| இலங்கை, இந்தியா, | |
| பர்மா | ரூபா 4. |
| மலாய்நாட்டுக்கு | வெள்ளி 4. |
| சீவியசந்தா | ரூபா 40. |
| தனிப்பிரதி | சதம் 5. |
| இந்தியாவுக்கு | ,, அணா 1. |
| மலாய்நாட்டுக்கு | ,, காசு 5. |

# ஈழகேசரி

| விளம்பரவிகிதம் | |
|---|---|
| முதன்முறைக்கு | |
| ஒருகலம் | ரூபா 7-00 |
| ,, அரைக்கலம் | ,, 4-00 |
| ,, கால்கலம் | ,, 2-50 |
| அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு. | |

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னுகம்: யுவஞு புரட்டாதிமீ௳ உஎஉ (13-10-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—கடு.

# இலங்கையின் அரசியல் எழுச்சி.

## தேசிய மகாசபையில் பிளவு.

நவாலியூர், "சத்தியநாதன்."

(13-ம் இலக்கத் தொடர்.)

வகுப்பு வித்தியாசங்கள் எவ்வளவுக்கிருந்தபோதிலும் எல்லாருமிலங்கையர்தான்; என்ற எண்ணத்துடன் அருணுசலமும் அவருடைய கட்சியினரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் (Communal Representation) வேண்டாமென்று உறுதியாய் நின்றார்கள். வாக்குரிமையை மேலும் விசாரிக்கவேண்டுமென்றும், அரசாங்க உத்தியோகப் பிரதிநிதிகளிலும் பார்க்கப் பொதுசனப் பிரதிநிதிகளே அரசாங்க சபையில் கூடுதலாக இருக்கவேண்டுமென்றும் வாதாடினார்கள். சட்டநிர்வாகசபையில் திருத்தங்கள் செய்யவேண்டுமென்றும் சில திருத்தப் பிரேரணைகளை வகுத்தார்கள். பணம்படைத்த செல்வர் வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தபோதிலும் இவர்கள் ஏழைகளின் வரிப்பாரத்தைக் குறைக்க எண்ணி, (தனவந்தர்களையே பாதிக்கக்கூடிய) வருமான வரியை ஏற்படுத்தவேண்டுமென்று நின்றார்கள். இதில் அதிகம் முயன்று வாதாடினவர் காலஞ்சென்ற சிங்களத் தலைவரான திரு (பின் சேர்) ஜேம்ஸ்பீரிஸ் ஆகும். இவர் மிதமான போக்குடையவர். ஏராளமான பணம் சம்பாதிக்கக்கூடிய வழக்கறிஞராயிருந்தும் இவர் அதையும் பொருட்படுத்தாது தமது வாழ்வைச் சமூகசேவைக்கும் அரசியற்றொண்டுக்குமாக அர்ப்பணம் செய்தார்.

இவ்விரு பெருந்தலைவர்களுடைய முயற்சியும் உழைப்பும் இலங்கைத் தேசிய மகாசபை (Ceylon National Congress) என்ற இயக்கமாகப் பரிணமித்தது. அரசாங்கமும் கடைசியாக இவர்களுடைய கோரிக்கைகட்கு ஒருவாறு முணுமுணுப்புடன் இடமளித்தது. சட்டசபையில் உத்தியோகப்பற்றுள்ள (Official) அங்கத்தவர்களின் தொகையைக் குறைக்கவும் உத்தியோகப்பற்றற்ற (Unofficial) சனப்பிரதிநிதிகளின் தொகையைக் கூட்டவேண்டுமென்றும சட்டம் நிறைவேற்றப்பட்டது. எனவே புதிய ஒரு சட்டசபை ஏற்பட்டது. இதில் 14-உத்தியோக அங்கத்தினரும் 23-உத்தியோகப்பற்றற்ற சனப்பிரதிநிதிகளும் இடம்பெற்றனர். இவ்விருபத்துமூவரில் பதின்மூருவர் மாகாணவாரியாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். எண்மர் விசேஷ உரிமைகளை (Special interest) யுடையவர்களின் பிரதிநிதிகளாகவும் நியமிக்கப்பட்டனர். எனவே உத்தியோக அங்கத்தவர்களின் தொகை குறைந்தது. ஆனால் அதற்குப்பதிலாக கவர்னர் தனனுடைய கையில் விசேஷ உரிமைகளைப் பற்றிக்கொண்டார். மேலும் சில விஷயங்களில் கவர்னர் தமக்குப் 'பரமாவசிய' மெனக் காணப்படும் சட்டங்களை உத்தியோக அங்கத்தவர் சகாயமாயிருக்கும்பட்சத்தில் மற்ற அங்கத்தவர்களின் ஆட்சேபத்தைப் பொருட்படுத்தாது தாம் விரும்பியபடி நிறைவேற்றலாமெனவும ஒரு உரிமை அவருக்குக் கொடுக்கப்பட்டது. இது கவர்னரின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தியது.

இந்த அரசியல் சீர்திருத்தங்கள் பொதுசனங்களின் அபிப்பிராயத்தை ஆலோசியாமல் அரசாங்கத்தால் புகுத்தப்பட்டன. சில சந்தர்ப்பங்களில பொதுசன ஆட்சேபத்தையே அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. எனவே நானுபக்கத்திலுமிருந்து சனங்கள் இச்சீர்திருத்தத்திற்கெதிராகக் கூச்சலிட்டனர்.

இந்திய அரசியல் கிளர்ச்சியைப் பின்பற்றி இலங்கையிலும் முதன்முதலாக அரசியல கிளர்ச்சி நடைபெற ஆரம்பமாயிற்று.

இலங்கையின அரசியல் எழுச்சியில இதுவும பிரதானமான ஒரு அமசமாகும. இநதிய அரசியல கிளர்ச்சிகளைபபற்றி 1915-ம ஆண்டுக் கலகம் ஏற்படுமவரை இலஙகையில் நல்லெண்ண மிருந்துவரவில்லை. மாசறற அவவிநதிய தேசபக்தனை கோகலே அவர்களுக்கு இலங்கையர் "ராஜததுவேஷி" எனறு பட்டம் சூட்டினர். இலஙகைப் பொதுசன அபிபபிராயம அவ்வளவுக்கு ஏகாதிபததியத்தடிப்புற்றிருநதது. ஆங்கிலோ இநதிய பததிரிகைகளின போக்கே இலங்கைப் பொதுஜன அபிபபிராயப போக்காயிருநதது. இமமாதிரியான எண்ணத்தை மாறறி இலஙகையரை வேறு முறையில எணணச் செய்த வீரர் 'மோணிங்லீடர்' என்ற ஆங்கிலப்பத்திரிகையின ஆசிரியரான காலஞ்சென்ற ஆமணடடி. சூசா எனபவரே. இவர் பிறபபில ஆநதியர். இலங்கையில வந்து குடியேறி இஙகேயே வாழ்நது வநதார். தமது காத்திரமான எழுத்துக்களினுல் இலங்கையில் ஒரு பெரியசக்தியாய் இவர் இலங்கினர். இவர்விதைத்த விதையின் பயன் 1915-ம் ஆண்டுக் கலகத்தில் இலங்கையர் அடைந்த துன்பமும் கஷ்டமுமாகவே முடிந்தது. இந்திய அரசியல் கிளர்ச்சியைப் பற்றி இலங்கையர் முன்னையிலும் வேறுவிதமாக எண்ணத்தொடங்கினர்கள். மகாத்மாகாந்தி நடத்திவந்த சத்தியாக்கிரகம் அவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டிற்று. தங்களை ஆலோசியாமல் அரசாங்கம் புதிய சீர்திருத்தங்களை ஏற்படுத்தியதைக் கண்டதும் நமது தலைவர்கள் இந்தியாவைப் பின்பற்றிச் சட்டசபையைப் பகிஷ்கரித்தார்கள். சீர்திருத்தம் போதாதென்ற நியாயத்தையும் எடுத்துக்காட்டினர்கள்.

கவர்னர் வெகு தந்திரமாக நிலைமையைச் சரிப்படுத்தினர். தேசிய மகாசபைத் தலைவர்களை அழைத்தார். உங்களுடைய பிரேரணைகளை நான் சீமைக்கனுப்பி மேலும் திருத்தங்களை ஏற்படுத்துவேனென அவர்களிடம கவர்னர் சொன்னுர். பகிஷ்காரம உடனே நிறுத்தபபட்டது. மகாசபைத் தலைவர்கள் சட்டசபையில் நுழைந்து தங்கள் சீர்திருத்தப் பிரேரணைகளை வகுத்தனர். இதுவே 1923-ம ஆண்டு அரசியல் சட்டத்துக்கு அஸ்திவாரமாயிருந்தது.

சட்டசபைப் பகிஷ்காரமும் கவர்னரின் சமாதான முயற்சியுமே இலங்கைத் தேசிய மகாசபையின் முயற்சிகளால் ஏற்பட்ட பெரும் பயன். இந்த வெற்றியினுல் உற்சாகமடைந்தவர்களாய் மகாசபை (ஈண்டு 'மகாசபை' என்று குறிப்பிடும் பொழுதெல்லாம இலங்கைத் தேசிய மகாசபையையே குறிக்கும்) த் தலைவர்கள் அரசியல் ஸதானங்களைப் பங்கிடும வேலையில் இறங்கித் தமமுள் பிணங்குவாராயினர். துர்ப்பாக்கியமான ஒரு பிணக்கினுல் மகாசபையில் பிளவு உண்டானது. துரதிர்ஷ்டவசமாக அதுவும் வகுப்புவாதப்போக்கில் சிங்கள தமிழர் பிணக்காயிற்று. எங்களுடன் ஒற்றுமையாய் நினறு வாதாடியதற்குப் பிரதியுபகாரமாய்ச் சட்டசபையில் தமக்குக் கிடைக்கக்கூடிய ஸ்தானங்களிலும் பார்க்க அதிகப்படியான ஸ்தானங்களைத் தமிழர்கள் கேட்கிறார்களென்று சிங்களத் தலைவர்கள் எண்ணினர்கள். "இறாப்போட்டுச் சுறாப் பிடிப்பதுபோல்" எங்களுடைய துணையைக்கொண்டு நாட்டில் ஒற்றுமை இருக்கிறதென்று காட்டி அரசாங்கத்தை நெகிழச் செய்வதற்கல்லவோ சிங்களவர் முயன்றார்கள் என்று தமிழர்கள் நம்பினர்கள். இந்த நம்பிக்கைகள் எவ்வளவு தூரம் சரி எவ்வளவுக்குப் பிழை என்பதை ஒருபோதும் நிச்சயித்துவிடமுடியாது. இவ்வாறெழுந்த பரஸ்பர மனக்கசப்புடன், மகாசபையின் முன்னேற்றத்துக்கு முழுக்காரணராயிருந்த அருணுசலம் சட்டசபையில் ஒரு ஸ்தானங்கூடப் பெறமுடியாமல் மனச்சோர்வுடன் ஒதுங்கினர், தனக்கு நேர்ந்த துக்க சம்பவங்களைப்பற்றி ஆழ்ந்து யோசித்தார். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார். "என்ன! நான் இந்த வகுப்புவாதத்துக்கு மாறாக நாடெங்கும் பேசிவந்தேன். ஆனுல் சனங்களிடமிருந்து இந்த வகுப்பு எண்ணத்தை மாற்ற முடியவில்லை. அவர்கள் வகுப்பு முறையிலேதான் எண்ணிவருகிறார்கள்" என்றெல்லாம் யோசனைபண்ணிய பின் மகாசபைக்கு மாறாக அவர் ஒரு வகுப்புக் கட்சிச் சங்கத்தை ஏற்படுத்தினர். ஆனுல் தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்குள் அவர் காலன் கைப்பட்டார். ஸ்தலயாத்திரைக்கு இந்தியா சென்றவர் அங்கேயே மரணமானுர்.

தனது இளவலான அருணுசலத்தின் ஜனநாயகக் கொள்கைகளில் நம்பிக்கைவையாத ராமநாதன் வகுப்புவாதமென்ற தமது சித்தாந்தத்தை எங்கும் பரப்பிவந்தார். இலங்கையரின் பிரதிநிதியாக இருந்தால் இவ்வாறுசெய்ய முழுவசதி பெற்றிருக்கமாட்டாதவர் தற்போது தமிழர் பிரதிநிதியாகச் சட்டசபையில் ஸ்தானம் வகித்தபடியால் ஒருவித தடையுமில்லாமல் வகுப்புவாதத்தைப் பரப்பினர். நாற்பது வருடமாக சட்டசபையில் அரசியற்றொண்டாற்றி இளையாது இருந்துவந்த இவர் நேற்று முந்துநாள் என்றுபோல் சட்டசபைக்குள் வந்து அதிகாரம்பெற்றவயதில் இளைய அரசியல் வாதிகளைப் பொருட்படுத்த மனமில்லாதவராயிருந்தார்.

(தொடரும்)

"ஈழகேசரி" தீபாவளி இதழ்

20-10-35-ல் வெளிவரும்

32 பக்கங்கள் — விலை சதம் 5

வியாபார விருத்தியை விரும்புவோர்க்கு அரிய தருணம்!

விளம்பரஞ்செய்வதற்கு விசேட வசதி!

முந்துங்கள்! முந்துங்கள்!!

விபரமறிய விரும்புவோர் உடனே தெரிவிக்கவேண்டியது.

"ஈழகேசரி" அதிபர், சுன்னுகம்.

நோயாளன்:— இருமலுக்கு மருந்து உங்களிடமுளதா?

மருந்து வியாபாரி:— இருமலுக்குப் பலவித மருந்துகளிருக்கின்றனவே.

நோயாளன்:— நான் இருமட்டுமா? அதைப்பார்த்து ஏற்ற மருந்து தருகிறீர்களா?

ஒருவன் பிறருதவிவேண்டாது செய்தவுதவிக்கு மண்ணுலகத்தையுந் தந்தாலு மொத்தலரிது

# கலாசக்கரம்

படிப்பை முடித்துக்கொண்டோ அல்லது படித்து முடிந்ததென்று நினைத்துக்கொண்டோ அறியேம், வீணே வேலையின்றித் திரியும் வாலிபரும் அவர்களின் பெற்றோரும் மற்றோரும் இக்காலக்கல்வி முறைமீதும் அதிகாரிகள்மீதும் சினந்து சீறுகின்றனர். எந்தவிஷயத்தையும் தக்கதென்றும் தகாததென்றும் அத்தாட்சிப்படுத்துதல் அப்படிச் செய்வோரின் திறமையிலே தங்கியிருக்கிறது. எல்லாப்பகுதியாருக்கும் ஏற்குமாறு சொல்லுவதும் ஒரு விசித்திரமாம். இக்காலக் கல்விமுறையை முற்றாகக் கண்டிப்போருடன் நான் இணங்கமாட்டேனென ஒருவர் அபிப்பிராயப்படுவாராயின், ஒரு தங்கப்பவுணை, பத்துருத்தல் நிறைகொண்ட பித்தளையுடன சேர்த்து உருக்கிச்செய்யப்பட்ட ஒரு ஆபரணத்தைப்பார்த்து, அது முழுவதும் பித்தளையென்று சொல்லுவோருடன் நான் இணங்கமாட்டேனென்று ஒருவர் கூறுதல் போலவேயாகும். இதுவும் ஒருவிதகெட்டித்தனம். அதுசரிதான்; அதுபிழைதான் என்று சொல்வதும் ஒரு சம்பிரதாயம். "இக்காலக் கல்விமுறை நல்லது; அதன்நோக்கந்தான் உதவாது" என்பதும் ஒரு சமாதானம். அது, புலி ஒரு அழகான மிருகம்; அதன் பாய்ச்சல்தான் பொல்லாதது என்று சொல்லுதல் போலாகும். * *

பெற்றோரின் கடமை பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதாகும். வாரதபிள்ளைகளின் பெற்றோர்மீது வழக்குத்தொடர்தல் வாறது வாராததுபார்கும் பரிசோதகரின் கடமையாம். பாடசாலைக்குப் போகாத பிள்ளைகளின் பெற்றோருக்கு அபராதம் விதித்தல் கிராமச்சங்கத்தாரின் கடமையாகும். வகுப்பின் ஓர்பக்கத்திலே தூக்கியிருக்கும நேரசூசிகையென்னும் நாழிகைவட்டத்தைத் திருப்புதல் ஆசிரியரின் கடமையாம். இவை இப்படியாக, அங்குமிங்குங் கோட்டைக்கீறி, காலததையுங குறித்து, அவைகட்கியைய முறையையும் வகுத்து, அது அப்படியாகவேண்டும் இது இப்படியாகவேணடுமென்று திட்டங் கட்டியபின் "மாணவரை நன்னிலைப் படுத்தும் வழிகளை ஆசிரியர்களே வகுப்பில் அனுஷ்டிக்கவேண்டும்" என்று ஊரறிய உலகமறிய வெளியிடுவதன் நோக்கம் சிறிதும் புலப்படவில்லையே. ஏன் அப்படிச்செய்வான்; பின்னர் ஏன் இப்படிச் சொல்லுவதென்று யாருங்கேட்டால், "அப்படிச்செய்ததுநானல்ல"; பின்னையார்? "அந்தக் குருவானகள்வன்"; அக்கள்வன்யார்! எங்கே? "அந்தக்.... ........... கொழும் ..........."என்பதே விடையாகும். * *

பூரண அதிகாரத்தையும் கொடுத்து, போதிய பொறுப்பையும் சுமத்தி, ஆட்சியையும் ஒப்புவிததபின, "ஆசிரியர் இவ்வேலைக்கு ஆயத்தமில்லாதிருக்கலாம்" என அபிப்பிராயங்கொண்டு தகுதிக்கும் தகுதியின்மைக்கும் இடையிலிட்ட எல்லைக்கல்லுப்போல நிற்பாரைக்குறித்து எதுதான் எப்படித்தான் சொல்லமுடியும். முதிய மரங்கள் வளைந்தும் சரிந்தும் நிற்பதனால் வேலி நேராக ஒழுங்காகவில்லையென்று அவைகளைத தறித்துப் புதிய மரங்களைநாட்டி வேலியை நேராக்கிவிட, பெய்தமழையினாலும் அடித்த காற்றினாலும் வேலி பாறிச் சரிந்தமைபோல, "தகுதியும் பல்நாட்பயிற்சியும், கல்வியாற்றலும் அதிகம் கைவரப்பெற்ற, ஆசிரியர்கள்" இல்லாமையினால் இப்படியெல்லாம் நேர்ந்தது. இனி, இந்த "ஆசிரியர்கள் முன்வந்து வழிகாட்டுவது மிகப் பிரதானம்" என்றால் ஆவதெப்படி? இங்ஙனமெல்லாம் சங்கடப்படும் கல்வியோடும், அதனைக்கற்றுச் சங்கடப்படுவாரோடும் நாமும் அனுதாபப்படுகிறோம். * * *

"மாணவரின் கல்விமுறை அவர்கள் வசிக்கும் நாட்டிற்கு ஏற்றவிதமாக வகுக்கப்பட் டிருக்கவேண்டும்" என்பது இன்னொருவருடைய அபிப்பிராயமாகும்: கல்விமுறை ஒருபுறங் கிடக்கட்டும். இந்தநாட்டில் எக்காலத்தேனும் உபயோகிக்கப்படாத சொற்களும் வேறு பாஷைச்சொற்களும் தமிழ்மொழியில் இல்லாதசொற்களும் இங்கில்லாத வசனநடைகளும் பிறவும் மலிந்த பாடபுத்தகங்களே கீழ்வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு ஊட்டப்படுகின்றன. ஆங்கில வசனத்திலுள்ள சொற்களை அம்முறையாகவே மொழிபெயர்த்துள்ள தமிழ்வசன அமைப்புக்கள் அநேக பகுதிகளிற் காணப்படுகின்றன. இந்த முறைமை இன்னுஞ் சிலகாலம் அனுசரிக்கப்படுமாயின் அருமந்த தமிழ்மொழிக்கு அந்தியகட னாற்றவேண்டி நேரினும் நேரும். அக்கடனும் அதிகாரிகளுக்கே உரியதாகும். குறித்த எந்த நூலாசிரியர்மீதும் எமக்குக் கோபமில்லை. அன்றி அழுக்காறு என்னும் அதுவு மில்லையென்று திரிகரண சுத்தியுடன் வெளியிடுகின்றேம். உதாரணமாகச் சில சொற்களையும் வசனங்களையும் தருகின்றோம். *

அவை, அறியாதவர்கள் அறிவதற்கும் அறிந்தும் அறியார்போலிருப்பவர்களை ஞாபகப்படுத்துவதற்கும் உபயோகப்படு மென்பதே நோக்கமாகும். "பசேல்; கலெக்டர்; வசூல்; பிறகு; தாசில்தார்; தமிழ் வருஷம்; உடற்பழக்கம்; உட்கார்தல்; தாலுகா; கஜானு; கவர்னர்; ஜில்லா; மரத்தண்டை; வெட்டித்தலைபாரி; மரத்துக்காரன்; பிட்டா; பாக்ஷா; பேஷ்; ஆய்விட்டது; வளார்; மலார்; தற்காலம்; கலியாணப்பிள்ளை" என்னுமிவைகளும் பிறவுமாம். இனி வசனங்களாவன:—"ஏற்றம் இறைத்துக்கொண்டிருந்தார்; கால்நடையும் ஒரு நல்லபழக்கமே; ஓடுதலும் நீந்துதலும் நல்ல உடற்பழக்கங்கள்; அது பிளந்துகொண்டுசெல்ல முடிகிறது; அந்தப் பாட்டைக் கம்பர் கேட்டுக்கொண்டே வந்தார்; அது முட்டைகளின்மேல் இரண்டுவாரம் அடைகாக்கும்; அங்கே தோட்டக்கால் பயிர் செய்யப்பட்டிருந்தது; ஒருவர் மீசை வைத்துக்கொண்டிருந்தார்; ஒருவர் கொண்டைபோட்டுக்கொண்டிருந்தார்; அவன் இரண்டு இளநீர்க்காய்களைக் கொடுத்தான்; இப்பொழுது நாம்நெருப்புக்காகஎன்னசெய்கிறோம்; நெருப்பு என்று நினைக்கவேண்டியதுதான்; வந்துவிட்டதுநெருப்பு; தீக்குச்சியை எடுத்துக்கிழித்தமாத்திரத்தில் நெருப்புச்சுடரைக் காண்கிறோம்; இறைச்சியைத் தின்பதும் கொலைசெய்வதும் உன் குலத்துக்கு உரிய குணங்கள்; அந்தப் பிரபுவின் குணம் தெரியவந்தது" என்பனவும் பிறவுமாம்.



Star of Paramount Pictures.

# அபிசீனியாவும் மற்றைய சாதியாரும்.

### சேர் ஜோன் ஹரிஸ் என்னும் பெரியாரினல் எழுதப்பட்ட கட்டுரை

### வண்ணை, ஸ்ரீ. வை. இராமநாதன் அவர்கள் மொழிபெயர்த்தது.

தற்போது ஐரோப்பிய வல்லரசுகளுள் ஒன்ருய் உள்ளதும் ஜெனிவாவிலுள்ள சர்வ அரசுச் சங்கத்தின் அங்கத்துவம் பெற்றதுமான இத்தாலி நாடு மேற்காட்டிய உரிமைபெற்றுள்ளதாய அபிசீனியாவென்னும் ஆபிரிக்காக்கண்டத்திலுள்ள தனியரசின்மீது போர் தொடுத்து இருக்கின்றது என்பதை தமிழ் மக்களுள் பலர் அறிந்திருக்கலாம். என்றாலும் அபிசீனியா நாட்டைப்பற்றியும் போர்மூழும் காரணத்தைப் பற்றியும விவரமாக அறிந்திருப்போர் மிகவும் அற்ப தொகையினராகவே இருப்பர் என நினைக்கின்றேன். ஆதலின் பின்வரும் விபரத்தை "டேயிலி நியூஸ்" பத்யரிகையினின்றும் இங்கே தருகின்றேன்.

(வண்ணை, வை. இ.)

அபிசீனியாவின் சரித்திரம், மற்றச் சாதியார்கள் அதன் எல்லைக்குள் நுழைவதற்குச் செய்யும் தந்தரங்களும் பிரயத்தனங்களும் பொதிந்து உள்ளதாய் இருக்கின்றது. அதைப்பற்றித் தற்போது சர்வதேச பரஸ்பர கரும ராஜரீக நிலையத்தாரால் வெளியிடப்பெற்ற குறிப்புவாசகம் ஒரு தீர்க்கமானதும் நம்பத் தகுந்ததும் சவிஸ்தாரத்தைக் கூறுகின்றதுமான ஒன்ருகும். முதன்முதல் கடல்கடந்து சென்ற ஒரு சந்திப்பு அக்கபொஸ் அரசனின் மகளாகிய ஷீபாராணி சொலமோன் ராசாவை ஜெருசலேம் நகரில் சந்தித்ததாகும். இதன் பெறுபேருக முதலாவது மெனிலிக் அரசன் பிறந்தான். இவன் கி. மு. 980 வரையில் தனது 25 வருட ஆட்சியை ஆரம்பித்தான்.

இந்த மெனிலிக் என்னும் இளவரசன் 16 வயது அடைந்தவுடன் சொலமோன் ராசாவைச் சந்திப்பதற்குத் தன்னுடைய தாயினுல் அனுப்பப்பட்டானென அத்தேயத்து வர்த்தமான சாதனங்களினுல் அறியக்கிடக்கின்றது. மெனிலிக் தனது தந்தையுடன் சச்சரவுபட்டுச் சண்டை பிடித்ததாகத் தெரிகிறது. இந்தச் சண்டைக்கு ஒரு நல்லநோக்கம் அபிசீனியர்களினுல் காட்டப்படுகிறது. அவைகளின்படி மெனிலிக் தனது தந்தையாகிய சொலமோன் தனது தாயாகிய ஷிபாவைக் கற்புநெறி விலகச்செய்தமைக்கு அவரைத் தண்டிக்கவேண்டுமென்று மெனிலிக் துணிந்ததே காரணமென்பர். இச்சண்டையின் பயனுக மெனிலிக் தன்னுடன் கொஞ்சம் தத்துவம்படைத்த யூதகுருமாரையும் மற்றையோரையும் சேர்த்துக்கொண்டான். இவர்கள் எல்லோரும் சேர்ந்து அங்குள்ள பரிசுத்தபேழையைத் தூக்கிக்கொண்டு அதற்குப் பதிலாக ஜெருசலேம் கோவிலிலே ஒரு போலிப் பேழையை வைத்துவிட்டு அபிசீனியாவுக்குச் சென்றதாகச் சொல்லப்படுகின்றது. சொலமோன் ராசா இந்தக் கபடோபாயத்தை தடுத்துக்கொள்ளமுடியாத காலதாமசம் ஆகியே அறிந்து அதைத் திருடியவர்களைத் தூரந்து ஒரு சேனையை அனுப்பினர். ஆனல் மெனிலிக்கும் அவனுடைய சகாக்களும் சேனைக்ககப்படாமல் எறித்ரீரியாவுக்கு வடமேல் திசையிலுள்ள ஆவா என்றழைக்கப்படும் ஒக்சும் என்னும் இடத்தைப் போயடைந்தனர். அங்கே அபிசீனியர் பெருங் கொண்டாட்டத்துடன் வைகினராம். அந்தப்பரிசுத்தபேழை இப்பொழுதும் அவ்விடத்திலேயே இருப்பதாக நம்பப்படுகிறது.

ஐந்தாம் நூற்றுண்டின் ஒருகாலத்தில் அபிசீனியர்கள் செங்கடலைக் கடந்து யீமன் என்னுமிடத்தில் குடியேறினுர்கள். அவ்விடத்தில் அவர்கள் முகமதியர்களுடன் சச்சரவுபடுவாராயினர். அபிசீனியர் அக்காலத்திலே மிகுந்த வலியுடையராயிருந்தனர். அக்காலத்திலே பேர்சியருடன் போர்செய்வதற்காக ஜஸ்ரினியன் சர்கரவர்த்தி காலீப் அரசனிடம் படைத்துணை கேட்டுநிற்கவேண்டியவனுனன். அப்போது காலீப் அரசன் கிறீஸ்தவப் பேர்வீரர் 120,000 பேரைக்கொண்ட ஒரு சேனையையும் நானூறு யுத்தப் படகுகளையும் கொடுத்து உதவிபுரிந்தானென்று சொல்லப்படுகிறது. ஏறக்குறைய 100 வருடங்கள்வரையில் முகமதியருடைய யுத்த முயற்சிகளையடக்கி யீமன் என்னும் நாட்டைக் கிறீஸ்தவ அபிசீனியர் வெற்றிகொண்டு அடக்கியாண்டுவந்தனர். அக்காலந் தொடக்கம் கடல்கடந்து நாடுபரப்பதை அபிசீனியர் ஒடுக்கி ஆபிரிக்காக் கண்டத்திலேயே தமது முயற்சியைச் செலுத்துவாராயினர்.

அரைவிசரனும் உதிரதாகம்கொண்டவனுமாகிய தீபடோர் சக்கரவர்த்தி சில பிரித்தானிய குடிசனங்களைச் சிறையிலிட அவர்களை மீட்பதற்காக லோட் (அப்போது சேர். றபேட்) நேப்பியர் ஒருசேனையை நடத்திச்சென்று யுத்தம்செய்தனர். இதுவே முதன்முறையாக ஐரோப்பியர் அபிசீனியருடன் சருவின சந்தர்ப்பமாகும். 30,000 போர் வீரர்களைக்கொண்ட பிரித்தானிய சைனியம் தீயடோர் சக்கரவர்த்தியைத் தோற்கடித்தமுறையே முதன்முறையாக அபிசீனியர் பெரும் அபஜயம்அடைந்த முறையாகும். அக்காலத்திலே தீயடோருக்குச் சகாயமாக யாரும் படைத்துணை கொடுக்கவில்லை. ஆனல் சகாவாக வேண்டியவர்கள் பிரித்தானிய பக்கத்திற்றுனும் சிலர் சேர்ந்துகொண்டனர். சமீபகாலத்திலே உலகசரித்திரத்தையே முற்ருக மாற்றிவிடக்கூடிய சம்பவம் ஐரோப்பிய சேனுதிபதிகளின்கீழ் ஒரு எகிப்தியசேனை 1875ம் ஆண்டு படையெடுத்தமையேயாம். இந்தச் சிறு எகிப்திய சேனை நன்கு பயிற்றப்பட்டதாயும். தற்காலத்திய துப்பாக்கி பீரங்கி முதலியன பொருந்தப்பெற்றதாயும் இருந்தது. அபிசீனியர் யோவான் அரசனுக்குக்கீழ் அச் சைனியத்தை முட்டிப் பின்பு தங்களுக்கு வழக்கமான தந்திரோபாயப்படி குதிரைப் படையினுல் எகிப்தியரைச்சுற்றிவளைந்து அந்தச் சைனியத்தை நிர்மூலப்படுத்திவிட்டனர். அவரில் ஒரு அற்ப தொகையினர் தம் கஷ்ட நிஷ்டூரங்களைச் சொல்வதற்கு மசோவா என்னும் இடத்துக்குத் தப்பியோடினர்.

தற்காலத்து அபிசீனிய சரித்திரத்தில் கீர்த்திவாய்ந்த இரண்டாவது மெனிலிக் அரசன் ஆதிக்கம் பெற்றமை ஒருநல்லசந்தர்ப்பமாகும். அவருடைய 24 வருடம் (1889—1913) ஆட்சியில் தனது ஆபிரிக்க இராச்சியத்தைப் பெரிதும் விரியப்பண்ணினர். ஆனல் 1896-ல் எடித்றீறியா எல்லைக்கப்பால் அடோவா என்னும் இடத்தில் இற்றுலிய சைனியத்தைத் தும்சம்பண்ணியதே அவருடைய பெரிய செயற்கரும் செயலாகும். அப்பொழுது 14,000 போர்வீரரையுடைய இற்றுலிய சைனியத்தில் 4,000 பேரே தப்பிப் பிழைத்தனர்.

அபிசீனியாவிலே ஒரேயொரு புகைரதப்பாதையைச் சமைக்கும் உரித்தை பிரான்சுக்காரருக்கு அளித்தவர் மெனிலிக் சக்கரவர்த்தியாவர். பிரித்தானிய அரசினருடன் 1902-ம் ஆண்டு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டவரும் இச்சக்கரவர்த்தியேயாம். இதன்படி பிரித்தானியருடைய சம்மதமின்றி சவாவியில் அல்லது சோபாற்றில் அல்லது நீல நைல்நதியில் எவ்விதமான பகிரங்கவேலையும் செய்யக்கூடாது. இந்த நீல நைல்நதியின் நீர்வளத்திலேயே சூடான்நாட்டினதும் எகிப்து நாட்டினதும் நிலவளம் தங்கியிருக்கின்றது. இந்த உடன்படிக்கைப்படியே பிரித்தானியர் இப்பொழுது அந்த நீர் பிரித்தானியாவுக்கு ஜீவாதாரமாயுள்ளதென முசோலினிக்குத் தெரிவித்தனர்.

தரைப்பாகத்தளவில் அபிசீனியாவில் பிரித்தானியருக்கே அதிகம் நயம் உண்டு. ஏனெனில் தேசசம்பந்த சங்கத்தின் அறிக்கைப்படி அபிசீனியாவின் எல்லைகளில் ⅔ பாகம் பிரித்தானிய ஆட்சி நிலத்தின் எல்லையுடன் பொருந்தியிருக்கின்றது. மேலும் பிரித்தானிய நிலத்தில் பொருளாதார முற்போக்கு இத்தாலி பிரான்ஸ் ஆகிய இருநாட்டிற்கும் உரியனவற்றிலும் பார்க்க மிக ஏறுபடியாயுள்ளது. கெனியா நாட்டின் வியாபாரப் பிரமாணம் சூடான்நாட்டிற் குரியதிலும் பார்க்க 90,00000 பவுண் அதிகமாகவும் உக்கண்டா நாட்டிற்குரியதிலும் பார்க்க 1,0000000 பவுண் அதிகமாகவும் சோமாலிலான்ட்நாட்டிலும் பார்க்க 4,60,000 பவுண் அதிகமாகவும் மொத்தம் 2,20,00000 பவுண் அதிகமாகவும் இருக்கின்றது. இதைப் பிரான்சியருடைய 300,0000000 பிறங் பெறுமதியுள்ள வியாபாரத்துடனும் இற்றுலியருடைய 450,0000000 லீரு பெறுமதியான வியாபாரத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஆனல் அபிசீனியா 20,00000 பவுண் பெறுமதியான வியாபாரத்தையுடையதாகப் பின்னணியில் நிற்கின்றது. பிரித்தானியருக்குச் சேர்ந்த நான்கு நாடுகளிலும் சோமாலிலான்ட் நாடு அதற்கடுத்திருக்கும் பிரான்சிய இத்தாலிய நாடுகளுக்கு நெருங்கிய சமத்துவப்பட்ட கீழ் நிலமுள்ள நாடாகும். இந்த நாடுகளின் பொருளாதாரவளம் ஏறக்குறைய ஒரேதன்மையுடையனவாயிருக்கும்—தோல்கள், தந்தம், வித்தியாசமான குணங்களுடைய கோப்பி இன்னும் சில ஏலாதிகள். இதுவரையில் கண்டெடுக்கப்படாத உலோகவகைகள் செறிந்த நிலப்பரப்புக்கள் அபிசீனியாவில் இன்றுமிருக்கின்றன. அது வருடாவருடம் 2,00000 கிறும்ஸ் நிறையுள்ள பிளற்றினம் என்னும் உலோகத்தைக் கொடுக்கின்றது. இது உலகம் முழுவதிலும் பெறக்கூடிய இந்த உலோக நிறைக்கு 100-க்கு 3 வீதமானது. ஆனல் இந்த நாடுகளின் அந்தர்க்கதமான வளப்பெருமையே இற்றுலியரை இப்பொழுது இழுக்கின்றது. எறித்றீறியா, சோமாலிலான்ட், அபிசீனியா ஆகிய இடங்கள் எல்லாம் பெருந்தொகையான பருத்தியை அபரிமிதமாகக் கொடுக்கக்கூடியனவாய் இருக்கின்றன. யூக்கண்டாவும் சூடானும் ஒருமிதது 50,00000 பவுண் பெறுமதியான பருத்தியைக் கொடுக்கக்கூடியதாயிருக்க இற்றுலிக்குச் சேர்ந்த வடகீழ் ஆபிரிக்கா அவ்வளவுதொகையையே கொடுக்கின்றதெனக் கூறலாம். நீர்ப்பாய்ச்சும் வசதி இருப்பினன்றோ இது கைகூடும்.

இப்பொழுது இற்றுலிக்கும் அபிசீனியாவுக்கும் இடையிலுள்ள குழப்பத்தைச் சர்வதேச சங்கத்தின் சமாதானச் சிறு கூட்டத்தாரிடம் விசாரணைக்கு விடப்பட்டிருக்கின்றது. இது சந்தர்ப்பத்தில் இருவிஷயங்கள் எம் மனதில் பதியவேண்டும். முதலாவது இவ்விரு நாடுகளுக்கும் எதிராக எவ்விதமான போர்முனைப்பும் இதுவரையில் நடைபெற்றதாக ருசுப்படுத்தப்படவில்லை. இரண்டாவது—துற்சகுணமான—சிஞ்ஞோர் முசோலினி, இச்சமாதானச் சிறு சங்கம் நிறுவப்பட்டபின், அபிசீனியாவுக்கு எதிராக புதிய குற்றச்சாட்டுகளையும் கொண்டு வருகிருர். சோமாலிலான்ட் என்னுமிடத்திற்குத் தெற்கே வால்—வால் என்னும் இடத்திலுள்ள சில கிணறுகளைப்பற்றியே தொடக்கத்தில் தகராறு ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனல் ஒவ்வொரு படங்களிலும் இந்த வால்—வால் என்னும் இடம் அபிசீனிய நாட்டிற்குள் எல்லையிலிருந்து 60 மைலுக்கப்பால் இருக்கின்றதாகக் காட்டுகிறது. இந்த அறிக்கையைவிட அந்த இடத்தில் விஷயங்களை நன்கு அவதானித்தவர்கள் எல்லோரும் இற்றுலியரே வம்புச்சண்டை வலிய இழுக்கின்றனர் என்கின்றனர். வால்—வால் என்னும் இடம் சோமாலிலான்டுக்கு மேற்கே தெற்குப்பக்கமாக வெகுதூரம் உள்ளேயிருக்கின்றது.

கிணறுகளைப்பற்றிய குற்றச்சாட்டுகளைத்தொடர்ந்து எறித்றீறியா எல்லைப்புறச் சம்பவங்களைப் பற்றியும் இற்றுலி குற்றம் பாரிக்கின்றது. இந்த இடம் சோமலிலாண்டிலிருந்து 1000 மைலுக்கப்பாலுள்ளது. ஏதோ சில நியாயம்பற்றி இந்த இரண்டாவது குற்றங்கள் இற்றுலியினுல் ஊன்றி வற்புறுத்தப்படாது விடப்பட்டன, இற்றைக்குச் சிலவாரங்கட்கு முன் எந்தச் சமாதான மத்தியஸ்தர்களாலும் தீர்ப்புக்கூறமுடியாத புதிய விவாதம் உண்டுபட்டது. அபிசீனியா சீர்திருத்தம்பெற்ற நாடுகளில் ஒன்ருக மதிக்கப்படக்கூடியதாயில்லை. ஆதலினுல் சர்வதேசசங்கத்தில் அங்கத்துவம் வகிக்க யோக்கியதையற்றதென்றும் இரண்டாவதாக அந்நாடு சமாதான உடன்படிக்கைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்றும் இரு குற்றங்கள் பாரிக்கப்படுகின்றன. இந்த நியாயம்பற்றி அபிசீனியா சர்வதேசசங்கத்தினுல் பாதுகாக்கப்படக் கூடியதல்லவென்பது சிஞ்ஞோர் முசோலினியின் கட்சியாகும். ஆகவே அபிசீனியா அதன்மேல் பாரிக்கப்படும் குற்றங்கள் எதற்கும் தான் குற்றவாளியல்லவென்று அத்தாட்சிப்படுத்தினுலும், சர்வதேசசங்கத்தில் அங்கத்துவம் வகித்தற்கு மூலதடையொன்று ஏற்படுகிறது. இந்த நியாயங்களைக்கொண்டு அபிசீனியா வைத்தள்ளிவைப்பதற்குக் காரணங்கள்; முதலாவதாக அடிமைவியாபாரத்தை அந்நாடு தடைசெய்துகொள்ளவும்; சக்கிரவர்த்திக்குக் கீழுள்ள குறுநிலத் தலைவர்களை மத்தியஅரசாட்சி அடக்கியாளமுடியா திருப்பதுமே யெனக் கூறப்படுகின்றது.

சிஞ்ஞோர் முசோலினி தனது உத்தேச நோக்கங்களை மறைபொருள்களாக வைக்கவில்லை. அவைகள் மூன்று பிரிவுகளைக்கொண்டன. 1—வடக்கே எறித்றிறியாவிலிருந்து தெற்கே சோமலிலாண்ட் வரையில் அபிசீனிய நாட்டிற்கூடாக ஒரு பிரதான புகைரதப் பாதையும் அதன் கிளைப் பாதைகளையும் செய்துகொள்வதற்கு உரிமைபெறுதல்—இத்தப்பாதை 1500

(தொடர்ச்சி அடுத்தபக்கம் பார்க்க.)

ஒருவன் காலத்திற்செய்த வுதவி சிறிதாயினும், அது உலகினும் பெரிது.

## அபிசீனியாவும் மற்றைய சாதியாரும்

(முன்பக்கத் தொடர்ச்சி)

மைல் நீளமுடையதாகும். 2. குறித்த புகைரதப் பாதைக்கு மேற்கேயுள்ள அபிசீனியநாட்டின் பாகத்தில் வியாபாரச் சுதந்தர உரிமை இற்றாலிக்கிருத்தல். இந்தச்சுதந்தரம் நடைபெறும் எல்லை வடக்கேயும் தெற்கேயும் சூடான்நாட்டையும், தெற்கேயும் தென்மேற்கேயும் கெனியா உக்கண்டாவையும் எல்லையாகக்கொண்ட நாடு. 3. நீலநதி, பொனுவாவியின் தண்ணீர்ப்பங்கும் அவ்விடத்தில் வேண்டிய அணைகளைக்கட்டிக்கொள்ளும் உரித்துமாம். இந்தச் சகாயங்கள் யாவும் வெற்றியினால்தான் பெறமுடியும்.

அபிசீனியா, சமாதான உடன்படிக்கைகளாற் பாதுகாக்கப்பட்டிருப்பதுபோல் உலகத்தில் மிகச் சிலநாடுகளே காக்கப்பட்டுள்ளன. உண்மையில், மிகவும் விசேஷித்த நிபந்தனைகளை மீறினாலன்றி மற்ற வல்லரசுகள் எதுவாயினும் அபிசீனியாவை முற்றுகையிட முடியாது. 1906-ம் ஆண்டிலே பிரித்தானியா, பிரான்சு, இற்றாலி ஆகிய மூன்று அரசுகளும் ஒருமித்து ஒரு சமாதான உடன்படிக்கைக்குக் கையொப்பமிட்டிருக்கின்றன. இத்தால் இம் மூவரசுகளும் ஒருமித்தும் தனித்தும் அபிசீனியாவின் சுதந்திரத்தையும் தனியரசுரிமையையும் பாதுகாத்து நிலைபெறச்செய்யக் கட்டுப்பட்டிருக்கின்றனர். மேலும் சர்வதேசசங்கத்தின் நியமசாசனத்தின்படி அதற்குக் கைச்சாத்திட்ட ஒவ்வொரு அரசும் (இதற்கு இற்றாலியும் அபிசீனியாவும் கைச்சாத்திட்டிருக்கின்றன) மற்றைய அரசுகளின் நாட்டெல்லைப் பாதுகாப்பைப் பற்றியும், அவர்கட்கிடையில் யாதேனும் விவாதம் ஏற்படுவதானால், சர்வதேசசங்கத்துக்கு அதைச் சமர்ப்பித்து அவர்களின் தீர்ப்பை அநுசரியாது ஒருவர்மீது ஒருவர் படையெடுப்பதில்லையென்பதுபற்றியும் பயபக்தியான உறுதிமொழிக் கமைந்திருக்கின்றனர். மேலே கூறப்பட்டமை மாத்திரமே பாதுகாப்புகள் அல்ல. இப்போதுள்ள நிலைமைக்கு நன்கு பொருத்தமான இன்னொன்றுண்டு. 1928-ம் ஆண்டிலே அபிசீனியாவும் இத்தாலியும் செய்துகொண்டு ஒப்பம்வைத்த உடன்படிக்கையின் 5-ம் பிரிவு, கீழே காணப்படும்வகை கூறும்:—"இருஅரசினரும் தங்கட்கிடையில் எழும்பிணக்குகளை மத்தியஸ்தர்கட்குச் சமர்ப்பித்து சமாதானமாய் ஒழுங்குபண்ணிக்கொள்ளவும், ஆயுதபாணிகளாகப் போர்தொடுக்காமலும் இருப்போம்"

ஆகவே அபிசீனியச் சக்கரவர்த்தியும் இத்தாலியின் சர்வாதிகாரியும் தங்கட்கிடையிலுள்ள பிணக்குகளைச் சமாதானமாக மத்தியஸ்தர் முன்னிலையிற் தீர்த்துக்கொள்வதற்கு மும்மடங்கு கட்டுப்பட்டிருக்கின்றனர்.

இப்பிணக்கு முழுவதும் சர்வதேச சங்கத்தாரின் தீர்மானத்திற்கு விடப்படல் வேண்டுமென்பதே பிரிட்டிஷாரின் நிலையாகும். இதேகொள்கையை பிரான்சிய அரசு கொண்டிருக்கின்றது நற்சகுனமாகும். பிரித்தானியாவின் நிலையையும் நோக்கத்தையும் சேர். ஆஸ்ரின்சம்பர்லேன், மிஸ்டர் அந்தோனி ஈடின், சேர். சாமுவேல் ஹோர் ஆகிய பிரித்தானிய இராசதந்திரிகள் வெளியாகக் கூறியிருக்கின்றனர்.

மேலே கூறப்பட்டவைகளால் வாசகர்கள் ஒருவாறு இப்போது நடக்கும் யுத்தத்தின் நியாய அநியாயங்களையும் இந்தயுத்தத்தில்மற்றைய வல்லரசுகள்செய்த அல்லது செய்யும்வேலைகளின் கிரம அக்கிரமங்களையும் இற்றாலி நாட்டின் சர்வாதிகாரியின் நீதியீனமான வல்லடிவழக்கையும் யுத்தாயத்தத்தையும்இரத்தவிடாயையும் ஒருவாறு உணரலாகும்.

# உரிமை மசோதா வந்த வரலாறும் போன போக்கும்.

## அரசாங்கசபையில் ருசிகரமான விவாதம்.

(நமது கோழும்பு நிருபர்)

கொழும்பு, அக். 10

அரசாங்கசபை அங்கத்தினரின் விசேஷ உரிமைகள் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் மசோதாவைப் பற்றிய சில ருசிகரமான விபரங்கள் இப்பொழுது தெரியவந்திருக்கின்றன. சென்ற செவ்வாய்க்கிழமை அரசாங்கசபையில் டாக்டர் வீ. ஆர். ஷொக்மன் (பறங்கிச் சமுக நியமன அங்கத்தவர்) கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சபைத்தலைவர் திரு. ஒபயசேகரா மசோதாவின் பூர்வசரித்திரத்தை எடுத்துக்கூறினார். அவர் கூறியதன் சாராம்சம் வருமாறு:—பழைய சபைத் தலைவர் திரு. மொலமொறே அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருந்தபடி அங்கத்தினர்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் விளக்கி ஒரு சட்டம் இயற்றுவதன் அவசியத்தை மந்திரசபைக்குக் கடிதமூலமாகத்தெரிவித்தார். இது 1932 ஆகஸ்டு மாதத்தில் நடந்தது. இவ்விஷயத்தைக் கவனித்துத் தங்களுக்கு ஆலோசனை கூறும்படி மந்திரிசபையினர் அற்றோணி ஜெனறலைக் கேட்டுக்கொண்டனர். பின்னர் 1933 பிப்ரவரியில் அங்கத்தினர்களின் உரிமைகளை விளக்கும் ஒரு மசோதா வேண்டுமெனத் திரு. ஜீ. கே. டப்ளியூ பெரேரா கொண்டுவந்த ஒரு பிரேரணை அரசாங்கசபையில் நிறைவேறியது. இப்பிரேரணைகளையும் அற்றோணி ஜெனறலின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டது. இதன் பலனாக ஒரு மசோதா அற்றோணி ஜெனறலுக்குக் கீழ் உள்ள மசோதா தயாரிக்கும் உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டது. இம்மசோதா விஷயமாக மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமா என்று அரசாங்கசபை எழுத்தாளர் (Clerk of the Council) சபைத் தலைவரை (திரு மொலமொறேயை) 1934 ஜனவரியில் கேட்டபொழுது அவர் "இப்பொழுது எதுவுஞ் செய்ய வேண்டியதில்லை" என்று தெரிவித்தார்.

1935-ம்ஆண்டு ஜெனவரியில், சபை எழுத்தாளர், மசோதாவின் வரலாற்றைப புதிய தலைவருக்கு (திரு. ஒபயசேகராவுக்கு)த் தெரிவித்துச் சபையின் ஆயுட்காலம் முடியுமுன் மசோதாவை நிறைவேற்றி வைத்தால் நலமாயிருக்குமென்று யோசனை கூறினார். பின்னர் மசோதா விஷயமாகத் தலைவரும் அற்றோணி-ஜெனராலும் கலந்தாலோசித்தனர். இதன் பின்பு, அரசாங்கசபையின் நிரந்தர விதிக் கமிட்டி மூன்றுமுறை கூடி மசோதாவைப் பரிசீலனை செய்தது. முதற்கூட்டத்தில் திரு. ஒபயசேகரா (தலைவர்) திரு. ஈ. டபிள்யூ. பெரேரா, திரு. எம். எம். சுப்பிரமணியம் என்ற மூவரும், இரண்டாவது கூட்டத்தில் திரு. ஒபயசேகரா (தலைவர்) சேர். எட்வேர்ட் ஜாக்ஸன் (அற்றோணி-ஜெனரல்) திரு. எம். எம். சுப்பிரமணியம், திரு. ஈ. டபிள்யு. பெரேரா திரு. மேர்வின் பொன்சேக்கா (சட்டம் தயாரிக்கும் உத்தியோகத்தர்) என்ற ஐவரும், மூன்றாவது கூட்டத்தில் இந்த ஐவருடன் சேர். ஸ்ருபர்ட் ஸ்னெய்டர், திரு ஸ்ருயார்ட்-ஸிமித் என்ற இன்னும் இருவரும் பிரசன்னமாயிருந்தனர். இக்கமிட்டியின் சிபார்சின் பேரில் மசோதா பின்னர் அரசாங்கசபையில் பதில் அற்றோணி-ஜெனரலால் முதன்முறையாகப் பிரேரிக்கப்பட்டது.

சபைத்தலைவர் பேசியபின், திரு. ஈ. டபிள்யு. பெரேராவும் பதில் அற்றோணி-ஜெனரலான திரு. இலங்கைக்கோனும் சில குறிப்புரைகள் கூறினார்கள். இவர்கள் கூறியதிலிருந்து மசோதாவை முதலில் இங்கிலாந்திலுள்ள பாராளுமன்ற அதிகாரிகளுக்கும் குடியேற்றநாட்டு மந்திரிக்கும் அனுப்பி அவர்களுடைய ஆலோசனையைக் கேட்கவேண்டுமென அற்றோணி-ஜெனரல் சிபார்சு செய்திருந்தனர் என்றும் அவருடைய சிபார்சின்படி அது அவர்களுக்கு, அனுப்பப்பட்டிருப்பது உண்மையானபோதிலும் அவர்களுடைய ஆலோசனை கிடைக்கு முன்பே அது அரசாங்கசபையின் ஆலோசனைக்கு அவசரம் அவசரமாக வந்துவிட்டதென்றுந் தெரிகிறது.

மேலேயுள்ள விபரங்களிலிருந்து மசோதாவின் முழுவிபரம் அரசாங்கசபையிலுள்ள பெரும்பாலான அங்கத்தினருக்குச் சமீபகாலம்வரை தெரியாமலிருந்ததென அறியக்கிடக்கிறது. மேலும் பழைய சபைத்தலைவரும் தற்பொழுது லீவில் இங்கிலாந்து சென்றிருக்கிற அற்றோணி-ஜெனராலும் மசோதாவை அதன் தற்போதைய ரூபத்தில் அரசாங்கசபைக்குச் சமர்ப்பிக்கத் தயங்கினர் என்றும் அதிலுள்ள ஆட்சேபகரமான அம்சங்களை அவர்கள் உணர்ந்திருந்ததே அதற்குக் காரணமாயிருக்கலாமென்னுந் தெரியவருகிறது.

ஷை மசோதா சபையின் விஷய அட்டவணையின்படி, நேற்றைய கூட்டத்தில் இரண்டாம்முறையாகப் பிரேரிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அது அவ்வாறு பிரேரிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று தலவாக்கலைப் பிரதிநிதி திரு. எஸ். பீ. வைத்திலிங்கம் நேற்றுக் கேட்டபொழுது சேர். டீ. பீ. ஜெயத்திலகா, மசோதாவுக்குப் பலமான எதிர்ப்பு நாட்டிலிருந்து வருகிறபடியால் அதை மந்திரிசபையினர் முதலில் பரிசீலனை செய்ய விரும்புவதாகவும் அதுகாரணமாகத்தான அன்றையக் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லையென்றும் பதிலளித்தார்.

இத்துடன் உரிமை மசோதா இறந்துவிட்டதென்றே நம்பப்படுகிறது.

---

### குவெற்றாவில் பூகம்பம்.

அக்டோபர் 4ந்தேதி பகல் பூகம்ப அதிர்ச்சி சற்று ஏற்பட்டதால் திடீரென குவெற்றா ஆர்சனல் (ராணுவ) கட்டிடத்தின் பழைய சுவர் ஒன்று கீழே விழுந்துவிட்டது. அதனடியில் 6பேர் அகப்பட்டுக்கொண்டனர். அவர்களில் நால்வர் உயிர்துறந்தனர். இருவர் காயமடைந்தனர்.

### அமெரிக்காவில் விமான விபத்து

கலிபோர்ணியாவிலிருந்து நியூயார்க்குக்குப் பறந்துகொண்டிருந்த ஒரு மெயில் விமானம் செய்யன் நகரிற்கு 15 மைல் தூரத்தில் சேதமடைந்தது. 9 பிரயாணிகளுடன் 12 பேர்கள் இதனால் மரணமடைந்தனர்.

## பிரஞ்சுக்காரரின் தற்பாதுகாப்பு ஏற்பாடுகள்.

### பூமிக்குள் அதிசயக்கோட்டைகள்.

அடுத்த யுத்தத்தை எதிர்நோக்கிப் பிரான்சுக்காரர் இப்பொழுதே தற்பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றார்கள். விசேஷமாக ரைன்லண்டு பிரதேசத்தின் எல்லைப்புறத்துள் பூமிக்குள் அற்புதமான ரகசியக்கோட்டைகளைக் கட்டியிருக்கிறார்கள். சுமார் 300 மைல் நீளத்தில் உருக்கு இரும்பாற் செய்த கோட்டைகளையும் வேலிகளையும் அமைத்திருக்கிறார்கள். இந்தக்கோட்டைகளுக்குள் சென்ற எதிரிகள் திரும்புவது அபூர்வம் ஆகவே அவைகளை "மரணக்கோட்டைகள்" என பிரான்சு ராணுவ உத்தியோகஸ்தர்கள் பெயரிட்டிருக்கின்றார்கள். மேற்கூறிய வேலிகளையும் கோட்டைகளையும் எந்த எதிரிகளும் கடந்து வாமுடியாது. இந்தக்கோட்டைகளை அவ்வளவு தந்திரமாக அமைத்திருக்கிறார்கள்.

### ஆபத்தான கோட்டைகள்.

பூமிக்குள் பல ஆபத்தான கோட்டைகளைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக்கோட்டைகள் நினைத்தமாத்திரத்தில் திடீரென வெளிவரும். கோட்டைகளினுள் அபூர்வமான யுத்த தளவாடங்களை வைத்திருக்கிறார்கள். இயந்திர பீரங்கிகள் தயாராக இருக்கின்றன. இந்தப் பீரங்கிகளைப் பார்க்கவேமுடியாது. அவசியமானால் ஒரு சிறு பொத்தானை அழுத்தினால்போதும். பீரங்கிகள் மாயமாக வெளியில்வந்து சுடுவதற்குத் தயாராக இருக்கும். வேறு சில ரகசியக் கோட்டைகளில் நீராவிகள் மின்சாரசக்தி ஏற்பாடுகள் தயாராக இருந்துகொண்டிருக்கின்றன. சகல கோட்டைகளையும் மின்சாரசக்தியால் பிணைத்திருக்கிறார்கள். 300 மைல் தூரமுள்ள கோட்டைகளையும் நினைத்தமாத்திரத்தில் யுத்தத்திற்குத் தயாராக்கிவிடலாம். இந்தக் கோட்டைகளையும் வேலிகளையும் அமைத்த ரசாயன நிபுணர்களும், ராணுவ அதிகாரிகளும் கூறுவதிலிருந்து வேறு எந்தத்தேசத்தினரும், இந்தக் கோட்டைகளைத் தாண்டி பிரான்சுக்குள் நுழையமுடியாதென்று தெரிகிறது. எதிரிகளின் விமானப்படைகள்கூட இந்த எல்லைப்புறத்தைத் தாண்டிவா முடியாது. ஏனெனில் சகல விமானங்களையும் சுட்டு வீழ்த்தத்தக்க பீரங்கிகளையும் இதர ஏற்பாடுகளையும் தயாராக வைத்திருக்கின்றனர்.

---

ஆடவன்: கண்ணே நான் உன்னைப் பார்க்கப் பன்னூற்றாண்டுகளாகக் காத்திருந்தேனே.

பெண்: உன் கருத்து நான் வயது சென்றவள் என்பதா?

---

### பூமிக்குள் அதிசயம்.

பூமிக்குள் இருக்கும் இந்த அபூர்வக் கோட்டைகளில் மெட்ஜ் என்னுமிடத்திலுள்ள கோட்டையே அதிக அதிசயமானது. இங்கு ஹாக்கன்பர்க் முறைகளைக் கைக்கொண்டு அற்புதமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இது பெரிய கோட்டை. ஆனால் இதை பூமிக்கு வெளியில் காணமுடியாது. இந்தக் கோட்டைக்குள் ஒரு பெரிய ராணுவத்தை தயாராக வைத்துக்கொண்டிருக்க முடியும். பெரிய யுத்த பீரங்கிகள், வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், பல மாதங்களுக்கு வேண்டிய உணவு பொருள்களையும் இந்தக் கோட்டைக்குள் வைத்துக்கொள்ள வசதியிருக்கிறது. அருகிலுள்ள மலைப்பிரதேசங்களுக்குச் செல்ல ரகசிய வழிகளும் இருக்கின்றன. இவ்வளவு பெரிய கோட்டை எந்த இடத்திலிருக்கிறதென்பதைக்கூட எவராலும் அறிந்துகொள்ள முடியாமலிருப்பது மற்றொரு அதிசயமாகும். மேட்ஜ் கோட்டைக்கு இணையாக மற்றொரு அதிசயமான கோட்டையும் காணப்படுகிறது. உலகில் இதுவரையில் கேள்விப்படாத அபூர்வ ஏற்பாடுகளை இந்தக் கோட்டையிலும் செய்திருக்கிறார்கள். கோட்டையின் கீழுள்ள ரகசிய ஏற்பாடுகள் என்னவென்பது எவருக்கும் தெரியாது. அவ்வளவு பரம ரகசியமாகப் பாதுகாத்து வருகின்றனர்.

---

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி, னன்மை கடலிற் பெரிது.

# அரசாங்க சபையின் வால்!... அனுமான் வால்!

## இரண்டாம் முறையும் ஆயுள் விருத்தியா?

### திரு. கொறியாவின் சீர்திருத்த மசோதா—I

பூதல்வரிக்குக் கவர்னரின் எதிர்ப்பு — மன்னர் பிரானிடம் அனுமதி

(நமது கொழும்பு நிருபர்)

கொழும்பு, அக். 11

தற்போதைய அரசாங்கசபையின் ஆயுட்காலம் நவம்பரில் முடிவுபெறுமென்றும் டிசம்பரில் அபேட்சகர் நியமனமும் ஜனவரியில் பொதுத்தேர்தலும நடைபெறுமென்றும் பொதுசனங்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் இவ்வேற்பாட்டின்படி விஷயங்கள் நடைபெறமாட்டாவென இப்பொழுது தெரியவருகிறது.

பதில் அற்றேணி—ஜெனறலாகக் கடமை பார்த்துவரும் திரு. J. W. R. இலங்கைக்கோன், நேற்று அரசாங்க சபையில் பேசுகையில், வாக்காளர் டாப்புகளைப் பூர்த்தி செய்ததில் சில புதிய கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும் அவ்வேலை ஜனவரி முதற்பகுதியில்தான் முடிவு பெறுமென்றும் அதன்பின்புதான் அபேட்சகர் நியமனத்துக்கு ஏற்பாடு செய்ய முடியுமென்றும் தெரிவித்தார்.

திரு. G. G. பொன்னம்பலம் கொணடுவந்த பிரேரணையே இச்செய்தியைவெளியிடுவதற்கு அற்றேணி—ஜெனறலுக்குச் சந்தர்ப்பமளிததது.

அரசாங்கசபையின் ஆயுட்கால முடிவுக்கும் பொதுத்தேர்தலுக்கும் இடையிலுள்ள காலம் கூடிய அளவுக்குக் குறைந்ததாக இருக்கவேண்டுமென்பதும், அது எப்படியென்றாலும் இரண்டு மாதத்துக்கு மேற்படக்கூடாதென்பதுமே திரு. பொன்னம்பலத்தின் பிரேரணை.

முன்னறிக்கையின்றிச் சடுதியாக அவர் இதைக் கொண்டுவந்தபடியால் சபையின் விசேஷ அனுமதியைப் பெற்றபின்பே இதை அவர் பிரேரிக்கக் கூடியதாகவிருந்தது.

குறித்த இடைக்காலத்தில் மந்திரிகள், நிர்வாகசபைகளின் உதவியின்றித் தங்கள் சொந்தப் பொறுப்பில் அரசாங்கத்தை நடாத்தி வருவார்களென்றும் அதிக காலம் அவர்களை அவ்வாறு செய்துவர விடுவது பொதுசன அபிப்பிராயத்துக்கு உடன்பாடாக இருக்கமாட்டாதென்றும், மேலும் பிறிட்டிஷ் அரசாங்கத்தினர் இத்தாலிய—அபிசீனிய யுத்தத்தில் தலையிடும் பட்சத்தில் "ஏழை" இலங்கை அரசாங்கசபையைக்கூடக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படலாமென்றும் திரு. பொன்னம்பலம் கூறினர்.

சிறிது விவாதத்தின்பின் இவருடைய பிரேரணை எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேறியது.

இப்பிரேரணை, அரசாங்கசபையின் சிபார்சு. இதைத் தேசாதிபதி ஏற்றுக்கொள்ளலாம், அல்லது நிராகரித்துவிடலாம். அரசாங்கசபையைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்தும் பொறுப்பும் அதிகாரமும் அரசியல் சட்டத்தின் கீழ் தேசாதிபதிக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருக்கிறது.

அற்றேணி—ஜெனறல் கூறியதைப் பார்க்குமிடத்துப் பொதுத் தேர்தல் அனேகமாகப் பிப்ரவரியில்தான் நடைபெறும்போலிருக்கிறது. அப்படியானல், திரு. பொன்னம்பலத்தின் பிரேரணை அங்கீகரிக்கப்படும் பட்சத்தில், அரசாங்கசபை டிசம்பரில்தான் கலைக்கப்படும்.

அரசாங்கசபையின் ஆயுட்காலத்தை இவ்வாறு இரண்டாம்முறையாக நீடிப்பதைப் பொதுசனங்கள் விரும்பமாட்டார்களென்பது நிச்சயம். ஆனல் இப்படிச் செய்யாமல் நவம்பரிலேயே சபையைக் கலைத்துவிட்டால் மூன்றுமாத காலத்துக்கு மந்திரிகள் தங்கள் சொந்தப்பொறுப்பில் நிர்வாகத்தை நடத்தவேண்டி வரும். அற்றேணி—ஜெனறல் பகுதியைச் சேர்ந்தவர்கள்மட்டும் துரிதமாக வாக்காளர் டாப்புக்களைப் பூர்த்தி செய்வார்களானல் இந்தக் கஷ்டங்கள் ஒன்றும் ஏற்படமாட்டாது.

திரு. ஜீ. ஸீ. எஸ். கொரியா அவர்களின் அரசியல் சீர்திருத்த மசோதா நேற்று அரசாங்கசபையில் முதன்முறையாக நிறைவேறியது. அரசியல் சீர்திருத்த விஷயமாக அரசாங்கசபை அங்கத்தினருக்குள்ள முடிவான அபிப்பிராயத்தைவெளிப்படுத்துவதைத் தவிர வேறொரு பலனும் இம்மசோதாவால் ஏற்படாதென்பது நிச்சயம். திரு. கொரியாவும் இதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டிருக்கிறார். அரசாங்க சபையின் அபிப்பிராயம் ஏகமனதாக இருக்குமானல் அதுவே அரசியல் சீர்திருத்த இபக்கத்திற்கு ஒரு பெரிய வெற்றியாயிருக்கும். ஆனல் அப்படிச் சம்பவிக்கும் என்று எண்ணுவதற்கு இப்பொழுது எவ்வித அறிகுறிகளும் காணப்படவில்லை.

மசோதா இரண்டாம் முறையாகப் பிரேரிக்கப்படும்பொழுது, சிறுபான்மை வகுப்பு அங்கத்தினர்கள் முன்னர் மந்திரிகளின் சீர்திருத்தச் சிபார்சுகள் விஷயத்தில் நடந்துகொண்டதுபோல் இதற்கு மாறாக வாக்குக் கொடுக்கக்கூடும். யாழ்ப்பாணப் பிரதிநிதிகளின் வருகையால்சிறுபான்மை வகுப்புக் கோஷ்டியினரின் வாக்குப்பலமும் இப்பொழுது அதிகரிக்கிறது.

இந்நிலைமையில் சிங்களத் தலைவர்கள், மற்றைய வகுப்புத்தலைவர்களுடன் கலந்தாலோசித்து ஒரு சமாச ஏற்பாட்டுக்குவந்தால் நலமாயிருக்கும்.

வரவு செலவுத்திட்ட விஷயமாக ஏற்பட்ட தகராறுகள் சம்பந்தமாகப் பதில் தேசாதிபதி தமது அதிகாரத்தை உபயோகிக்கத் துவங்கிவிட்டார்.

முதலாவதாகப் பூதல்வரி நீக்க மசோதாவுக்குத் தமது அங்கீகாரத்தை அளிக்க மறுத்து அதை மன்னர் பிரானின் சமூகத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார். வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது, பதில் பொக்கிஷக்காரியதரிசி, அரசாங்கத்தின் பணநிலைமை முன்னர் இருந்ததைக் காட்டிலும் சீர்ப்பட்டுவிட்ட போதிலும் இன்னும் திருப்தி கரமானதாயிருக்கவில்லையென்றும் இந்நிலைமையில் அதிகவருவாயை அளித்துவரும் பூதல்வரியை எடுத்துவிடுவது தமக்குஉசிதமாகத் தோன்றவில்லையென்றும் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக விதவை அனாதைப் பிள்ளைகளின் உபகாரச் சம்பளநிதி விஷயத்தில் அரசாங்க சபைத் தலைவர் செய்த தீர்ப்பில் பதில் தேசாதிபதி அதிருப்தியுற்று அது விஷயத்தைப்பற்றிக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு விண்ணப்பித்திருக்கிறாரென்றுந் தெரியவருகிறது.

## சுற்றுடல்.

—"வாரந்தன்."

யுத்தம் தொடங்கிவிட்டது. எங்கும் ஆரவாரமாகவேயிருக்கிறது. இத்தாலியைச் சட்டத்துக்கடங்காத தேசமெனக் கூறிச் சர்வதேசசங்கம் நாகரீகமடைந்த சாகியத்தார் சபையினின்றும் நீக்கிவிட்டது. சங்கத்தில் சேர்ந்த தேசங்கள் வியாபார விஷயமாகவோ, பணவிஷயமாகவோ இத்தாலிக்கு ஒருதவியுஞ் செய்வதில்லையெனத் தீர்மானித்துவிட்டன. ஆயினும் ஒஸ்றியாகங்கேரி இந்த உடன்படிக்கைக்குச் சம்மதிக்கவில்லை. வேறு சில தேசங்களும் இத்தாலியுடன் சேரும். பரன் அலோய்சி என்பவர் சர்வதேச சங்கத்தில் இத்தாலிய பிரதிநிதி. இவர் மிக அருமையானவர். முசோலினியின் அத்தியந்த நண்பன். சங்கம் இத்தாலிக்குமாறுகமுடிவுசெய்ததும் பரன் அலோய்சி பொருள்பறிகொடுத்தவனின் புன்னகையுடன் ஓர் சிகரற்றை மூட்டிக்கொண்டு இறங்கிச் சென்றாராம்: சங்கத்தில் அங்கத்தவர்கள் சிகரற் புகைப்பதும் (லிற்விேைவ்) நீண்டதோர் சுருட்டை எந்நேரமும் வாயில் வைத்திருப்பதும் வழக்கம். நமது லவால் சிகரற் புகைப்பதில் மிகவும் சுறுசுறுப்புடையவர் போலிருக்கிறது. ஒன்றின்பின்னென்றாக எந்தநேரமும் வாயில்வைத்துப் புகையைத் தள்ளிக்கொண்டேயிருப்பாராம். சேர். டெனிஸ் பிறெஸ் நாசிகாசூரணத்தை ஓர் சிறு பெட்டியினின்றுமெடுத்து மற்ற அங்கத்தவர்களுடன் பங்குபற்றிக்கொள்வார். * *

அங்கே..........

நாளாந்தம் யுத்தவிஷயமாக வெளிவரும் புதினங்கள் முழுவதையும் நம்பவியலாதிருக்கின்றது. ஆயினும் அடோவா நகரை இத்தாலி பிடித்ததையும் உவால் உவாலை அபிசீனியர் கைப்பற்றியதையும் ஒருவாறுநம்பலாம். இற்றைக்கு 40வருடங்களுக்குமுன் உண்மையாகவிருந்த புதினம் இன்று முழுமாறுதலாகவிருக்கிறது. இரவும் பகலும் எங்கும் உண்டு. 1896-ம்ஆண்டில் ஓர் செருக்குப் படைத்த இத்தாலிய சேனைத் தலைவன் அடோவா நகரைப் பிடிப்பதற்காக 14,500 யுத்தவீரருடன் சென்றார். அபிசீனியர் அவரைப் பரிதாபமாகத் தோல்வியுறச் செய்து அனுப்பிவிட்டனர். ஆனல் இன்று அடோவா நகர் இத்தாலியரால் கைப்பற்றப்பட்டது. நிற்க, அபிசீனியாவில் ராமா என்னுமோர் இடம் இருக்கிறதாம். இத்தாலியில் ராவணன் என்னுமோரிடம் இருந்தால் அடோவாவை நாம் சீதையெனக் கூறுதல் ஒருவாறு அமையுமல்லவா? * * *

ஆனல் இங்கே.......

அபிசீனியாவில் யுத்தவிஷயங்களிவ்வாறிருக்கிறது. ஆனல் இங்கே சோதிடர்கள் தாங்கள் தாங்கள் கூறியதை சரிப்படுத்திக்கொண்டும் நிலைநிறுத்திக்கொண்டுமிருக்கிறார்கள். புலத்சிங்காலா எவ்விதமாகவும் தப்பிக்கொள்ளமுடியாது. இவர் ஒருவர்தான் ஒன்பதாவதுமுறையும் யுத்தம் தொடங்கமாட்டாதெனக் கூறியவர். பம்பலப்பிட்டியிலிருக்கும் எஸ். ஓ. வாட் என்பவர் நிச்சயமாக யுத்தம அக்டோபரில் தொடங்குமென ஆகஸ்ட் 13-ந் திகதி கூறியிருந்தார். அலிஷா என்னுமொருவரும் இதேமாதிரிக் கூறியிருந்தார். யுத்த விஷயமாக சிந்திப்பதும் புதினங்கள் தேடித்திரிவதுமே பெரும்பாலாரின் நோக்கமாயிருக்கின்றது. நிற்க, எனது நண்பன் ஒருவர் சென்றகிழமையில் ஒரு நாளிரவு நித்திரையில் "சரியானசண்டைநடக்கிறது..............அவங்களைச் சுட்டுத்தள்ளவேண்டும்" என்று வாய் புலம்பினாராம். இவர் ஒருசமையம் கனவில் யுத்தம்நடப்பதைப் பார்த்திருக்கலாம். யாவரது மனதிலும் யுத்தமே குடிகொண்டிருக்கிறது. நித்திரையிலும் யுத்தமே. * *

### பாணந்துறையில் குண்டு

இதுமாத்திரமா? இரும்புக்குண்டாயிருந்தாலுஞ்சரி, கண்ணாடிக்குண்டாயிருந்தாலுஞ்சரி, சோடாப்போத்தல் குண்டாயிருந்தாலுஞ்சரி, தாமதமில்லாது சனங்கள் இத்தாலியர்போட்ட குண்டென்றே ஐயமில்லாது நம்பி விடுவார்கள். சென்றகிழமை பாணந்துறையில் ஓர் குண்டு காணப்பட்டதாம். இது ஓர் கண்ணாடிக்குண்டு. கடற்கரையிற் காணப்பட்டதாம். இதைத் தலைமைக்காரன் பொலிஸ்தானத்துக்கெடுத்துச்சென்று ஒப்புவித்தாராம். ஏராளமான சனங்கள் சிறிதுநேரத்தில் "இத்தாலியக்குண்டை" பார்ப்பதற்காக ஸ்தானத்தில் குழுமியிருந்தார்கள். இலங்கை முழுவதும் இது இத்தாலியர் விமானத்தில் வந்து போட்ட குண்டு என புதினம் பரவியிருக்கிறது. ஆனல் உண்மையில் இது கப்பலிலிருக்கும் ஓர் கருவியின் கண்ணாடித்துண்டு. இதன் உருவம் ஓர் சிறு குண்டுபோலிருக்கலாம. * *

### முசோலினி யார்?

முசோலினி முப்பது வருடங்களுக்கு முன் ஓர் பத்திரிகை நிருபராகவிருந்தார். தற்போது இத்தாலிய தலைவனாகவிருக்கிறார். இங்கிலாந்தில் தற்போது அதியுத்தம பிரதம நீதியரசராகவிருக்கும் கேவாட் பிரபுவும் பத்திரிகைத் தொழிலிலேயே முன்னிடுபட்டிருந்தார். இவர்களைவிட வேறுமநேகர் பத்திரிகைத்தொழிலிலிருந்தே பெரும பதவிகளையடைந்தனர். முசோலினி குடிவகை பாவிப்பதில்லை. மாமிசம் புசிப்பதில்லை. புகைப்பதுமில்லை. இவருக்கு அரசியல் விஷயங்களில் ஸ்காபத்தியென்னும் ஓர் பெண் அறிவூட்டுவாராம். இவருக்கு வயோதிபனாவதற்கு விருப்பமில்லையாயினும் இவர் ஒரு குழந்தைக்குப்பாட்டனாய்விட்டார். * *

### அவர் பட்டபாடு

ஓர் சென்னை எம. ஏ; தற்போது இலங்கையில் இவர் ஓர்பெரும் பதவியிலிருக்கிறார். இவர் ஓர் யாழ்ப்பாண வாசிதான். அவரது நாமதேயத்தை நான் கூறமாட்டேன். சென்ற புதன்கிழமை இவர் வைத்தியசாலையில் ஓர் 'நேஸ்'சுடன் சம்பாஷித்தார். அந்தச் சம்பாஷணை எனது செவியூடாகவுஞ் சென்றது. "எனது மகனை இரவுக்குப் பார்ப்பதற்கு விசேஷ ஆள் வருவதாகக் கூறினை—அவர் வராவிடில் நீ அக்கடமையைச் செய்யக்கூடுமா?" என்றார்நமது எம்.ஏ. "நிச்சயமாக வருவார்—அவர்வராவிடினும் அது என்பொறுப்பு" என்றாள் அந்தநேஸ்.

நமது எம். ஏ. பின்னரும் பேசத்தொடங்கி...."ஆயினும் எனது மகன் ஓர் வாலிபன்........ நீ பார்ப்பது சரியல........" என்று கூறி முடிககமுன், நேஸ் "இல்லை இலலை, நாங்கள இதுவரையில் அநேக வாலிபரைப் பார்த்திருக்கிறோம" என்று பதிலிறுத்தார். நமது எம். ஏ. திகைத்தார். இந்த மறுமொழியைக் கேட்டதும் அவர் பட்டபாடு .... போதியளவு சிரித்து வெட்கித்து நின்றார். குறித்த வைத்தியசாலையிலுள்ள நேஸ்மார் ஆடவர்களுடன் சம்பாஷிப்பதிலும் தைரியமாகப் பதிலிறுப்பதிலும் சக்தி வாய்ந்தவர்களெனப் பலரிடத்திலுமிருந்து அறிந்திருந்தேன். இதுவிஷயத்தைக் கவனித்ததும நானும் அவற்றை அங்கீகரித்துக்கொண்டேன்.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
யுவஞு புரட்டாதிமீ உஎஉ

## சர்வதேச சங்கத்தின் மகத்தான கடமை.

தற்போது இத்தாலியர் அபிசீனியர்க்கு மாருக யுத்தஞ் செய்து பெரு வெற்றி பெற்று மகிழ்கின்றனர். இவர் செய்வது யுத்தமா? படுகொலையா? என்பதை நாம் நோக்குவது அவசியம். தம்முடன் சரிநின்று யுத்தஞ் செய்யக்கூடிய ஒரு நாட்டினர்க்கு மாருக இத்தாலியர் விரோதம் பாராட்டின் அவர்களைக் குறைகூறுவார் எவருமின்று. புராதன பெருமையையுடைய ஒரு சிறுச் சாதியினர்மீது தமது யுத்த கெம்பீரத்தைக் காட்டிநிற்பது யாவருக்கும் அருவருப்பை உண்டாக்குகின்றதே. யுத்தவெறிகொண்ட இத்தாலியரும் அவர்களின் தலைவராகும் முசோலினியும் சரியெது? பிழையெது? என இப்போது அறியவியலாது சன்னதமாடுகின்றனர். இவர்களின் போலியதிகாரத்திற்கும் வரம்புண்டல்லவா? ஆயுதபாணிகளாய் நின்று அபிசீனியாவில் யாவரையும் இத்தாலியர் வெருட்டித் துரத்தினுராயினும், அதி தீவிர விவேகமும் அரசியல் ஞானமும் படைத்த அரசியல்வாதிகளைக் கொண்ட சர்வதேச சங்க மண்டபத்தில் இவர்கள் ஆட்டம் பலிக்கவில்லையே. யுத்தத்தை சர்வதேச சங்கத்தினரின் உடன்படிக்கையை மீறி ஆரம்பித்தவர் அபிசீனியரல்லர். இத்தாலியரேயென இப்போது சர்வதேசசங்கம் முடிவுசெய்துவிட்டது.

இவ்வாறு முடிவு செய்த சர்வதேச சங்கம் விரைவில் நடபடிக்கைகளைக் கையாண்டு இத்தாலியர்க்கு நற்புத்தி புகட்டுவது அவசியம். இவ்விஷயத்தில் பிரிட்டிஷார் பிடிவாதமாக நிற்பது நற்கால அறிகுறியேயாம். மேற்படி சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் மற்றைய வல்லரசினரும் சிறுச் சாதியினரும் முன்வந்து போதிய உதவியைச் செய்வது அவசியமல்லவா? எல்லாச் சாதியினரும் ஒருங்குசேர்ந்து நடபடிக்கைகளைக் கையாளினன்ரே இத்தாலியரின் தலைப்பாரம் குறையும். மேலும் இத்தாலியர் தாம் இப்போது அபிசீனியாவில் நடத்தும் யுத்தப்போக்கில் மனதை விடுவதாகவும் சர்வதேசசங்கத் தீர்ப்பு எப்படியானுலும் காரியமில்லையென்றும் கூறுகின்றனர். இவ்வளவு துணிவாக இத்தாலியர் கூறுதற்குக் காரணம் அவர்கள் சர்வதேசசங்கத்தை ஒரு துரும்பாகவும் மதிக்கவில்லையென்பதே.

இப்போது முஸோலினி எல்லா உடன்படிக்கைகளையும் மீறி யுத்தத்திற்குச் சென்றமையால், அவர் அபிசீனியரின் பகைவராகமாத்திரமன்றி உலகத்தவர் யாவராலும் வெறுக்கப்படுகிருர். சமீபத்தில் சர்வதேசசங்கத்தினர் இத்தாலியரை சீர்திருந்திய சாதியாரின் வகுப்பினின்று ஒதுக்கிவிட்டனர். இப்போது கீழ் நிலையில் அதாவது மிருகபான்மையாக நடந்துகொள்பவர் அபிசீனியரன்று, இத்தாலியரே. பணப்பெருக்கமில்லாத இத்தாலியர் இவ்வளவு இறுமாப்புடையராக இருப்பதும் நூதனமாகின்றது. சர்வதேசசங்கம் நடபடிக்கைகளைக் கையாண்டால் இரு கண்டங்களிலும் (அதாவது ஐரோப்பா, ஆபிரிக்கா) யுத்தமேற்படும். அப்போது எவ்வளவுபணம், எவ்வளவு உணவுப்பொருள்கள் எவ்வளவு யுத்த தளபாடங்கள் தேவையாகும். இத்தாலியர் யாது செய்வர்? இவ்வித நிலைமையிலிருக்கும் இத்தாலியர் விஷயங்களை விளங்கி நீதியின்படி நடக்கவேண்டாமா? தலைப்பாரங்கொண்டு இத்தாலியர் தமது அடாதவழியில் மென்மேலும் நோக்கமுடையராய்க் காணப்படுகின்றனர். ஆதலால், காலந்தாழ்க்காது சர்வதேசசங்கத்தினர் முன்வந்து ஏற்றனவற்றைச் செய்யத் தலைப்படுதலே முறை.

இந்த நெருக்கடியான நிலைமையில் (அதாவது ஆயிரக்கணக்கான நிரபராதிகள் அபிசீனியாவில் உயிர்விடுஞ் சமையத்தில்) விஷயங்களை நெடுநீர்கொண்டு ஆலோசிப்பதும் விரும்பப்படத்தக்கதலல. இச்சமையத்தில் பிரிட்டிஷாரும் பிரான்சியரும் தமக்கிடையிலுள்ள சந்தேகங்களை நீக்குவதில் நேரத்தைப்போக்குகின்றனர். காலத்தினுல் செய்த உதவியே அபிசீனியர்க்குப் பெரும் நன்மையை விளைக்கும். பிரான்சியர் தமது நண்பராக விளங்கிய இத்தாலியர்க்கு எதிராகச் சடுதியில் கிளம்பவொருப்படுகிறுரில்லை. இப்போது நண்பராகத் தோற்றுவோர் நாளைக்குச் சத்துராதிகளாகவும் வரக்கூடும். யுத்தம் வந்தால் கூடநின்று உதவிபுரிவதாக முன் ஜெர்மனியர்க்குடன்படிக்கைசெய்தஇத்தாலியர் பின் ஐரோப்பிய மகாயுத்தம் நிகழ்ந்தபோது யாதுசெய்தார்? ஜெர்மனியர்பக்கஞ் சேர்ந்தனரா? அல்லது ஒரு கட்சியையும் சேராது நடுநினறனரா? அன்று. பின் யாது செய்தார்? ஜெர்மனியர்க்கு மாருக யுத்தத்தில் பிரான்சியருடன சேர்ந்தனரே. இவ்வித கபடநாடகங்களைக் கைக்கொள்ளப் பின்னில்லாத இத்தாலியருடன் நட்புக்கொண்டாடும் பிரான்சியர் இச்சமையத்தில் உண்மையைச் செய்யப் பின்னிற்பது முறையன்று. பிரிட்டிஷாருக்கும் உசாத்துணையாக ஒரு வல்லரசினராவது நின்ருற்ருன் நன்மைகள் உண்டாகும்.

ஆகையால், சர்வதேசசங்கம் உலகில் நிலைபெற்று அரிய சமாதானத்தை நிலைபெறச் செய்யவேண்டின், இச்சமையத்தில் தாமதமின்றி நடபடிக்கைகளைக் கையாளுவது மிகப் பிரதானம். இப்போது சங்கம் அவமானத்தை அடையின் பின் மீட்சியேது? உலகத்தில் அலங்கோலங்களும் கோரயுத்தங்களும் இடைவிடாது தலைகாட்டிப் பெருநட்டங்களை விளைக்கும். விஷயமிவ்வாருக ஏற்றதைச் செய்து உலக சமாதானத்தை நாட்டச் சர்வதேச சங்கத்தினர் பின்னில்லாதிருப்பாராக.

## இந்நிலையாயின் என்னவாய் முடியும்?

வட இலங்கையிலுள்ள துறைமுகங்கள் சில வருடங்களுக்குமுன் இருந்த உன்னத நிலையை அத்துறைமுகங்களை ஒருகால் சென்றுநோக்கின் நன்கு விளங்கும். ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, வல்லுவெட்டித்துறை, முல்லைத்தீவு, முதலிய துறைமுகங்கள் தென்னிந்தியத் துறைகளுடன் நடத்திவந்த வியாபாரத்தை வயதில் முதிர்ந்தாரிடமிருந்து நன்கு அறியலாம். இப்போது இத்துறைமுகங்கள் துக்ககோலமாகக் காணப்படுகின்றனவென்பதை யாவர் மறுப்பர்? இதற்குக் காரணம் யாதெனவறிவதும் அவசியமாகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ளோர் இற்றைக்கு முப்பது வருடங்கட்கு முன் தென்னிந்தியாவிற்குப் போக்குவரவு செய்வது மிகவும் இலகுவாயிருந்தது. தற்போது இந்தியாவிற்குச் சென்று திரும்பும் பிரயாணிகள் படும் கஷ்ட நஷ்டங்கள் இம்மாத்திரமன்று. போக்குவரவு கஷ்டமாகவே, வியாபாரம் முதலியனவும் மிகவும் அருகுவதாயிறறு. இரு நாடுகளுக்குமிருந்த தொடர்பும் பெரிதும் நீங்கிற்றெனலாம். மறுபடியும் இத்துறைமுகங்கள் தென்னிந்திய பிரயாணத்துக்குத் திறக்கப்படின் பழைய உன்னத நிலைமையை அடையுமெனத் திடமாகக் கூறலாம். இவ்விஷயமாகத் திரு. R. ஸ்ரீபத்மனுதன் அவர்கள் எழுதிய கடிதம் ஒன்று இன்னுேரிடத்தில பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கசபையில் இவ்விஷயமாக நடபடிக்கைகள் எடுத்துக்கொள்வது அவசியமென்பதையும் நாம் வற்புறுத்துகிருேம். வரவுசெலவுத்திட்டம் அரசாங்கசபையில் விவாதிக்கப்பட்டபோது பருத்தித்துறைப் பிரதிநிதியாகும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமவர்கள் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசியுள்ளார். அத்துடன் நின்றுவிடில் எல்லாம் நிறைவேறிவிடுமா? யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் ஒருங்குசேர்ந்து இவ்விஷயத்தை மிக உறுதியாகப் பிரேரித்து ஆதரித்து நிற்பின் நன்மையுண்டாகுமென்பது நிச்சயம். பொதுசனங்களும் இவ்விஷயத்தைக்குறித்து ஓர் பகிரங்க கூட்டம்கூடி அரசினர்க்குக் குறைகளை எடுத்துக்காட்டவேண்டும்.

## சைவ வித்தியாவிருத்திச் சங்க நிர்வாகத்தைப்பற்றிய கடிதங்கள்

சைவ வித்தியாவிருத்திச் சங்க வித்தியாசாலைகளின் நிர்வாக ஊழல்களைப்பற்றிய கடிதங்கள் சில இப்பத்திரிகைவாயிலாக முன் வெளிவந்ததும், அதற்கு ஷை சங்க நிர்வாகி ஒருவர் விடையளித்ததும் வாசகநேயர்கள் அறிந்திருப்பார்கள். ஷை விஷயமாக இன்னும் பல கடிதங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஷை சங்கம இலங்கையிலுள்ள சைவத் தமிழ் மக்கள யாவரதும் நல்லாதரவைப் பெற்று, மென்மேலும் விருத்தியெய்திப் பல்லூழி நிலைபெற்று, சைவ ஒளியைப் பரப்பவேண்டுமென்பதே எமது நாளாந்தப் பிரார்த்தனையாகும். ஆனுல், கடிதங்களை நோக்குமிடத்து நிர்வாகமுறையில் கூறப்படும் ஊழல்கள் கண்டிக்கப்படவேண்டியதென்பதை எவரும் ஒத்துக்கொள்வர். இப்பெரிய பொது ஸ்தாபனத்தின் நிர்வாகத்தைக் கையேற்று, அதனை நிர்வகித்து நடத்தும் பொறுப்புவாய்ந்த பெரியார் யாவரேயாயினும் அவர் தமது கடமையை முகமன்பாராது செய்வாரேயாயின், இவ்வித ஊழல்கள் வரக் காரணமில்லையென்பது ஒருதலை.

இவ்வித பொறுப்புவாய்ந்த பொது ஸ்தாபனங்களைத் துணைக்கொண்டு தங்கள் தங்கள் சுயநலத்தை முற்றுவிக்க எத்தனிப்போர், ஈற்றில் யாவராலும் வெறுத் தொதுக்கப்படுவரென்பதை நாம் எடுத்துக் காட்டவேண்டியதில்லை. குறித்த சங்கத்தின் காரிய நிர்வாகசபையாருக்கு நாம் கூறக் கூடியதொன்றுண்டு: இலங்கையிலுள்ள சைவத் த்மிழ்மக்களின் உயிர்நாடிபோன்ற ஓர் பொது ஸ்தாபனம்—75 வித்தியாசாலைகளைக்கொண்ட மகத்தான ஒரு ஸ்தாபனம்—புறச்சமயத்தவரின் பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் நிலைபெற்றிருக்கும் ஓர் சமய ஸ்தாபனம்—பல அநாதைப் பிள்ளைகளுக்கு உணவு — உடை — கல்வி முதலியவற்றை அளிக்கும் ஓர் உன்னத ஸ்தாபனம்—அது உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதை நிர்வகித்து நடாத்துவதற் குரிய பிரமாணங்களும் வகுக்கப்பட்டிருக்கிறது. பிரமாணத்தைக் கைக்கொண்டு காய்தலுவத்தலின்றி யாவர்க்கும் ஏற்ற முறையில் நிர்வாகசக்தியைச்செலுத்துவதே உங்கள் கடமையென்பதை உணர்ந்து ஊழல்கள் வாராதபடி பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதே.

காலநிலை: வெய்யிலதிகமாயிருப்பதால் பலவிடங்களில் காய்ச்சல், வயிற்றுளைவு முதலிய நோய்கள் தலைகாட்டியிருக்கின்றன. சென்ற 2 நாட்களாகச் சிறு தூற்றல் மழை சிலவிடங்களில் பெய்திருக்கிறது. ஐப்பசிமாதமாகியும் வேளாண்மை விதைப்புப் பலவிடங்களில் ஆரம்பிக்கப்படவில்லை. யுத்தம் தொடங்கியதைக் கேட்டவுடன் வியாபாரிகள் பொருட்களின் விலையைக் கூட்டத் தலைப்பட்டுவிட்டனர்.

## இத்தாலி - அபிசீனியா யுத்தம்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மைலாகும். தென் திரிற்றியாவில் ஓர் இத்தாலிய படையினர் அடிஸ் அபாபாவிற்குச் செல்லும் புகையிரதப்பாதையை நோக்கிச் செல்கின்றனர். வழியில் மௌசாலி என்னும் நகரையும் கைப்பற்றினராம். இந்நகரையும் தாண்டி அயுஸா என்னும் செழிப்புவாய்ந்த பிரதேசத்தை நோக்கிச் செல்கின்றனர். இப்பிரதேசத்தூடாகச் செல்லுங்கால் 100 மைல் தூரமுள்ள வனந்தரத்தைக் கடக்கவேண்டுமாம். அங்கே சூரிய வெப்பத்தின் கொடுமை தாங்கவியலாதாகும்.

தெற்கே சொமாலிலண்ட் போர் முனையில் இத்தாலிய படையினர் கெர்லோகூலி என்னும் நகரை நோக்கிச் செல்கின்றனர். பாதை வனந்தரத்தூடாகச் செல்லவேண்டியிருத்தலால் கழுதைகளில் பெரிய தண்ணீர்ப்பீப்பாக்களை ஏற்றிக் கூடக் கொண்டுசெல்கின்றனர்.

யுத்தத்தில் காயமடைந்தோர்க்கென அமைக்கப்பட்ட வைத்தியசாலைகள்மீது இத்தாலிய விமானங்கள் குண்டுபோட்டதாக வந்த செய்திக்கு ஆதாரமின்றென இத்தாலியர் அறிவிக்கின்றனர். உண்மையாதெனில் அடோவா முதலிய நகர்களில் பிரதானமான எல்லாக் கட்டிடங்களிலும் சிவப்புச் சிலுவைகள் நாட்டப்பட்டிருந்தன. இப்படிச் செய்தால் இத்தாலிய விமானம் அக்கட்டிடங்கள்மீது குண்டுகள் போடாவென இவர்கள் பிழைபாக எண்ணினர். அபிசீனியர் எடுத்த உபாயங்கள் வாய்க்கவில்லையாம். o o o

அக்டோபர் 5.

அபிசீனியாவுக்கும் இறிற்றீறியாவுக்கும் இடையிலுள்ள எல்லைப்புறத்தில் இரு மாகாணங்கள் உள. ஒன்றன் பெயர் றயிக்கிறே. மற்றையது டானக்கில். முந்தியது அபிசீனியாவின் மேற்கேயுளது. பின்னர்க் கூறப்பட்டது கிழக்கேயுளது. டானக்கில் மாகாணத்தில் இருகட்சியினரும் கைகலந்து யுத்தஞ் செய்தாராகவும் பெரும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இத்தாலியர் பக்கலில் 700 பேர் இறந்தனராகவும், அபிசீனியர் கட்சியில் 1,300 பேர் இறந்துள்ளாராகவும் புதினங்கள் கூறுகின்றன.

அடோவாவினை நோக்கிச் செல்லும் சேனையை ஒரு பட்டாளமே எதிர்த்துப் போர்செய்கின்றது. ருஸ்சேயும் என்னும் அபிசீனிய இளவரசனைத் தலைமையாகக் கொண்ட பட்டாளம் இன்னும் அடோவா நகரைக் கிட்டியணுகவில்லை. நாள் முழுவதும் சண்டை நடந்தது. இத்தாலியர் மாறப் என்னும் ஆற்றைக் கடந்துவிட்டனர். இத்தாலியர் மூடப்பட்ட பல மோட்டார்ப் படைகளையும் ராங் எனச் சொல்லப்படும் மலையேறி இரதத்தையும் கொண்டுவந்து யுத்தத்தில் பிரயோகிக்கின்றனர்.

# இத்தாலி - அபிசீனியா யுத்தம்.

## யுத்தமன்று; படுகொலையே.

### சர்வதேச சங்கத்தில் அபிசீனிய தூதரின் உறுதிமொழிகள்.

### இத்தாலிய தூதரின் முறைப்பாடுகள்.

### சர்வதேச சங்கம் சடுதியில் நடபடிக்கைகளைக் கையாளுமாம்.

அக்டோபர் 10.

சென்ற புதன்கிழமை சர்வதேசசங்கம் கூடியபோது அபிசீனிய தூதராகும் ஹவறியாற் என்பவர் செய்த பிரசங்கம் பின்வருமாறு:—

"சிறிதும் இரக்கமில்லாதவரும் கன்னெஞ்சருமாகும் இத்தாலியர்செய்யும் கோர யுததத்தை தடுப்பாரில்லையா? காலதாமதமின்றிச் சர்வதேசசங்கம் வேண்டிய நடபடிக்கைகளைக் கையாளவேண்டும். இப்போது நடப்பது யுத்தமல்ல. படுகொலையே. சர்வதேசசங்கம் கையாளும் முறைகளை நாம் முற்றுக அங்கீகரிக்க ஆயத்தமாயிருக்கின்றேம். அபிசீனியாவின்கௌரவத்துக்குப் பங்கத்தை விளையாத எவ்வித சமாதானத்துக்கும் நாம் ஆயத்தம். ஆனுல் நாம் எமது சுதந்தாத்தைக் காப்பாற்ற உயிர்விடும்வரையும் எதிர்த்துநிற்போம். வல்லமையால் நம்மையடக்க இத்தாலியரால ஒருபோதும் முடியாது."

இத்தாலிய தூதர்செய்த பிரசங்கம் பின்வருமாறு:— "யுத்தத்தை எப்படி ஒருவர் நிறபாட்டுவது? யுத்தத்தின் காரணத்தையறிந்து வேண்டியதைச்செய்தால் யுத்தம் நிகழாதிருக்கும். யுத்ததலை அகறறச் செய்யும் பிரசங்கங்கள் வீணனவை. உண்மையான தொண்டு யுத்தகாரணங்களை அகற்றுவதே. இப்போது இத்தாலியர் தமக்காக மாத்திரம யுத்தம்செய்யவில்லை. சர்வதேசசங்கத்தின் கொள்கைகளை நிலைநாட்டுதற்குமாகவேயுத்தம்செய்கின்றனர். மஞ்சூரியா விஷயத்தில் சர்வதேசசங்கம் தலையிடவில்லை ஜர்மனியர் சர்வதேசசங்கத்தை அவமதித்தபோது எதிர்த்தாரொருவருமில்லை. சென்ற 15 வருடமாக இத்தாலியர் எல்லாச்சாதியினருடனும் ஒத்துழைத்துச் சர்வதேச சங்கத்தின் விருத்தியை நோக்கி உழைத்தனர். மேலும் யுத்தத்தில் பெருநட்டமடைந்த நாடுகள் பழைய நிலையையடைய இத்தாலியர் பேருதவிபுரிந்தனா. ஆயுத பரிகாண விஷயமாகவும், ஜர்மனியரின் ஸார்மாகாண விஷயமாகவும் நடுநின்று ஏற்ற உதவிசெய்தனர். அபிசீனியர் சர்வதேச சங்கத்தினரின் கட்டளையைச் செய்யவுமில்லை. இத்தாலியருடன் இணங்கிஞருமில்லை. இத்தாலியர் தம்மைப் பாதுகாப்பதற்கு நடபடிக்கைகளைக் கையாளப்படாதா? அபிசீனியர் சர்வதேசசங்கத்தில் இடம்பெறுதற்கு அருகால்லர்."

இத்தாலியர் தெற்குப் போர்முனையில் ஒகாடின் மாகாணத்தில் முன்னேறி கோருஹாய் என்ற இடத்தைக் கைப்பற்றிவிட்டனராம். இத்தாலியப் பட்டாளத்திலிருந்து ஆயிரக்கணக்கான ஆபிரிக்கப்போர்வீரர் ஒழித்தோடி விட்டனரென அபிசீனியாவிலிருந்து கிடைத்த செய்தி கூறுகின்றது. மேலும் ஒரு பெல்ஜிய பட்டாளம அபிசீனியர்க்குதவி செய்ய வந்திறங்கியிருக்கிறதாம். இத்தாலியர் அதிக்கிருற நகருக்குச் சமீபமாகவுள்ள எட்காஹாமஸ என்ற கிராமத்தையும் கைப்பற்றியுள்ளாராம். இது யுத்தஞ் செய்வதற்கு ஓர் வயதியான இடமாகும. வடக்கே மேறகுப் புறத்தில் 20000 அபிசீனிய போர்வீரர் திடமாக நின்று போர் புரிகின்றனராம். இத்தாலியர் பீரங்கிப் பிரயோகஞ் செய்து எதிரிகளைத் துரத்தி விட்டனர்.

அடிஸ் அபேபாவுக்கும் டிஜி பூட்டுக்கும் இடையிலுள்ள புகைரதப் பாதையை இடையில் குலைத்துவிடின் அது பெரிய பாதுகாப்பாகுமென அபிசீனியர் எண்ணுகின்றாராம்.

விரைவில் சர்வதேசசங்கம் நடபடிக்கைகளைக் கையாளுமெனச் சொல்லப்படுகிறது. பிரிட்டிஷ் பிரதிநிதியாகும் சேர் அன்றனி ஈடின் இவ்விஷயமாகக் கூறியது நோக்குந்தரத்து:—

"இப்போது நாம் செய்யவேண்டிய கடமைகளை மிகத் துக்கத்துடன் தான் செய்ய வேண்டியிருக்கிறது. என் செய்வது? நாம் முன்னரோ கையெழுத்திட்டு மனப்பூர்வமாக ஏற்றன வற்றை இப்போது புறக்கணிக்கவியலாது. நமது கடமையை எவ்விதத்திலும் நிறைவேற்றிச் செல்வோம். மேலும் நாம் செய்வதைக் காலதாமதமின்றிச் செய்வது மிகப் பிரதானமான காரியம். சர்வதேசசங்கம் இக்கடமையை நாடிச் செய்யவேண்டும். சமாதானத்தைப் பெறவேண்டில் சுறுசுறுப்பாக நடபடிக்கைகளைக் கையாளவேண்டும்.

அடோவா நகரை இத்தாலியர் கைப்பற்றிய விபரம் வெளியிடப்பட்டிருக்கிறது. இத்தாலியப் பட்டாளத்தலைவராகும் வில்லாசந்தா என்பவர் இத்தாலிய கொடியுடன் முன்னர் அடோவா நகர்க்குள் குதிரைமீது சென்ருர். அபிசீனிய பிரஜைகள் வீடுகளைவிட்டு வெளியே தோட்டங்களில் ஒழித்திருந்து இத்தாலியபோர் வீரர் செல்வதைப் பார்த்தனராம். துணிவான சில பிரஜைகள் இத்தாலிய படையினர்க்கு முன்னின்று வணக்கஞ் செய்தனர். பட்டாளத்தலைவர் சனங்களை நோக்கிப் பயப்படாதிருக்கும்படியும் தாம் கொள்ளையடிக்க வரவில்லையெனறுங் கூறினர். சமயகுருமாரும், பிரபுக்களும் வேறும் அநேக பெண்மணிகளும் இத்தாலியரை வரவேற்றனராம்.

சில அமரிக்கர் ஒருங்கு சேர்ந்து அபிசீனியர்க்கு இரண்டு விமானம் உபகாரமாக அளித்துள்ளார். அவர்கள் செலவில் அவ்விமானங்கள் அபிசீனியாவிற்குக் கொண்டு செல்லப்படுமாம்.

இத்தாலிய தூதர் அடிஸ் அபேபாவினைவிட்டுச் சென்ற புதன்கிழமை இத்லாலியை நோக்கிச் செல்கின்றனர். ரோம் நகரிலுள்ள தமது தூதரையும் அவ்விடத்தைவிட்டு வரும்படி அபிசீனிய அரசர் கட்டளையிட்டுள்ளார்.

o o o

அக்டோபர் 9.

சர்வதேசசங்கத்தின் மகா கூட்டம் சென்ற புதனகிழமை (9-10-35) ஜெனீவாவில் நடந்தது. இததாலியர் நிபந்தனைகளை மீறி யுததம ஆரம்பித்தமையால் அவர்க்கெதிராக நடபடிக்கைகள் கையாளப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அவுஸ்றியா, ஹங்கேரி ஆகிய இரு நாடுகளும் ஒழிந்த மற்றைய நாடுகள் யாவும் இதறகு ஏகமனதாய்ச் சம்மதித்தன. சர்வதேசசங்கத்தின் கௌரவம் காக்கப்படவேண்டியது அவசியமாயினும் தமக்கு ஆபத்துக்காலத்தில் பேருதவி செய்த இததாலியர்க்கு மாறுகத் தாம் செல்ல வியலாதென அவுஸ்றியா பிரதிநிதி கூறினர். ஹங்கேரி நாட்டுப்பிரதிநிதியும் தாம் இததாலியர்க்கு மாறுகச் சென்று நட்புக்குப் பங்கம் விளைக்க வியலாதெனக் கூறி விட்டனர். எனவே விரைவில் நடபடிக்கைகள இத்தாலியர்க்கு எதிராகக் கையாளப்படும. ஆரம்பத்தில் பொருளாதாரநிலையைக் குறித்தும் இறுதியிலேயே யுத்த முறையிலும் நடபடிக்கைகள் கையாளப்படுமாம். இவ்விஷயமாக பிரான்ஸியர்க்கும் பிரிட்டிஷார்க்குமிடையில் மிகவும் ஐக்கியமுண்டெனவும் சொல்லப்படுகிறது. இத்தாலியர்க்குப் பணமுட்டதிகமென்றும் சர்வதேசசங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் தேசத்தவர் ஒருவரும் பணங் கொடாதிருப்பதாகவும் முடிவு செய்யப் பட்டது.

இத்தாலியர் தாம் கைப்பற்றிய இடங்களைப் பாதுகாப்பதற்கு ஏற்ற வழிகளைக் கையாளுகின்றனர். ஆகையால் யுத்தம் சிறிதளவுக்கு நிறபாட்டப்பட்டிருக்கிறது. அபிசீனிய சேனைகள் அகமி என்னுமிடத்திலும், அக்ஸம் என்னும் இடத்திற்கு வடமேற்கிலும் திரண்டுவந்து நிறகின்றன.

இத்தாலிய சேனையிலிருந்து 250 ஆபிரிக்க போர்வீரர் யாரும் அறியாது ஓடிவிட்டது உண்மையாம். ஆனுல் அபிசீனியர் சொல்லுவதுபோல் ஆயிரக்கணக்கானேர் பட்டாளத்தை விட்டு விலகினரல்லர்.

மேலும் இத்தாலியர் மக்கலே என்னும் இடத்தை நோக்கிச் செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்கின்றனர். இததாலியர் தாம் கைப்பற்றிய விடங்கட்கு போக்குவரவுக்கு வயதியாக தெருக்களை அமைக்கின்றனர். பிடிபட்ட இடங்களிலுள்ளோர் இத்தாலியரில் நம்பிக்கையுடையராகக் காணப்படுகின்றனராம். யுத்தத்தில் சிறிதும் கிலேசமடையாமல் தமது தொழில்களை நடத்திச் செல்கின்றனர். பிடிக்கப்பட்ட இடங்களில் காலசுவாத்தியமும் தமக்கு மிகவும் ஏற்றதாயிருக்கின்றதென இத்தாலியர் கூறுகின்றனர்.

o o o

அக்டோபர் 8.

அடோவோ நகருக்கு மேற்கிலுள்ள அக்சம (Aksum) எனனும் நகரை இத்தாலியர் கைப்பற்றிவிட்டனராகப் புதினங்கள் கூறுகின்றன. அக்சம், அடோவா, அடிகிருற் என்னும் நகர்கள் ஒரேவரிசையிலுள்ளன. இப்போர்முனையின் நீளம் 70 மைலாகும். அக்சம் பிடிபட்டவுடன் அபிசீனியாவின் தலைநகராகும் அடிஸ அபேபாவில வசித்துவந்த 120 ஐரோப்பியர் அந்நகரைவிட்டு வெளியேற எண்ணிப் புகைரத ஸ்தானத்தில் வந்து சூழ்ந்து நின்றனர். இவர்களுள் 70 பேர் இத்தாலியதூதரின் ஸ்தானதது உத்தியோகத்தர். எத்தனையோ வியாபாரப் பிரமுகர்கள் தமது தொழில்களைக் கைவிட்டுவிட்டு வெளியேறிவிட்டனர். இததாலிய ஆகாயவிமான மூலமாக அடிஸ அபேபா நகர்மீது குணடுபோடுவார்களெனப் பயந்தே யாவரும் திகிலடைகின்றனர். வெளியேறினவருள் சிலர் அமெரிக்கர்; சிலர் பிரான்சியா; சிலர் எகிப்துதேசவாசிகள்; சிலர் கிரேக்கர்; சிலர் ஆர்மீனிய நாட்டினர். இத்தாலிய தூதரையும் நாட்டைவிட்டகலும்படி உத்தரவிடப்பட்டது. o o

அடோவாநகரைக் கைப்பற்றமுன் இத்தாலியர் நச்சுப்புகையை உண்டாக்கும் குண்டுகளைப் பிரயோகித்ததாகச் சொல்லப்படுகிறது. இது யுத்த உடன்படிக்கைக்கு மாறுன செய்கையாகும்.

நடுப்பாகததால் இத்தாலியர் அபிசீனியாவுக்குள் முன்னேற அபிசீனியபடைகள் வலதுபக்கத்தாலும இடதுபக்கத்தாலும் இற்றறியாவுக்குள் முனனேறிச் செல்வதாகக் கூறப்படுகிறது. இத்தாலிய சேனைததலைவர் அபிசீனியரால 30 போர் வீராகளுடன் கைதியாக்கப்பட்டதாக அறிவிக்கபபடுகிறது.

அபிசீனிய சக்கரவர்த்தி இப்போது அடிஸ் அபேபாவில் ஓர் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளார். அதன்படி மாலைதொடக்கம காலை வரையும் ஒருவித விளக்குகளும் உபயோகிக்கப்படாதாகும. தெருவீது விளக்குகள் கொழுத்தப்படா; மோட்டார் வெளிச்சம் போடாது செல்லும்; வீடுகளில் கதவுகள் நன்கு அடைக்கப்பட்டிருக்கவேண்டும். யப்பானியர் இததாலியர்க்கு நேர்விரோதமாகச் செல்லா. ஆனுல் இத்தாலியர்க்கு யுத்ததளபாடங்கள் கொடுக்க மறுததுவிட்டனா. அதிகம பட்டுத துணிகளை நெசவுசெய்யும் இததாலியர் யுத்தத்தில் ஈடுபட்டனராகையால் யப்பானியர் இவ்வியாபாரத்தில் அதிக லாபமடையக் கூடியவராகின்றனர். ஜேர்மனியர் தாம் இந்த யுத்தத்தில் எவ்விததத்திலும் தலையிடாரென ஹிற்லர் உறுதிப்படுத்துகின்றனர்.

அமரிக்கர் இத்தாலிய கப்பல்களில் பிரயாணஞ் செய்வதை நிறுத்திவிட்டனர். இப்போது இத்தாலியர் மீது நடவடிக்கை எடுததுக் கொள்வது அவசியமென்றும் அவ்வாறு செய்யாவிடின் சர்வதேசசங்கம் பரிகாசமடையுமெனவும ஒரு அமரிக்கர் கூறுகின்றார். மனிதர் யுததத்தைக் கைவிடவேண்டும். அல்லது நாகரீகத்தைக் கைவிடவேண்டுமென்பது அவர் கருத்து. பிரான்சியரும் பிரிட்டிஷாரும் ஒற்றுமையாக நின்று சர்வதேசசங்க நிபந்தனைகளை அனுட்டானத்துக்குக் கொண்டுவரின் முஸோலினி கண்விழித்து உண்மையை உணர்வரென்பது ஓர் அமரிக்கப்பத்திரிகையின் அபிப்பிராயம். o o

அக்டோபர் 7.

சர்வதேசசங்க நிர்வாகசபையினர் இத்தாலியரே சர்வதேசசங்க நிபந்தனைகளை மீறி யுத்தத்தை ஆரம்பித்துள்ளாரென நன்காலோசனைசெய்து முடிவுக்கு வந்துள்ளார்.

நாகரீகம் கைவரப்பெற்ற நாட்டினர் யாவரும் இத்தாலியர் செய்கையை முற்றுகக் கண்டிப்பரென்பதில் ஐயமின்றெனவும் அபிப்பிராயங்கூறினர். சர்வதேசசங்கமானது இப்படி விரோதமாக நடந்துகொண்ட இத்தாலியருடன் தமக்குள்ள தொடர்புகளை நீக்கிக்கொள்வதே முறையெனவும் முடிவுசெய்யப்பட்டது. இப்போது சர்வதேசசங்கம் செய்யக்கூடிய முதற்காரியம் யாது?

(1) சர்வதேசசங்கத்திற் சேர்ந்தநாட்டினர் இத்தாலிக்குத் தமது நாட்டிலிருந்து வியாபாரப் பொருட்கள் அனுப்பவுங்கூடாது. அங்கிருந்து வியாபாரப்பொருட்களைப் பெறவுங்கூடாது.

(2) இத்தாலியில் இருக்கும் தமது தூதர்களைத் திருப்பியழைத்தல்.

(3) அபிசீனியர்க்கு வேண்டிய யுத்த தளபாடங்களை அனுப்புதல். இவ்வித தீர்மானங்களைச் சர்வதேசசங்கத்தினர் முடிவுசெய்ததைக்கேட்ட இத்தாலியர் திகைப்படைந்தாராம். சர்வதேச சங்கத்தை விட்டு இத்தாலியர் ஓடவேண்டியகாலம் சமீபித்துவிட்டது. o o

தெற்கே சொமாலிலண்டு போர்முனையில் வ:ல் வால் என்ற இடத்தை அபிசீனியர் கைப்பற்றிவிட்டனர். இந்நகரத்தைக்குறித்தே இப்பெரிய யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதாகும். சென்ற ஒருவருடமாக இந்நகர் இத்தாலியர்வசமாகவே யிருந்தது. வடக்கே இதுவரை இத்தாலியர் பிடித்த பட்டணங்கள் அதிக்ருற், அடோவா, என்னும் இரண்டுமே. அடோவா நகரம் பிடிக்கப்படமுன்னர் அந்நகரைவிட்டுச் சனங்கள் வெளியேறிவிட்டனராம். அடோவா நகரில் குண்டுபோடப்பட்டபோது 32 சிறுவர்களும் 40 பெண்களும் கொல்லப்பட்டனராம்.

இப்போது யுத்தத்தின் பொருட்டு ஆபிரிக்காவில் 200000 இத்தாலிய போர்வீரர் உளர். 300000 வேலையாட்களும் வசிக்கின்றனர். இவ்வேலையாட்களுக்கு வேலை தெருக்கள் அமைப்பதே. மேலும் 300 ஆகாயக்கப்பல்கள் உள. கவசம் போட்டதும் மலைகள் கிடங்குகளில் கஷ்டமின்றிச் செல்லக் கூடியதுமான 250 மோட்டார்கள் இருக்கின்றனவாம்.

சமீபத்தில் முஸலோனி அடோவா சென்று தமது துருப்புக்களின் நடமாட்டத்தை நேரில் பார்க்கக் கூடுமென்றும் சொல்லப்படுகிறது.

o o o

அக்டோபர் 6.

அடோவா நகரை இத்தாலியர் கைப்பற்றிவிட்டதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. இப்புதினம் ரோம் நகர்க்கெட்டியதும் அஙகுள்ளோர் பேரானந்தம் அடைந்தனர். இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன் அதாவது 1896-ம்ஞு இந்நகரிலேதான் இத்தாலியரை அபிசீனியர் தோறகடித்தவராவர். அந்நாட்டொட்டு இரு சாதியினர்க்குமிடையில் பெரும பகையிருந்துவந்தது. அது இன்றுதான தீர்ந்ததாம். ஆகாயக்கப்பல்கள் குண்டுகள பெய்தன; பீரங்கிகள் இடிமுழக்கத்துடன் பெரிய குண்டுகளைப் பிரயோகித்தன; பெருந்திரளான சேனைகள் மிக உக்கிரமாக எதிர்த்துப் போராடின. இவைகட்கிடையில இன்று காலை அடோவாநகர் கைப்பற்றப்பட்டதாம். இத்தாலியர் இந்நகர் பிடிக்கப்பட்ட தினத்தில் பெருங் குதூகலத்துடன் கொண்டாடினர். கொடிகளைப் பறக்கவிட்டனர். தீவர்த்திகளுடன் ஊர்வலங்கள் பல வீதிவழியே சென்றன. o

இப்போது இறித்றியா எல்லைப்புறத்திலுள்ள போர்முனையின் விஸ்தீரணம் 70

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)

# இந்தியச் செய்திகள்.

## ஸ்ரீமதி கமலாநேரு.

கமலாநேருவின் ஆரோக்கியம் இன்னும் சீரடையாதிருப்பது பெரிதும் வருத்தப்படத்தக்கது. மூச்சுப்பையில் நீர் இடைக்கிடையூறுவதால் சுரம் மிக வேகமாக விருக்கிறதாம். ஒருநாள் சுரம் 105 டிக்கிரிக்குப் போனதாகவும் பின் மூச்சுப்பையி லூறிய நீர் அகற்றப்பட்டதும் சுரந் தணிந்துவிட்டதெனவும் கூறப்படுகிறது. மூச்சுப்பையி லேற்பட்ட ரோகம் மாறும்வரையும் சுரந் தணியாதென வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். மேலும் இருதயமும் மற்றைய மூச்சுப்பையும் நன்னிலையிலிருப்பது சிறிது ஆறுதலைக் கொடுக்கும் செய்தியாகும். முன்னர் உவாந்தி இருந்தமையால் அதுகாரணமாக உணவுஉட்கொள்வது கஷ்டமாகவிருந்தது. ஆனால் தற்போது சிறிது ஆகாரம் கஷ்டமின்றி அருந்தக்கூடியதாயிருக்கிறதாம்.

## மிருகபலியும் உண்ணாவிரதமும்

கல்கத்தாவிலுள்ள மிகப் பிரசித்திபெற்ற காளிகோவிலில் ஆட்டுக்கடா பலியாக வெட்டப்படுவது வழக்கமாக இருந்துவருகின்றது. இதை நிற்பாட்டும்படி பலரும் பன்முறை கேட்டும் வாய்க்கவில்லை. இப்போது பாஞ்சாலநாட்டு வாசியாகும் இராமச்சந்திரசர்மா என்பவர் அவ்வாலயத்தில் மிருகபலியிடுவதை நிற்பாட்டினாலன்றி தாம் உணவு உட்கொள்வதில்லையென மேற்படி ஆலயத்திற்கணித்தாக விரதமிருந்தனர். காளிகோயிற் பரிபாலகர் இவர் கோட்பாட்டுக் கிணங்கினாரில்லை. மிருகபலியை நிற்பாட்டப் பலர் முயன்றும் சித்தி எய்தவில்லை. மகாத்மாகாந்தியடிகள் விரதத்தை நிறுத்தும்படி செய்தியனுப்பினாராகவும் சர்மா அவர்கள் ஒருப்பட்டாரில்லை. இவ்விஷயமாக யாவர்க்கும் உண்மையைவிளக்கிப் பல நாட்களுக்கு பிரசாரஞ்செய்தபின் விரதம் அனுட்டியாது சடுதியில் விரதத்தை ஆரம்பிப்பது முறையன்றென மகாத்மா கூறியுள்ளார். ஈற்றில் பண்டிதர் மாளவியா கல்கத்தா வந்து சேர்ந்து விரதத்தை நிற்பாட்டும்படியும் ஒருவருடத்துள் மிருக பலியிடும் வழக்கம் நிற்பாட்டப்படாவிடின் மறுபடியும் விரத மாரம்பிக்கும்படியும் கூறினர். சர்மா அவர்கள் ஒருபடி இவர் கோட்பாட்டிற்கிணங்கி 32 நாட்களாகத் தாமனுட்டித்த விரதத்தை நிற்பாட்டினர். மிருகபலியிடும் வழக்கம் நிற்பாட்டுவதைக் குறித்துத் தாமும் முயற்சி செய்வதாகப் பண்டிதர் மாளவியா கூறினர்.

## பின்போடப்பட்டது

ஹைதராபாத் அரசராகும் நிஜாம் மன்னர் சிங்காசனத்தில் இவர்ந்து 25 வருடங்களாகின்றன. இதைக்குறித்து வெள்ளிவிழா அடுத்தமார்கழிமாசம் நடைபெறப்போவதாக முன்னரே குறிக்கப்பட்டிருந்தது. சில காரணங்கள்பற்றி ஷை கொண்டாட்டம் அடுத்தவருடத்து மாசிமாதக் கடைசிக்குப் பின்போடப்பட்டிருக்கிறது.

## இலங்கை—இந்திய ஆகாயத்தபால்

அடுத்த தைமாதத்துள் கொழும்பிற்கும் சென்னைக்குமிடையில் ஆகாயக்கப்பல் மூலமாகத் தபாற் போக்குவரத்து ஆரம்பிக்கப்படுமெனக் கூறப்படுகிறது. இடையில் தங்குவதற்கு இடங்களும் தெரியப்படுகின்றன. இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள கீழக்கரையென்னும் சமுத்திர ஓரமும் இராமேஸ்வரத்திலுள்ள கந்தமான பர்வதமும் இதற்கு வயதியான இடங்களாகப் பார்வையிடப்பட்டனவாம்.

## காளிதாஸ மகாகவி

இந்தியாவின் பேர்வாய்ந்த நாடகக்கவிஞரும் சிறந்த சமஸ்கிருத வித்துவானுமாக விளங்கிய மகாகவி காளிதாசரின் பெருநாள் சென்ற ஞாயிற்றுக்கிழமை சென்னையில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காளிதாசரால் இயற்றப்பட்ட நாடகங்களின் அருமைபெருமைகளை சமஸ்கிருத வித்துவான்கள் எடுத்துக்காட்டினர். காளிதாசரின்காலம் கிறிஸ்தாப்தம் 600-ம் வருடம் வரையிலெனவும் தக்க ஆதாரத்துடன் காட்டப்பட்டது. காளிதாசரின் நாடகங்களிலிருந்து சில பாகங்கள் நடித்துக்காட்டப்பட்டனவாம்.

## சமாதானத்துக்கிடமுண்டாம்

லாகூரில் மகமதியர்க்கும் சீக்கியர்க்கும் ஷாஹிட்கஞ்சு என்னும் பள்ளிவாசலைக்குறித்துக் கலகம் ஏற்பட்டமை யாவரும் அறிவர். இக்கலகம் இன்னும் நீங்கியபாடில்லை. இப்போது மௌலானா சவுக்கத் அலி முதலிய மகமதிய தலைவர்க்கும் சீக்கியத் தலைவர்க்குமிடையில் சமரசத்தை நாடி ஆலோசனை நடக்கிறது. இருபகுதியினரும் தங்கள்பக்க நியாயங்களை எடுத்துரைத்தனர். இருபகுதியினரும் சமாதானமாவதை விரும்புகின்றாராயினும் எப்படி அதை நாட்டுவதென்பதை முடிவுசெய்வது கஷ்டமாகின்றது. சமாதானத்தை நாட்டுமுன் இருபகுதியினரும் கலகங்களைவிளையாது அமைதியாகவிருப்பது அவசரமெனக் கூறப்படுகிறது. தங்கள் சமய உணர்ச்சிக்குமாறாக ஒன்றும் செய்யாவிடின் தாம் எவ்வித சமாதானத்துக்கு மாயத்தமென மகமதியர் கூறுகின்றனர்.

இப்போது இருவகுப்புத் தலைவரும் சேர்ந்து ஆலோசிக்கின்றனர். எவ்வித கலகமும் இச்சமயத்தில் கிளப்பாதிருக்கும்படி தலைவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

## போலிஸ்தலைவர் கொலைசெய்யப்பட்டார்

பாஞ்சால தேசத்தில் அமிர்தசரஸ் என்னும் நகருக்குச் சமீபமாகவுள்ள டார்டியோ என்னும் கிராமத்தில் ஓர் பெண்ணின் விவாகத்தைக் குறித்துக் கலகம் ஏற்படுவதாய் இருந்தது. கலகத்தை யடக்குவதற்காக ரான்ராங் என்னும் பொலிஸ் இன்ஸ்பெக்டரும் சில பொலிசாருமாக அங்கு சென்றனர். கல்யாண ஊர்வலம் தெருவீதிவழியாக வரும்போதுகலகம் ஏற்பட்டுக் கைகலந்துசண்டைநடைபெற்றது. அப்போது யாரோ ஒருவன் பொலிஸ் இன்ஸ்பெக்டரைக் குத்திக் கொன்றுவிட்டானும். வேறும் 12 பொலிசார் காயமடைந்தனர். இது காரணமாக அநேக கிராமவாசிகள் கைதிகளாக்கப்பட்டனராம்.

# யாழ்ப்பாணம்-மலையாளப் புகையிலை வியாபார ஐக்கிய சங்க வருடாந்தக்கூட்டம்

யாழ்ப்பாணம் 5

இன்று சாயந்திரம் $4\frac{1}{2}$ மணியளவில் யாழ்ப்பாணப் படக்காட்சிச்சாலை மண்டபத்தின்கண் யாழ்ப்பாண-மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்தாரின் முதலாவது வருடாந்தக் கூட்டம் ஷை சங்கத் தலைவர் திரு. தெ. சி. இராசரெத்தினம் (பிறக்றர்) அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அப்போது முந்நூற்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் குழுமியிருந்தனர்.

முதலாவதாகக் கூட்டத்தின் அறிக்கைப் பத்திரம் வாசித்து முடிந்ததின்மேல் தலைவரவர்கள் சென்ற ஆண்டின் அறிக்கையை வெளிப்படுத்தினார். அதன்மேல் காரியதரிசி திரு. N. A. சுப்பையா அவர்கள் பதிவுகாரியஸ்தரின் பரிசோதனை செய்யப்பட்ட வருடாந்தக் கணக்குகளை வாசித்து விளங்க வைத்தார்.

பின்னர் 'சங்கம் இரண்டாம் வருடத்திற்கெனக் கடன் எடுக்கக் கூடிய தொகை $3\frac{1}{2}$ லட்ச ரூபாவுக்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்' என்ற பிரேரணையை திரு. சி தம்பு அவர்கள் பிரேரிக்க, திரு. சி. மு. நாகமணி அவர்கள் அநுவதிக்க அது சர்வாங்கீகாரம் பெற்றது.

"இச்சங்கத்தில் வேலை செய்பவர்களுக்கு இவ்வருடம் கொடுக்கப்படும் சம்பளம் 2500 ரூபாவுக்கு மேற்படக்கூடாது" என்ற பிரேரணையை திரு. க. சரவணமுத்து அவர்கள் பிரேரிக்க திரு த. இராசையா அவர்கள் அநுவதிக்க அது சர்வசனசம்மதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன்மேல் "உபவிதி 20 (10)ல் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை காரியநிர்வாகசபையினர் செய்துமுடிக்க உரிமையளிக்கப்படுகிறது." என்னும்பிரேரணையைத் திரு. நா. பொன்னையா அவர்கள் பிரேரிக்க அதனைத் திரு. வி. சின்னத்துரை அவர்கள் ஆமோதிக்க அதுவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பின்னர், திருவாளர்கள் தெ. சி. இராசரத்தினம், க. சரவணமுத்து, ச. தம்பு, வி. சின்னத்துரை, தெ. வ. செல்லப்பா, நா. பொன்னையா, த. தம்பிமுத்து, சி. தம்பு, சி. நாகமணி, அ. பொன்னம்பலம், க. பொன்னம்பலம், சீ. கார்த்திகேசஐயர், பூ. சிதம்பரப்பிள்ளை, வே. சுப்பையா, த. நாகலிங்கம் முதலியோர் நிர்வாகசபைடங்கத்தினர்களாகத் தெரிவுசெய்யப்பெற்றனர்.

திரு. க. பொன்னம்பலம் அவர்கள் பின்வரும் பிரேரணையைப் பிரேரித்தார்:— "யாழ்ப்பாணத்திலுள்ள சில புகையிலை வியாபாரிகள், இச்சங்கம் யாழ்ப்பாணக் கமக்காரர்களுக்கு அனேக தீமைகளை உண்டாக்குவதாகவும், ஆதலால் அதற்குப் பண உதவி செய்யாமலிருக்கும்படியும் அரசாங்கத்தாருக்கு ஓர் மனுப்பத்திரம் அனுப்பியிருக்கிறார்களென அறிகின்றமையால், அரசாங்கத்தார் இச்சங்கம் அனேக நன்மைகளைச் செய்திருக்கிறதென்பதை உணர்ந்து, அம்மனுவைக் குப்பைத் தொட்டியினுட் புதைத்துவிடுவதுடன் எமக்குப் பணவுதவி செய்வார்களெனவும் எதிர்பார்க்கின்றோம்."

இதனைத் திரு. த. இராசையா அவர்கள் அநுவதிக்க இதுவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இச்சங்கத்தின் நன்மையை விரும்பிய ஐக்கியசங்க உத்தியோகஸ்தரான திருவாளர்கள் C. இரகுநாதன் அவர்களும், F. A. சந்திரசேகரா அவர்களும் கூட்டத்திற் சமுகமாயிருந்தனர்.

அதன்மேல் திரு. க. பொன்னம்பலமவர்கள், தலைவருக்கும் மண்டபச் சொந்தக்காரருக்கும், ஏனையோர்களுக்கும் சங்கத்தின் சார்பாக வணக்கத்தைத் தெரிவித்ததுடன் கூட்டம் இனிது முடிந்தது. நமது நிருபர்

## புகைவண்டிப் பிரயாணிகள் சங்கம்

வலிகாமம் வடக்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசிக்கும் முப்பத்தைந்து பிரபல தலைவர்களது வேண்டுகோட்கிணங்கிப் பெருந்தொகையான புகைவண்டிப் பிரயாணிகளது கூட்டம் ஒன்று இம்மாசம் 9-ந்திகதி சுன்னாகம் பிராசீன வித்தியாசாலை மண்டபத்தில் நியாயதுரந்தரர் திரு. தி. குமாரசுவாமி அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அக்கிராசனர் முதலில் கூட்டங் கூடிய நோக்கத்தைச் சபையோருக்கு எடுத்துக்கூறியதோடு சங்கம் ஒன்று ஏற்படுத்துவதனால் விளையக்கூடிய பல நன்மைகளையும் எடுத்துக் கூறினர்.

பின்னர் திருவாளர்கள். N. K. பாரதி, K. இளையதம்பி, K. முத்துக்குமாரசுவாமி முதலியோரும் புகைவண்டிப் பிரயாணிகளுடைய நன்மைக்காக வேலைசெய்யும் சங்கமொன்றிருக்கவேண்டிய அவசியத்தைப் பல நியாயங்களோடு எடுத்துரைத்தனர்.

யாழ்ப்பாணப் புகைவண்டிப் பிரயாணிகள் சங்கம் ஒன்று தாபிக்கப்படவேண்டும் என்று எல்லோரும் ஒரேமனதாய்த் தீர்மானஞ் செய்தனர்.

பின்வரும் சங்க உத்தியோகத்தரும் தெரிவுசெய்யப்பெற்றனர். அக்கிராசனர்: திரு. தி. குமாரசுவாமி Proctor S. C. உபஅக்கிராசனர்: திரு. ந. கி. பாரதியார், காரியதரிசி: திரு. J. K. கிறீஸ்ததாஸ், தனாதிகாரி: திரு. கு. முத்துக்குமாரசுவாமி, நிர்வாகசபை அங்கத்தவர்கள்: V. முத்துக்குமாரு M. A., நா. பொன்னையா, C. உருத்திராபதி, A. தட்சிணாமூர்த்தி, K. ஆறுமுகம், P. T. சின்னத்துரை, A. சுந்தரராசஐயங்கார்.

சபையோர்களுக்கு வந்தனங் கூறிய பிற்பாடு கூட்டம் முடிவடைந்தது.

—நிருபர்.

விலை நிதானம்! நயம் சரக்கு!

எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கேங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்
மூ குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்

விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலீஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும்
குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மூ. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

22) 19-2-24

உதவி வரைத்தன் றுதவி யுதவி, செயப்பட்டார் சால்பின் வரைத்து.

சிறுவர் பகுதி

# அத்திரி நகரத்து மணி

சி. த.

முற்காலத்திலே இற்றலிதேசத்திலே அத்திரி என்றொரு நகரம் இருந்தது. வீடுகள் யாவும் மலைகளின் பக்கங்களிலே கட்டப்பட்டிருந்தன. அந்தப் பட்டினம் மிகவும் அழகாயிருந்தது. அந்நகரத்திலே வசிப்பவர்கள் யாவரும் சந்தோஷமாக விருந்தார்கள். அந்த நகரத்திலே நீதி நன்றாக விளங்கிற்று. விளையாடும்போது சிறுவர்கள் ஒருவரையொருவர் அணுப்புவதில்லை. பெரியவர்களும் ஒருவரையொருவர் அணுப்பமாட்டார்கள்.

இப்படி யங்கே நீதிசிறந்து விளங்கியதற்குக்காரணம், அந்நகரத்துச் சந்தையிலே அரசனாற் றொங்கவிடப்பட்டிருக்கும் மணியே. அது ஒரு வீட்டின் தாழ்வாரத்திலே கட்டப்பட்டிருந்தது. அரசனுக்கு ஏதாவது முறைப்பாடுசெய்ய விரும்புவோர் அந்த மணியை யடிக்கவேண்டுமென்பது அரசகட்டளையாக விருந்தது. மணிச்சத்தங் கேட்டதும் நகரத்தலைவர் வந்து மணியையடித்தவரின் குறைகளை விசாரித்துத் தீர்ப்பர். வெகுகாலமாக ஒருவரும் மணியை அடித்ததில்லை. ஏனென்றால் நீதி அவ்வளவாகப் போற்றப்படடுவந்தது. வெகுகாலம் சென்றபடியால் கயிறு உக்கி சிறிது அறுந்துபோயிருந்தது. இதைக்கண்ட ஒருமனிதன திராட்சச்செடிகளை அந்தக் கொடியோடு பின்னி அதைப் பெலப்படுத்திவிட்டான்.

அந்த அத்திரி நகரத்திலே ஓரேயொரு மனிதன்தான் பொல்லாதவனாயிருந்தான். அவன் பேராசைக்காரனும லோபியாயும் இருந்தான். அவன் அத்திரி நகரத்து "நைற்" பட்டம் பெற்றவன். அவன் வேட்டையாடுவதில் அதிக பிரியமுள்ளவன். ஆனபடியால் அவனிடம அநேக குதிரைகளும் வேட்டைநாய்களுமிருந்தன. அவற்றை அவன் பட்சமாக நடாத்தினான். ஆனால், பின்பு அவன் பொன்னாசைபிடித்தவனாக மாறிவிட்டான். தனது குதிரைகளையும், காணிகளையும் விற்றுப்பணந்தேடலாயினான்.

எல்லாக் குதிரைகளையும் விற்றுவிட்டு, ஒரு குதிரையை மாத்திரம் தனது தேவைக்காக வைத்திருந்தான். அந்தக் குதிரைக்கு அவன் போதிய உணவு கொடுப்பதில்லை. குதிரை நாளுக்குநாள் மெலிந்துவந்தது. கடைசியாக அந்த "நைற்" அந்தக் குதிரையையும துரத்திவிட்டான். அந்தக்குதிரை அங்கும இங்கும் அலைந்துதிரிந்தது. ஒருநாள் இராத்திரி, அத்திரி நகரத்து மனிதரெல்லாரும் நித்திரைக்குப் போனபின்பு, அந்தக் குதிரை சந்தையடிக்குவந்தது. அங்கே, மணிக்கயிற்றோடு பின்னப்பட்டிருந்த திராட்சச்செடியைக்கண்டது. அச்செடி நன்றாகத் தழைத்துவிளங்கியது. பசியால் வருந்திய குதிரை அந்தச் செடியையிழுத்துத் தின்னத் தொடங்கியது. உடனே மணி உரமாக அடித்தது. டிங், டோங், டிங் என்ற சத்தம் எல்லாருடைய காதிலும் விழுந்தது. சனங்களெல்லாரும் திடுக்கிட்டு விழித்தெழுந்தார்கள். மணியடிபட்டதன் காரணம் என்னவாயிருக்கலாமென்று யோசித்தார்கள். எல்லோருமாக மணி கட்டியிருக்கும் இடத்துக்கு ஓடிப்போனார்கள். நகரத்தலைவரும் ஓடோடிவந்து சேர்ந்தார். எல்லோரும் அத்திரி நகரத்து நைற்றுடைய குதிரை திராட்சச்செடியைக் கடித்திழுத்துத் தின்பதைக் கண்டார்கள். "அத்திரி நகரத்து நைற்றுடைய குதிரை தனக்கு நீதிசெலுத்தும்படி மணியையடிக்கிறது" என்று நகரத்தலைவர் கூறினார். சனங்கள் ஒருவரையொருவர்பார்த்து நைற்றினுடைய பேராசையைக்குறித்துப் பேசலாயினர். பின்பு எல்லாரும் நைற்றைக் கூப்பிட்டார்கள். குதிரைக்கு ஏன் சாப்பாடு போதியளவாகக் கொடுப்பதில்லை என்று கேட்டார்கள். "குதிரை யொருவேலையுஞ் செய்யமாட்டாது. ஆனபடியாற்றான் நான் அதைத் துரத்திவிட்டேன்," என்று நைற் சொன்னான், "அந்தக்குதிரை முன்னேயுமக்கு நன்றாக வேலைசெய்திருக்கின்றது. அதனுடைய வயோதிபகாலத்தில், அதைப் போஷித்துக் காப்பாற்றவேண்டியது உமது கடமையாகும்" என்று நகரத்தலைவர் நைற்றுக்குச் சொன்னார்.

சனங்கள் எல்லாரும் அந்தக் குதிரையை நைற்றுடைய வீட்டிற்குக் கொண்டுபோய்விட்டார்கள், அன்று தொடக்கம் அந்த நைற் அந்தக் குதிரையைச் செம்மையாகத் தீன் கொடுத்துக் காப்பாற்றிவந்தார். வாய் பேசாப் பிராணியாகிய குதிரைக்கும் நீதி கிடைத்துவிட்டதல்லவா?

## சைவாசிரியகலாசாலை மாணவரின் சுற்றுப்பிரயாணம்.

### மாத்தளையில் பண்டிதரின் சொற்பொழிவு.

பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் இலங்கையின் புராதன நகரங்களைப் பார்ப்பதற்குப் பிரயாணமாகிய ஆசிரியரும், ஆசிரிய மாணவரும், கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி முதலிய இடங்கட்குச் சென்றபின், நிகழும் அக்டோபர் மாதம் 5-ந்திகதி சனிக்கிழமை காலை 11—மணி வரையில் மாத்தளைக்கு வந்து சேர்ந்தனர். பண்டிதர் அவர்களும், ஆசிரியரும், மாணவரும் ஸ்ரீமான். எஸ். கந்தசுவாமி அவர்களாலும், அவர் பத்தினியார் (மாத்தளை ஸ்ரீ பாக்கிய வித்தியாலயம் என்னும் சைவமகளிர் உயர்தர கலாசாலைத் தலைவியார்) அவர்களாலும் உவப்புடன் உபசரிக்கப்பெற்றனர்.

பண்டிதரும், மற்றையோரும் சாயங்காலம் 2—மணி வரையில் அநுவிகாரை, நாளந்தை, தப்புலை என்னும் புராதன சரித நிலையங்களைத் தரிசித்து இரவு மாத்தளைக்குத் திரும்பினர்.

### ஸ்ரீபாக்கிய வித்தியாலயத்திற் பிரசங்கம்

திருநெல்வேலி, பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள், மாத்தளை ஸ்ரீபாக்கிய வித்தியாலயத்தில் (7-10-35) சனிக்கிழமை இரவு "வித்தியாதர்மம்" என்னும் விஷயமாக ஓர் இனிய சொற்பொழிவு நிகழ்த்தினர். ஸ்ரீமான். எஸ். கந்தசுவாமி அவர்கள் அக்கிராசனராக வீற்றிருந்தனர்.

ஷை வித்தியாலய மாணவிகளால், தேவார திருவாசகம் சங்கீதத்துடன் படிக்கப்பட்ட பின்னர், பண்டிதர் அவர்கள் 'வித்தியாதர்மம்' என்னும் விஷயமாக விரிவுரை நிகழ்த்தினர். விரிவுரையின் ஈற்றில் ஷை வித்தியாலயத்தில், ஆங்கிலம், சிங்களம், தமிழ் என்னும் முப்பாஷைப் பயிற்சி நடப்பதையும், சைவர், புத்தர், கிறிஸ்தவர் என்னும் முச்சமயத்தினர்க்கும் வணக்கத்துக்குரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள முறையையும், அநாத பெண்பிள்ளைகட்கு, அநாத பிள்ளைகள் இல்லம் ஒன்று அமைத்து அவர்கள் மூன்று பாஷைகள் படிப்பதற்கு ஏற்ற ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதையும் சிறப்பித்துக் கூறி, சைவ அநாத பெண்பிள்ளைகட்கு ஓர் இல்லம் அமைப்பதற்கு முன்வந்துள்ள ஷை வித்தியாலயத் தலைவியின் நோக்கத்தை வியந்து கூறினர்.

பின்னர் திரு. மா. பீதாம்பரன் அவர்களாற் குறிப்புரை கூறப்பட்டது. திரு. எஸ். ஆறுமுகசுவாமி ஆசிரியர் அவர்கள் பண்டிதர்க்கு நன்றி கூறினர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவெய்தியது.

—கடிதம்.

# கலம்பகம்

சென்ற 7-ம்வ கூடிய சுகாதார நிர்வாகசபைக் கூட்டத்தில், கண்டி, காலி, யாழ்ப்பாணம் முதலியவிடங்களில் 20000 ரூபா செலவில் சமூக சுகாதார சிகிச்சைச் சாலைகள் நிறுவுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம். இச்சாலைகளில் நோயாளிகளுக்கு இலவச வைத்தியம் செய்யப்படுமாம். o o o

காந்திவாரக் கொண்டாட்டத்தையிட்டு ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள்போன்ற ஆர்ப்பாட்டங்கள்செய்யக்கூடாதென்றும் ஜோட்பூர்தர்பார் தடையுத்தரவு பிறப்பித்திருக்கின்றனராம்.

o o o

போலோ விளையாட்டுக்கும் குதிரைப் பந்தயங்களுக்கும் பழக்கப்படுவதற்காக 694 ஆஸ்திரேலிய குதிரைகள் பம்பாய்த்துறைமுகத்தில் சென்ற 2-ம்வ இறக்குமதியாயினவாம். o o o

பர்மாவில் ஒரு மாதத்தில் 5000 பாம்புகள் பிடிக்கப்பட்டனவாம். இவற்றுள் 20 நல்ல பாம்பாம்.

o o o

சென்ற ஜூன் மீ 24-ம்வ மட்டக்களப்பைச்சேர்ந்த நாவிதகுடைவாசியான பொன்னையா — கந்தையா என்பவரை அவ்வூர் கணபதிப்பிள்ளை — தம்பிமுத்து என்பவர் குத்திக் கொலைசெய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் சென்ற 6-ம்வ எதிரிக்கு 8 வருடக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டதாம். o o o

ஜர்மனியர்களுக்கும் யூதர்களுக்குமிடையில் இனிமேல் விவாகம் நடைபெறக் கூடாதென ஹெர் ஹிட்லர் தடையுத்தரவு பிறப்பித்திருக்கின்றாராம்.

o o o

காலி அமரகிரியாவிலுள்ள புத்ததாச அமரசூரியா என்பவர் சென்ற ஆகஸ்டு மீ 15-ம் திகதியன்று கோட்டையிலுள்ள ராணி வீதியில் தனது மோட்டாரிரதத்தைத் தவறான முறையில் செலுத்திச்சென்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி 10 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

o o o

குருநாக்கல் நகரத்தில் குடிக்கும் தண்ணீருக்கு வெகுவாகச் சனங்கள் பாதிக்கப்படுகின்றனராம். குறிக்கப்பட்ட நேரங்களில் சனங்கள் தங்கள் வாளிகளுடன் தண்ணீர்க்குழாய்களடியில் வந்து நெருக்கடியின் காரணமாக மணிக்கணக்காகக் காத்து நிற்கவேண்டியிருக்கிறதாம்.

o o o

சென்ற சனிக்கிழமை கொழும்பு பணிக்கர் தெருவில் காசு வைத்துச் சீட்டாடியதாக்க குற்றஞ்சாட்டப்பட்டு, குற்றத்தை ஒப்புக்கொண்ட 12 எதிரிகளுக்கு தனித்தனி 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாம். மற்றைய ஐந்து எதிரிகளையும் விசாரணையினிமித்தம் வருகிற 21-ம் தேதிக்குத் தவணையிடப்பட்டிருக்கிறதாம்.

o o o

ரூபெடையிலுள்ள டன்பார் சிங்காரவத்தைத் தோட்டக்கூலியான நாகன் என்பவனை ஷை தோட்டத்தைச்சேர்ந்த சண்முகம் கங்காணி சென்ற ஏப்ரல்மீ 25-ம்வயன்று மண்வெட்டிப்பிடியால் அடித்துக் கொலைசெய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி நிரபராதியாகக் காணப்பட்டு விடுதலைசெய்யப்பட்டான்.

ஜேர்மனியில் 'கிங்'என்னும் நாய் ஓர் வழக்கறிஞரைக் கடித்தமைகாரணமாக அவர் அந்நாய்மீது வழக்குத் தொடர்ந்தாராம். நாயைத் தூக்கிலிட்டுக் கொல்லவேண்டுமெனக் கீழ்க்கோட்டார் தீர்த்தனராம். அதன் சொந்தக்காரி அதைக் காப்பாற்றுவதற்காக சுப்பிறீம் கோட்டுக்கு மனுப்பண்ணியும் கீழ்க்கோட்டாரின் தீர்ப்பே பெலப்படுத்தப்பட்டதாம். அதன்படி நாயைத் தூக்கிலிடுவதற்காகக் கோட்டிற்கு வெளியில் கட்டிவைத்துவிட்டு சிறிதுநேரத்தால் பார்த்தபோது நாய் எதுவிதமோ கட்டை அவிழ்த்துக்கொண்டு ஓடிவிட்டதாம்.

o o o

அமெரிக்காவில் டெக்ஸாஸ் பிரதேசத்திலுள்ள ஒரு பூனை 3 அணில் குட்டிகளை வளர்த்துவருகின்றதாம்.

o o o

ஆஸ்திரேலியாவில் டார்வின் என்னுமிடத்தில் இராக்காலங்களில் விமானங்களை எச்சரிக்கைசெய்வதற்காக சீனாவில் செய்யப்படும் காகித விளக்குகளை உபயோகித்துவருகின்றனராம். அதிசீக்கிரத்தில் காற்றுப்பட்டு அணைந்துபோகாதாம்.

o o o

எகிப்தில் அழகுள்ள பெண்கள் போட்டி ஒன்று நடைபெற்றபோது இரு மைத்துனிமாரும் அதில் கலந்துகொண்டனர். இவர்களுக்குள் ஏற்பட்ட பொறாமை காரணமாக ஒருவரையொருவர் திட்டிக் கைச்சண்டை செய்துகொண்டதனால் ஒரு பெண் ஓர்கண்ணை இழந்தும் மற்றப்பெண் முகமெல்லாம் காயமேற்பட்டும் அழகை இழந்தனராம்.

o o o

கோண்வாலில் ஓர் பன்றி 6 முறைகளில் 109 குட்டிகளை ஈன்றிருக்கிறதாம்.

o o o

இங்கிலாந்தைச்சேர்ந்த அவுட்வுட் என்னுமிடத்தில் கிறிக்கெற் பந்தயம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது எறும்புகள் பெரும்படையாகத் திரண்டுவந்தனவாம். அவர்கள் உடனே பந்தாட்டத்தை நிற்பாட்டிவிட்டு எறும்புப்படைகளைத் தடிகொண்டு விரட்டி அவைகள் இல்லாது போனபின்பே மீண்டும் பந்தாட்டத்தை ஆரம்பித்தார்களாம்

o o o

களுத்துறையைச் சேர்ந்த எ கென்றிக் எனபவன், வெள்ளவத்தை மான்னிங் பிளேசில் 8 கஞ்சாப்பொதிகளை வைத்திருந்ததாக சென்ற 4-ந் தேதி கொழும்பு பொலிஸ்கோட்டில் குற்றஞ்சாட்டப்பட்டு ஒருவருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான். இவன் முன்பும் இத்தகைய ஓர் குற்றச்சாட்டில் 6 மாதக் கடுங்காவல் தண்டனை யடைந்தவனாம்.

o o o

லண்டன் வாப்பிங்கில் ஒரு றப்பர்க் கம்பெனிக்குச் சொந்தமான 7 மாடி கட்டடத்திலே தீப்பற்றியதால் 10 லட்சம் பவுணுக்குமேல் நட்டமேற்பட்டிருக்கிறதாம். 6000 சென்ட் றப்பர் வெந்து 100 அடி உயரத்துக்கு அனல் வீசியதாம்.

o o o

லாஸாபால்மஸ என்ற இடத்தில் 14 வயதுடைய ஓர் பெண் ஒரு வருடகாலமாக தூக்கத்திலேயே இருக்கின்றாளாம். டாக்டர்கள் ஆராய்ச்சிசெய்தபின்பு இவள் சாகவில்லையென்றும் எழுப்பாதுவிட்டால் எப்பொழுது எழுந்திருப்பாள் என்பதைப் பார்க்கவேண்டுமென்றும் கூறி மூக்கின் வழியே ஆகாரத்தைச் செலுத்திவருகின்றார்களாம்.

o o o

ஏறக்குறைய 30000 அடி உயரத்திலிருந்து 780 சதுர மைல் விஸ்தீரணமுள்ள இடத்தைப் படம்பிடிக்கக்கூடிய புகைப்படக்கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

மாத்துறைப்பகுதிப் பொலிஸ்கோட் வழக்குப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் கள்வர் புகுந்து கொஞ்ச ரொக்கத்தையும், வழக்குகளுக்குத் தயார்செய்யப்பட்டிருந்த பொருட்களையும் எடுத்துச் சென்றுவிட்டனராம்.

உதவிக்களவில்லை, உதவிசெய்யப் பெற்றுக்கொண்டவர் தகுதியளவே.

# கடிதங்கள்.

## நூல்களைப்பற்றிய குறிப்பு

### பூகோளம். மூன்றும்பாகம்
(இரண்டாம் பதிப்பு)

[ஆக்கியோன்: திரு. கே. இளையதம்பி (தலைமை ஆசிரியர், நாவலர் வித்தியாசாலை) அவர்கள். —விலை ரூபா ஒன்று.]

வித்தியாசாலை மாணவர்க்குரிய பல பாடபுத்தகங்களை எழுதி வெளியிட்டுப் பலராலும் பாராட்டப்பெற்றவரும், அரசடி ஆசிரியர் கலாசாலையில் பலகாலமாகத் தலைமையாசிரியராயிருந்தவரும், நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமையாசிரியராயிருந்து இளைப்பாறியிருப்பவருமான திரு. கா. இளையதம்பி அவர்களால் எழுதப்பட்ட பூகோளம் மூன்றும்பாகம் வெளிவந்துள்ளது. இது வித்தியாபகுதியாரின் புதிய திட்டத்திற்கேற்ப, விசேடமாக எழாந்தரத்துக்குரிய அட்ச, தேசாந்தரங்கள், வலயங்கள், ஐரோப்பிய சமவெளி, பெரிய மலையடுக்குகள், றைன்நதி பாயும் தேசங்கள், உலகத்துக் காற்று வீசும் முறை, பெருக்கு, வற்று, வனாந்தரங்கள், சோலைக்காடுகள், மனுட வாழ்க்கைமுறை முதலிய பகுதிகள் அடங்கியுள்ளது. குறித்த வகுப்பில் பயில்வோர்க்கு ஏற்றதென்பதே எமது துணிபு.

### நாட்டுச்சீவனசாஸ்திரம்
இரண்டாம்பாகம்

[ஆக்கியோன்: திரு. கா. ச. சிற்றம்பலம் அவர்கள், காரையடி மணல், பருத்தித்துறை. —விலை ரூபா 2-00]

நாட்டுச்சீவனசாஸ்திரத்தின் இரண்டாம்பாகம் வெளிவந்துள்ளது. முன்னரே ஷெ நூலின் முதலாம்பாகம் வித்தியாசாலை மாணவரின் உபயோகத்திற் கேற்றதென யாவராலும் அங்கீகரிக்கப்பட்டதிலிருந்தே இதன் சிறப்பை அறியலாம். ஆக்கியோன் பெரும் பிரயாசையுடன் இந்நூலை வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும். வித்தியாபகுதியாரின் திட்டத்துக்கேற்ப 38 பாடங்கள் பல சித்திர விளக்கத்துடன் மிளிர்கின்றன.

தமிழ் ஆசிரியர்களும் மாணவர்களும் இந்நூலை உவந்து ஏற்றுக்கொள்வாரென்பது எமது அபிப்பிராயம்.

### இராமாயணம் - சுந்தரகாண்டம்
சூடாமணிப்படலம்

கேம்பிரிட்ச் சீனியர் பரீட்சைக்கு 1936-ம் ஆண்டுக்குப் பாடமாகவுள்ளது. காலஞ்சென்ற திரு. ஆ. வீ. சோமசுந்தரம் அவர்களால் எழுதப்பட்ட குறிப்புரையுடனும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. என். சங்கரப்பிள்ளை, பீ. ஏ., அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்புடனும், வண்ணார்பண்ணை நாவலர் அச்சியந்திரசாலை அதிபர் திரு க. வைத்தியலிங்கப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. —விலை ரூபா ஒன்று.

### நாலடியார் (அதி. 1 -10)

கேம்பிரிட்ச் சீனியர் வகுப்புக்கு பாடமாகவுள்ள நாலடியார் முதல் 10 அதிகாரங்கள்; விளக்கவுரை, நூல்வரலாறு, ஆங்கில மொழிபெயர்ப்பு முதலியவற்றுடன் வெளிவந்துள்ளது. —விலை சதம் 75.

கிடைக்குமிடம்:- க. வைத்தியலிங்கம் அவர்கள், "உவாட் அன் டேவி", வண்ணார்பண்ணை.

### இந்துசாதன பாலர் மலர்

இஃது, இந்துசாதனத்தின் விஜயதசமி வெளியீடாகும். "டெமி" $\frac{1}{4}$ அளவில் 12 பக்கங்களில் பாலருக்கேற்ற கதைகள், விசித்திர விஞக்கள், நொடிகள் முதலியவற்றுடன் சில உருவப்படங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. கதைகள் முதலியன பாடசாலைமாணவர்க்கேற்ற முறையில் காணப்படுகின்றன.

எமக்கனுப்பிய பிரதிகளுக்காக நன்றி கூறுகின்றோம்.

## பண்டிதர்களும் பட்டதாரிகளும்.

தமிழ்ச்சங்கங்கள் கவனிக்குக.

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்கட்கு:

ஐயா,

ஈழகேசரியிலும் சுதேசநாட்டியத்திலும் பல பாஷாபிமானி, என்னும் கைச்சாத்துடனும் உண்மைவிளம்பி என்னுங் கைச்சாத்துடனும் சிலநாட்களின் முன் வந்த கடிதங்களைக் கண்ணுற்றனம். ஆனால், அவை என்னுடைய எழுதுகோலுக்கு ஓர் புது எண்ணத்தை யுண்டாக்கி இதை எழுதுமாறு செய்தன.

எவற்றைப்பற்றியும் எழுதப்புகுமிடத்து காய்தலுவத்தலகற்றி ஆராய்தலே அறிஞர்கடன். அங்ஙனமாகவும் சார்புபற்றியோ அபிமானம்பற்றியோ ஆவேசங்கொள்ளல் சிறப்புடைத்தன்று. நிற்க. தமிழ்ப்பண்டிதர்கள் இலக்கண இலக்கிய அறிவு மாத்திரமுடையாரென்றும் ஆங்கிலங் கற்றவர்களிற் சிலரும் அங்ஙனம் தமிழறிவுபடைத்துள்ளார் என்றும் இரு கடிதர்களும் ஒத்துக்கொள்கின்றனர். அக்கொள்கை எம்மாலும் ஒத்துக்கொள்ளத்தக்கதே. அதுபோலவே சர்வகலாசாலைப் பட்டதாரிகள் பல்வேறு கலைத்துறைகளிற் பயின்று மிகுந்த மனவிருத்தியுடையராகின்றனர் என்று கூறுங் கொள்கையும் ஒரு அளவுக்கு ஒத்துக்கொள்ளத்தக்கதே. இவைகளில் யாம் கடிதங்கள் கூறுவனவற்றை மறுப்பேமல்லேம். ஆனால் எமது தமிழ்ச்சங்கங்கள் தமிழ்ப்பண்டித பரீட்சைகளை ஏற்படுத்தி நடாத்திவருமிக்காலத்தில், புராண அறிவுமாத்திரம் படைத்த இற்றைக்கு 50 ஆண்டுகட்கும் 25 ஆண்டுகட்கும் இடைப்பட்ட தமிழறிஞர்போலாது ஏனைய கலைத்துறைகளிலும் ஓரளவுக்குக் கற்றவர்களே தமிழ்ப்பண்டிதர்களாயும் வருகின்றார்களென்பது வெளிப்படை. இவை யாவும் ஒருபுறம் இருக்க, கடிதர்களின் அந்தரங்கமான ஓர் கொள்கை என்னவெனில்; ஆங்கிலத்தில் பல்வேறு கலைத்துறைகளுக்குமுரிய ஆயிரக்கணக்கான நூல்களுளவென்பதும், அவைகளை யாங்கிலப் பட்டதாரிகள் கற்று விருத்தியடைகிறார்களென்பதும், அதனால் எம் நாட்டுக்கும் நன்மைபெருகும் என்பதுமாம். ஆனால் நாம் ஆங்கிலத்தில் பலநூல்கள் உளவென்பதை மறுப்பேமல்லேம். ஆங்கிலத்தில் பற்பல சர்வகலாசாலைப் பட்டதாரிகள் நம்மவருள் காணப்படுகின்றனரே! இவர்களால் எம்நாட்டில் புதிய எத்தனை கலைநூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஒருவேளை இரண்டொருவரால் ஏதும் புத்தகங்களாங்கிலத்தில் வெளிவந்திருந்தால் அவற்றால் வரும் நன்மை தமிழுக்கோ? ஆங்கிலத்திற்கோ? அல்லாமலும் தமிழ்ப்பண்டிதர்களும் தமிழைப் படிப்பதினாலாவது ஒருவாறு தமிழை விருத்திபண்ணுகின்றார்கள். ஆங்கிலப் பட்டதாரிகளிற் சிலர் தமிழைத் தம் மனையிற்றானும்பேச வெட்கமுறுகின்றார்கள் என்று நான் சொன்னால் எவராவது மறுக்கமுடியுமா? நிற்க. உண்மையானோக்குமிடத்து தமிழ்ப் பண்டிதர்களைப்போலவே ஆங்கிலப்பட்டதாரிகளும் ஆரோ எழுதிவிட்ட புத்தகங்களைப்படித்த புத்தகப் பூச்சிகளாவர். அவர்களால் அதுவும் தாய்மொழியறிவு பெறாத ஆங்கிலப் பட்டதாரிகளால் எம்நாட்டுக்கு வரக்கடவ நன்மை சூனியம்தான். எனவே, தமிழ்ப்பண்டிதர்களால் வரும் அற்ப நன்மைதானும் அவர்களால் தமிழுக்கு இல்லையென்க.

என் சிற்றறிவுக் கெட்டியவளவில் சொல்லக்கூடியது என்னையெனில், ஆங்கிலத்திலோ அன்றி வடமொழியிலோ அல்லது வேறு மொழிகளிலோ உள்ள கலைநூல்களை தமிழ்ச்சங்கங்கள் மொழிபெயர்ப்பித்து வெளியிடவேண்டும். அவை, இலட்சக்கணக்காகப் பரவவேண்டும். தமிழ்ப்பண்டித பரீட்சைகள் தனியே இலக்சண இலக்கிய பாடங்களைமாத்திரங் கொள்ளாது அட்சரகணிதம், கேத்திரகணிதம், கணிதம், வானநூல், உயிர்நூல், பௌதிகம், ரசாயனம், தாவரநூல், நிலநூல் முதலியவைகளில் இவ்விரண்டு அல்லது கூடியபாடங்களையும் கொள்ளவேண்டும். நான் கருதுமளவில் ஒரு தமிழ்ப்பண்டித பரீட்சைக்கு கணிதம் என்னும் பாடத்திற்கு ஆதாரகணிதமும், தாவரநூலுக்கு ரங்காச்சாரி தாவரநூலும், பௌதிக ரசாயனங்கட்கு இயற்கைப் பொருட்பாடமும்போன்ற புத்தகங்களேற்றவையெனலாம். இவ்வகைப்பட்ட நூல்களும் இந்திய தமிழராலன்றி எம்நாட்டிலுள்ள ஒரு ஆங்கில அறிஞரால் எழுதப்பட்டனவோ? என்பதை எம்மவர் சிந்திப்பாராக. அல்லாமல் தமிழ்ப்பண்டிதர்களில் ஆங்கில அறிஞர் சீற்றங்கொள்வதேன்? எல்லாவற்றிற்கும் மேலைத்தேயத்தவரையே பின்பற்றும் நம்மவர், ஆங்கிலத்திற்றான் கலைகளைப் படிக்கவேணும்; தமிழிற் படிக்கக்கூடாதென்று கூறப்பின்னிற்பார்களோ? ஒருமொழியில் ஏதும் ஒருகலைக்குரிய நூல்களில்லையென்றால் அது அம்மொழியாளரின் குறையேயன்றி அம்மொழியின் குற்றமல்ல. எனவே தமிழிலுள்ள நூல்களைக் கற்காவிடத்துத்தான் தமிழ்ப்பண்டிதர்கள் மற்றையகலைகளைக் கற்கவில்லையென்ற குற்றத்திற்காளாவார்களேயன்றி, அதுவரையும் ஆங்கிலங்கற்றோர் எமக்குப் பலகலையும் தெரியும் என்பது இரவற் புடவையில் கொய்சக அழகுபார்த்ததையொக்கும் எனவறிக. "போர்த்துக்கீச ஒல்லாந்த பாஷைகட்கு வந்தகதி ஓர்காலம் ஆங்கிலத்துக்கும்" வரும் என்பதையும் அறிக. கடிதர்களைப்போன்றோர் தமிழறிஞர்களைத் தூற்றாதிருப்பாராக.

பண்டித. ச. முத்துக்குமாரசுவாமிஐயர்

* * *

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்கட்கு:

ஐயா,

இலங்கையின் வியாபாரம் விருத்தியடைவதற்கு அதன்கண் உள்ள துறைமுகங்கள் திருத்தியமைக்கப்படவேண்டுமென்பதை யாவரும் அங்கீகரிப்பர். இலங்கையின் வடபாகத்தில் பிரதானமாக யாழ்ப்பாணத்திலுள்ள துறைமுகங்களை அரசினர் பரிபாலிக்கும் முறையைப்பார்த்தால் அவைகள் விரைவில் நசிக்கப்படும்போல் காணப்படுகிறது.

இற்றைக்குச் சிலவாண்டுகட்கு முன் அரசினர் வல்லுவெட்டித்துறையை மூடினர். அதற்குக்காரணம் அங்கே இரகசியமாக கஞ்சா அபின் என்பன கொண்டுவந்து இறக்கப்படுகின்றனவென்பதே. கொழும்புத் துறைமுகவழியாக கஞ்சா அபின் முதலியன களவாகக் கொண்டுவரப்படின் அரசினர் அத்துறைமுகத்தில் இறக்குமதி ஏற்றுமதிகளை நிற்பாட்டித் துறைமுகத்தை மூடிவிடுவாரா?

பழைய காலந்தொட்டு வல்லுவெட்டி முதலிய துறைகட்கும் இந்தியாவிற்குமிடையில் வியாபாரப் போக்குவரவு அதிகமாக நடந்துவந்தது. வல்லுவெட்டித்துறையில் கப்பல் கட்டுந் தொழிலும் பலவருடங்களாக நடந்துவந்ததாகும். இப்போது இவைகளொன்றும் கிடையா. வேலை கிடையாமையால் அங்குவசிப்போர்தொகையும் குறைந்துவிட்டது. வறுமையும் நோய்களுமே அங்கே மலிந்துள்ளன.

காங்கேசன்துறை, வல்லுவெட்டித்துறை, முல்லைத்தீவு முதலிய துறைமுகங்கள் இருளடைந்து பாழாகின்றன. அவைகளைத் திரும்பிப்பார்ப்பார் எவரும் கிடையாது. அரசாங்க உத்தியோகத்தர் சொல்வதெல்லாவற்றிற்கும் போக்குவரத்து மந்திரியார் (Minister of Communication) ஆமாச்சொல்லிநிற்க, சனங்கள் நேரத்துக்கருந்த உணவின்றிக் கஷ்டமடைகின்றனர்.

இவ்விஷயங்களை நன்காலோசித்து முடிவுசெய்தற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக்கூட்டம் விரைவில் கூட்டப்படவேண்டும். அரசினர்மீது நெருக்கடியைக் கொண்டுவந்தாற்றான் அவர்கள் இத்துறைமுகங்களை பழையபடி திறக்க முன்வருவர். அப்போதுதான் இலங்கையின் வியாபாரவிருத்தியும் நன்கு சித்திக்கும்.

"பிரமவீரா"
கொழும்பு
2-10-35.

இங்ஙனம்,
R. ஸ்ரீபத்மநாதன்

* * *

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்கட்கு:

ஐயா,

தினவர்த்தமானி தோற்றிய அன்றே மலையாளம் புகையிலை வியாபாரச்சங்கத்தையும் அதனால் கமக்காரருக்குப் பெருங் கேடு வரப்போவதாகவும் கூறிற்று. இவைபற்றியே நான் அதனுண்மையை அறியவும் மற்றவர்களுக்குத் தினவர்த்தமானி கூறுங் கூற்றினுண்மை எவ்வளவு பொருந்தியிருக்கென்பதையும் காட்டத் தங்கள் பத்திரிகைவாயிலாகக் கடிதமெழுதத் தலைப்பட்டேன். எய்தவனிருக்க அம்பைநோவதேன்? விஷயமெழுதிய நான் வெளிப்படையாக எனது ஒப்பமிட்டுக் கடிதமெழுத ஏழாலைவடக்கு திரு. க. இராசையா என்னுமொருவர் நம்மேல் பழிசுமத்தித் தினவர்த்தமானியில் ஒரு கடிதமெழுதியிருக்கிறார். அக்கொப்பி இத்துடன் அனுப்புகின்றேன். தாங்கள் விரும்பினால் அக்கடிதத்தை அப்படியே வெளிப்படுத்தவும் திரு. இராசையாவின் கூற்று அவ்வளவும் அவருக்கே பொருந்துமன்றி எனக்குப் பொருந்தா. நாலுபடித்த மனிதருள்ள ஒரு சபையில் நானுங் குறித்த இராசையாவும் வெளிப்பட்டு எங்கள் விவகாரங்களைப் பேசின், "குரங்கு பூனையின் கையால் நெருப்பிலிருந்த பிலாக்கொட்டை எடுத்தகதையும் கூலிக்குமாரடிப்போர் எவரென்பதும் யாருக்கும் பொருந்தும் என்பதும் விளங்கவரும்" குறித்தகடிதங்களை நானெழுதவில்லையென்றும், ஈழகேசரிப் பத்திராதிபரே எழுதி ஒப்பத்தை மாத்திரம் வாங்கினாரென்பதையும் குறித்த இராசையா நிரூபிப்பாரா? ஐயா பத்திராதிபரே! இவர் கூற்றைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளாது ஏன் பேசாதிருக்கின்றீர்கள்? தொடக்கம் ஒன்றாயும் முடிவு இன்னொன்றாயுமிருக்கிறதே. நம்மேல் தினவர்த்தமானியின் கடிதம் இவ்வளவு கோபங்கொள்ளக் காரணம் யாது? தினவர்த்தமானியின் ஓலத்துக்குத்தக்க விடையை நான் சென்ற இரு பத்திரிகைவாயிலாக எழுதினேன். நான் கூறிய ஞாயங்கள் சரி அல்லது பிழை என்பதாகத் தினவர்த்தமானி இன்றுவரையும் கூறவில்லை. மாயமாய் மறைந்த நாற்பத்தெட்டுக்கண்டி புகையிலையும் எப்படி மறைந்தது என்பதையும் நட்டம் எப்படி வரப்போகிறதென்பதையும் எமக்குச் சரியாகப் புலப்படுத்தும்வரையும் நாம் பேசாதிருப்பதே புத்தி.

வறுத்தலைவிளான்
3-10-35.

அ. கந்தையா
கமக்காரன்

# என்காலம் போய்விட்டது (3)

(முருகரம்மான் எழுதுவது)

## வாதமா பிடிவாதமா?


வாதத்திற்கு மருந்துண்டு, பிடிவாதத்திற்கு மருந்தில்லை. சென்ற மாசம் 22-ந்திகதி வெளிவந்த "ஈழகேசரி"யை நானும் பார்க்க நேர்ந்தது. அதில் ஓர் உபாத்தியாயர் ஆத்திர மிகுதியினால் அலறுகிறார். யாரோ ஒரு மனேச்சராம். தான் நினைத்தபடி செய்வாராம். இருத்தி எழுப்புவாராம். எழுப்பி இருத்துவாராம். பள்ளிக்கூடம் மாறிப் பள்ளிக்கூடம் பாயப்பண்ணுவாராம். பெறுத சம்பளத்தைப் பெற்றதெனப் பற்றுச்சீட்டுக்கொடுமெனச் சொல்வாராம். மறுத்துச்சொல்வாருக்குமறியலுமல்லக்குற்றமுமல்ல வயிற்றிலடிப்பாராம். எங்கள்காலத்தில் இப்படியான மனேச்சர்மாரில்லை. ஐரோப்பாவில் தோன்றிய ஆபிரகாம் லின்கன், சேர். உவில்வபோர்ஸ் முதலிய சீமான்களின் தீவிர முயர்சியால் இருண்ட ஆபிரிக்காவிலும் அடிமைச்சிறை நீங்கிவிட்டது. இந்துசமுத்திரத்தின் இரத்தினமாம் இலங்கைத்தீவு. இதனின் சிகரமாம் யாழ்ப்பாணம். இத்தகைய இடத்தில் இப்படியான மனேச்சர் இன்னுமிருக்கிறார் என்பது எனக்கு அன்றுதான் தெரியவந்தது. இதை யறிந்துதானே அரசினரும் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் நேரே யனுப்புவதாகத் தீர்ப்புச் செய்தனர்? அப்படியானால் அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனம். ஈழகேசரியின் தலையிலுள்ள "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்முள் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்குந் தாழ்வே" என்பதை நம் மனேச்சர் காணவில்லைப்போலும்.

## உணவுப்பொருள்களிலும்நாகரிகமா?

எங்கள் காலத்தில் பிள்ளைகள் அழுதால் "பனங்கட்டி வாங்கித் தருகிறோம்" என்று சொல்லி அவ்வழுகையை ஆற்றும் வழக்கமிருந்தது. (பனங்கட்டி சாப்பிட்டால் மலச்சிக்கல் உண்டாகாது) அவ்வழக்கம் இப்பவும் வறிய குடும்பங்களுள் தலைகாட்டிவருகின்றது. இக்காலத்திலோ பிள்ளைகள் அழுகிறதுதான் தாமதம். "சொக்கிவாங்கித் தருகிறோம்" எனச் சொல்லி யாற்றுகிறார்கள். இச் "சொக்கியின்" பலாபலன்களைப்பற்றி வைத்தியர் திரு. கிறேன்மர் அவர்கள் சென்ற வாரங் கத்தோலிக்க கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் அறிந்து கொள்ளலாம். பள்ளிக்கூடப் பிள்ளைகளுள் அதிலும் பணக்காரவீட்டுப் பிள்ளைகளுள் நூற்றுக்கு எண்பது பேருக்கும் பற்கள் கெட்டுப்போய் விட்டனவாம். அத்துடன் நில்லாது பல் துலக்குவதற்குச் சாம்பரும் கரியுமே மிகவும் உத்தமமானவையெனக் கூறினர். இம்மேனாட்டு வைத்தியர் சொன்னபின்பாயினும் நம் பெற்றோரும் மற்றோரும் இதனை உணர்வார்களா?


அவளுடைய வண்ணான் இப்பொழுது ஸன்லைட்டையே உபயோகிக்கிறான்

—துணிகளும் நீடித்தகாலம் உழைக்கின்றன



"இங்கே ஒரு அழுக்குத் துணிமூட்டை கிடக்கிறது. அவைகளை சலவை செய்தால் சீக்கிரம் கெட்டுப்போகும் என்று பயப்படுகிறேன். மேலும் வெளுப்பும் நன்றாகவே இருக்கிறதில்லை.

"நான் சொல்வதைக்கேள். உன் வண்ணானை ஸன்லைட் உபயோகிக்கும்படி சொல்லு. அச்சிறந்த ஸோப்பின் அபூர்வமான வெளுக்கும் தன்மையினால் துணிகள் துவைக்கப்படாமலே சுத்தமாகின்றன. துணிகள் கெடுவது துவைப்பதினாலேதான்.


ஒரு மாதத்திற்குப் பின்: இப்பொழுது உனது குழந்தைகள் சுத்தமாக காணப்படுகிறார்களே. நான் சொல்லியபடி ஸன்லைட்டின் சிறப்பை அறிந்தாய் போலும்.

"உண்மையே! நான் செய்ததைப் பற்றி மிகவும் சந்தோஷம். ஆடைகள் புதிதாகவும் சுத்தமாகவும் இருக்கின்றன. நீடித்த காலம் உழைப்பதால்' ஸன்லைட் துணிகளைக் கெடுப்பதில்லை என்று அறிந்தேன்."

துணிகளைக் கெடுக்காமல் சலவைசெய்ய ஸன்லைட் ஸோப் ஒன்றினாலேதான் முடியும். வீட்டில் வெளுத்தாலும், வண்ணான் வெளுத்தாலும் உமது துணிகளுக்கு ஸன்லைட்டே உபயோகிக்கும்படி செய்யுங்கள். அதன் சிறந்த சலவை செய்யும் தன்மை சுலபமாக அழுக்கைப் போக்கடித்து, வெண்மை உடைகளுக்கு அதிக வெளுப்பும், சாய வஸ்திரங்களுக்கு ஒருவித புதிய பளபளப்பையும் கொடுக்கிறது.

உங்கள் வீட்டில் ஸன்லைட் எப்பொழுதும் இருக்கட்டும்.

அதன் உபயோகங்கள் பல உண்டு. அது இப்பொழுது மலிந்த விலையில் எங்கும் கிடைக்கும்.




SUNLIGHT SOAP

LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

I-S IIII-288A

TAMIL


# முருகரம்மானுக்கோர் எச்சரிக்கை.

முருகரம்மான் அவர்களே!

நரை திரை மூப்பெய்திக் காடுவா வீடுபோ என்ற வேளையில் தாங்கள் ஈழகேசரியில் நடமாடித் திரிவது எற்றிற்கோ? வீரகேசரியிலுலாவும் ஊர்க்குருவிபோலத் தாங்களும்ஓர் ஊர்க்குருவியாகுமோ எனின் நன்று.

தள்ளாப்பாரயம் தத்தளிக்கும் நேரம் தாங்களும் வெள்ளவத்தைப் பந்தடியைப் பார்க்கச் சென்றீர்களே! கால்நடையாகவோ, அன்றிப் புகைரதமார்க்கமாகவோ? புகைரதமார்க்கமாகச் சென்றிருக்கமாட்டீர்களென்பது நம்பிக்கை. பனங்காயடி, தோட்டவேலை முதலிய பழுத்த வைதீகக் கொள்கைகளைத் தலைமேல் வைத்துக் காக்கும் வைதீகராய்த் தாங்கள் விளங்குவதால் புகைரதத்திற் பிரயாணஞ் செய்திருக்கவேமாட்டீர்கள். ஒருவேளை வெள்ளவத்தைத் தான் தோன்றித் தம்பிரானோ அப்படியுமன்று................ஒன்றும புலப்படவேயில்லை! பாவம். ஆனால்முன்னொருபோதும் காணாதகாட்சியைக் காணக் கிடைத்ததே தங்களுக்குப் பாக்கியம்.

மேலும் தாங்கள் பந்தடியைப் பார்த்ததும் பனங்காயடியே தங்கள் மனத்திடை எழுந்தது. அஃது இயல்புதான். நூதனமல்ல. பனங்காயடியின் உரிசை பாலர்களுக்கென்ன தெரியும். தங்களைப்போனறபழுத்தகிழங்களுக்கல்லவோதெரியும். அகழியிற் கிடக்கும்முதலைக்குஅதுவேவைகுந்தம.

தாங்களோ வயதின் முதிர்ந்த கிழம். அதேபோல் அறிவிலும மிக முதிர்ந்த கிழமாயிருப்பது மெச்சத்தக்கது. 'ஆட்டிடையருக்கிடையிற் சாரைப்பாம்பு புகுந்தாற்போல்" நல்ல காலம். தானறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம் என்பதையுமுணர்ந்தீர்கள். "பனங்காயடிக்கலாமே பந்தடிக்கிறார்களே, இவர்கள் பேயர்கள்" என்றெல்லாம் எண்ணினீர்களே. புத்திசாலியென்பதற்கு இதற்குமேல் இன்னும் ஆதாரம் வேண்டுமா? ஆனால் எண்ணிய எண்ணத்தை அந்நேரத்தில் வாய்விடாதுவிட்டதே வியப்புறத்தக்கது. வீணிற் பிரலாபிப்பதேயன்றிப்பயனொன்றும் ஏற்படாதென்ற முன் யோசனையாற்போலும் அங்ஙனஞ் செய்தீர்கள். ஏதோ கஷ்டகாலத்தில்வியாழன்ஓர் கடைக்கண்பார்வை.

எதிரி போனபின் தெருவில்நின்று வீரம்பேசும் பேடிபோல அங்கு மௌனமாயிருந்த தாங்கள் மௌனமாயிருக்காது கேசரியில் தங்கள் ஆற்றலைப் பறக்கவிடுகிறீர்களே. நன்று; நன்று. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்.

—'எல்லோரு மின்புற் றிருக்க நினைப்பதுவே, அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே,'

சி. பொன்னுத்துரை,
உடுவில் Star Club.


எதிர்பாருங்கள்!

உயரிய நூல்! ஒப்பற்ற விளக்கம்!!

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்கள் இயற்றிய

**புதிய தமிழ் - - ஏழாந்தரக் கணிதம்**

(அச்சில்)

இஃது பாடீகணிதம், அக்ஷரகணிதம், க்ஷேத்திரகணிதம் எனனும மூனறு பகுதிகளும ஆணைக்கப்பெற்று பல உதாரணக் கணக்குகளுடனும் நூற்றுக்கணக்கான அப்பியாசக் கணக்குகளுடனும் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்று 200 பக்கங்கள்வரையில் கொண்டுளளதாய் அதி சீக்கிரம் பிரசுரமாகும். ஜே. எஸ். ஸி, எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கு உபயோகிக்கத் தக்கது.

Publishers:
வடலங்கா புஸ்தகசாலை
கடைத்தெரு, பருத்தித்துறை

(25) 1-9-35

# தேவாரத் திருமுறையும் அதன் மகிமையும்.

ஆசிரியர், திரு. ஆ. காசிப்பிள்ளை அவர்கள், மறவன்புலோ.

சைவசித்தாந்திகளே!

**மா**னிடதேகமெடுத்ததின் நோக்கம் முத்தியடைதல் என்பது முன் கட்டுரையில் விளக்கப்பட்டது. அம்முத்தி பதமுத்தி, பரமுத்தி என இருபாற்படும். அவற்றுள்ளும் பரமுத்தியே சிறந்தது. அதுவே உண்மை முத்தி. இவ்வுண்மை முத்தியை அடைந்தோர் சமயகுரவர் நால்வரும் அறுபான்மும்மை நாயன்மார்களுமே என்பது, தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் என்னும் நூல்களை "குமாரதேவவள்ளலார்" "சுத்தசாதக" முறைப்படி ஆராயுமுகத்தான் விளங்கக்கிடக்கின்றது. இவ்வாறாக உண்மை முத்தி அடைந்த இறைவனருள் பெற்ற நாயன்மார்களாய மூவர் அருளிச் செய்த மந்திரம்போன்ற உயிருடைய, நன்னெறியுய்க்கும் மலந் தொலைக்குந் தேவாரத் திருமுறைகளின் மகிமையை ஓரளவிலறியாத சைவர்கள் நந்தேயத்தில் இல்லையென்றே கூறலாம். ஆயினு மத்திருமுறைகளின்மேலுள்ள தணியா ஆவலதூண்ட அவைகளின் மகிமையை என் சிற்றறிவுக் கெட்டியவரையில் கூறுமாறு ஈசனருள் நிரம்பிய அந்நாயன்மார்களின் திருவருளையே துணைக்கொண்டு தொடங்குகின்றேன் அறிவுடையோர் குற்றம் பொறுப்பாராக.

தேவாரம் என்னும் பதத்தை தே + ஆரம் என்றும் தேவு + ஆரம் என்றும இருவகையாகப் பாகுபாடு செய்து தே, தேவு என்பன தெய்வம், தேவன் என்னும் பொருளைத் தருமென்றும் தெய்வமென்றால முழுமுதற்கடவுளாகிய பரசிவமென்றும் சிவமென்றால் நித்திய மங்களமென்றும், பொருள்கொண்டு பரசிவத்தின் இலக்கணமாய நித்தியமாய், மங்களமாய், அகண்டமாய், உயிருக்குயிராய், வியாபகமாய்ப் பூவின் மணம்போல எங்கும் நீக்கமின்றி விளங்குவதென வேதாகமங்கள் உண்மையைக் காட்டி நிறுவி அவ்விதம் எங்கும் நீக்கமறப் "பாலில் நெய்போல" நீக்கமின்றி இருக்கும் பரங்கருணைத் தடங்கடலாகிய, அருளே திருமேனியாக ஆன்மவர்க்கங்கள் வழிபட்டுய்யும் பொருட்டு சிவாலயங்களிலும் சிவனடியாரிடத்தும் "விறகிற் றீபோல" விளங்குகின்றனன்.

மேல் ஆர மென்பதனை மாலையாகக்கொண்டு கோட்டுப்பூ கொடிப்பூ வாதிய மலர்களால் பலவித மாலைகள் தொடுத்து ஈசன் திருமேனியில் சாத்துவதுபோல, பெயர்ச்சொல் வினைச்சொல் லாதிய சொற்களால் பலவித சொன்மாலைகளை இயற்றி மெய்யடியார்களால் சாததப்படுவது சொன்மாலையாகும். ஈசனுக்கு மலர்மாலையிலுஞ் சொன்மாலையிற் பிரீதி யதிகமாம். இதற்கு,

"பன்மாலைத் திரளிருக்கத் தமையுணர்ந்தோர் பாமாலைக்கே நீதான் டகூமென்று, நன்மாலை யாலெடுத்துச் சொன்னார் நல்லோர்." என்னுந் தாயுமானவர் கூற்றால் அறியக்கிடக்கின்றது. இத்தேவாரத் திருமுறைகளை இயற்றியவர் சம்பந்தர், சுந்தரர், அப்பர் என்னும் மூவருமாவர். இவருள் முதலிருவரும் அந்தணரும் பின்னையோர் வேளாளருமாவர்.

சம்பந்தரை மூன்று வயதில் இடபாரூடராய்க் காட்சி கொடுத்து ஞானப்பால்கொடுத்தாண்டருளினர். அப்பரைச் சமண சமயத்தில் தருமசேனரென்னும் நாமத்தோடு இருக்குங்கால் அவருக்குச் சூலைநோய் கொடுத்து அவர் தமக்கையார் திலகவதியார்மூலம் ஸ்ரீ பஞ்சாட்சரம் ஓதி, விபூதி அளிப்பித்துச் சூலைநோய் தீரப் பதிகஞ் செய்வித்து ஆண்டருளினர். இப்பதிகத்தை இக்காலத்தும் சூலைநோய் உள்ளார் காலை மாலை பாராயணம்பண்ணிவரின் சூலைநோய் நீங்குமென்பது ஒருதலை. சுந்தரரை அவர் கலியாணகாலத்தில் விருத்தப் பிராமணவேடங் கொண்டு தம்மடியான் என்று கூறித் தடுத்தாட்கொண்டனர். இவர்களில் அப்பரும் சம்பந்தரும் சமகாலத்தவர் என்பது அவர்கள் வரலாறுகளால் அறியக்கிடக்கின்றது. சுந்தரர் இவர்களுக்குப் பிற்பட்டவர். இவர்களில் அப்பர் எண்பத்தொருவயதிலும் சுந்தரர் பதினெட்டு வயதிலும் சம்பந்தர் பதினாறுவயதிலும் முத்தியடைந்தனர். இங்ஙனம் ஈசன்மாட் டன்புடையராய் அவரோடு ஐக்கியமடைந்த முற்கூறியவர்கள் ஈசன் திருமுன்பு சென்று அவரைத் தரிசித்து வணங்கும்போது திருவுருவத்தை உளத்துட்கொண்டு நினைந்துருகித், தம்வச மிழந்து, அவனோடொன்றி ஐக்கியமாகிறார்கள் என்பதனை அவர்கள் பதிகங்களை நோக்குழி தெரிகின்றன. ஆகையால் அவற்றைக் கூறவேண்டுவதில்லை. சைவசமயாசாரியர்களாய் ஆலயங்களில் நாம் வழிபடும் முறைகளைக் கற்பித்து வழிகாட்டிகளாய் விளங்கிய இம்மூவரின் அன்பின் பெருக்கும் ஈசனருளின் பெருக்கும் அன்பு மருளு மறியாத எம்மனோரால் கூறுந்தரத்தன்று.

இந்நாயன்மார்கள் புண்ணியபூமியாகிய நம் பரதகண்டத்துள்ள சிவாலயங்களில் ஆயிரக்கணக்கான அடியார்தற் சூழ எழுந்தருளித் திருக்கோபுரங்களைக் கண்டபொழுதே புவியில் விழுந்து வணக்கம் புரிந்து, இருகர மலர்களுஞ் சிரங்குவிய "கற்றாவினுள்ளம்" போற் கசிந்துருகி எம்பெருமான் திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கி, சிவபரம்பொருளைத் தமது மனத்துட்கொண்டு அழலிடைப்பட்ட மெழுகுபோல உருகி நினைந்து இருகண்ணின்றும் நீர் பெருகியோடத் "தற்போத" மகன்று சிவானந்தப் பெருவாரியிற் றேக்கித் திளைத்து உள்ளே பெருகிப் பொங்கி வடிந்தாற்போல இம்மூவர் திருவாய்களினின்றும் நம்மனோரை ஈடேற்ற வந்த அருட்பாக்களானமையால் இத்தேவாரப்பதிகங்கள் "திருவருட்பா" எனப் பெயர்பெற்றது. இன்னும், வேதங்களில் கூறும் எழுகோடி மந்திரத்தையுந் தன்னுளடக்கி இருப்பதால் "அடங்கன் முறை" என்றும், இன்னும், கன்மம், பக்தி, ஞானம் என மூன்று காண்டங்கள் உடைமையானும், தர்மார்த்தம் முதலிய புருடார்த்தங்கள உடைமையானும், உண்மைப் பரம்பொருளின் இலக்கணத்தையும் அதனை அடையச்செய்யும் பிரமாணங்களை அடக்கி இருததலினும், தூலரூபமாகவும், தத்துவவடிவ சூக்குமரூபமாகவும் பொருள்கள் பிரவாகித்திருப்பது கொண்டும், வேதலட்சணம் நன்கமையப்பெற்றிருத்தலின், "தமிழ்மறை" என்னும் நாமத்தையும் பெற்றது. இதற்கு,

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்.

என்னுந் திருவள்ளுவமாலைச் செய்யுளானும் விளங்கக் கிடக்கின்றது.

---

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்.

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 1. காட்சி 8.

(முற்றொடர்,)

விகர்ணன்:–(மன்னர் யாவரும் ஊமரைப்போலிருப்பதைக் கண்டு) அரசர்களே!

"முறையோ வென்றென் றவனிதலம்
முழுது முடையான் முடித்தேவி
நிறையோ டழிந்து வினவவும்நீர்
நினைவற் றிருந்தீர் நினைவற்றோ
இறையோன் முனியு மெனநினைந்தோ
இருந்தா லுறுதி யெடுத்தியம்பல்
குறையோ! கண்கண் டதுநாளும்
குலத்துப் பிறந்தோர் கூறுரோ!"

'தன்னே ரில்லா நெறித்தருமன்
தனதென் றுரைக்கத் தக்கதெல்லாம்
முன்னே தோற்றுத் தங்களையும்
முறையே தோற்று முடிவுற்றான்;
சொன்னே ருரைக்குத் தான்பிறர்க்குத்
தொண்டாய் விட்டுச் சரிகுழலைப்
பின்னே தோற்க வுரிமையினுற்
பெறுமோ வென்று பேசீரோ!"

இப்பூமி முழுவதையும் ஆள்பவராகிய தரும ரண்ணாவின் தேவி முறையோவென்று கூவி வினவிய வினாவுக்கு எல்லீரும் ஊமர்கண்ட கனவைப்போலத் தெரிந்துந் தெரியாதவர்போ லிருப்பதென்னே? அரசன் கோபிப்பானென்று நினைந்தோ பேசாதிருக்கின்றீர், கண்ணுற்கண்டதைஎடுத்துக் கூறவும் அஞ்சவேண்டுமோ? குலத்துப் பிறந்த பெரியோர் தாம் கண்ட முறைகேட்டை எடுத்துக் கண்டியாது விடாரன்றோ. தனக்குத்தானே நிகராயுள்ள எமது தருமர் அண்ணா, தமக்குரிய பொருளனைத்தையும் முதற்றோற்றுப் பின் தம்மைத் தோற்று அதன் பின்பல்லவா இத்தேவியைத் தோற்றனர். தான் பராதீனப்பட்ட பின்னர்த் தம் மனைவியை ஒட்டம் வைத்துத் தோற்பதற்கு உரிமையின்மையின் திரௌபதி வினாவியதொக்கும். ஆதலின் ஆய்ந்துணர்ந்து கேட்ட வினாவுக்கேற்ற விடையளிக்கவேண்டியதுமது கடனாகும். (வேந்தர் யாவரும் விகர்ணனைத் தக்கோனென்று கொண்டாடினர்.)

கன்னன்:–விகர்ணா! இங்கமரும் தரணிபர் யாவரும் அமைதியாயிருப்ப நீ மாத்திரம் நியாயத்தைப் பகுத்தறிந்துகூற வல்லவனா? யாவரிலும் நீ அறிவா லுயர்ந்துவிட்டாய்போலும். இராசநீதி குருக்கொண்டு முதிர்ந்துவிட்டாய். உன்னை எவராவது நியாயங் கேட்டாரா? இங்கு வழக்குத் தீர்ப்பதற்கு வேறொருவருமில்லையா? மருக்கொண்ட தொடை முடியாய்!

"தான்படைத்த பொருளனைத்துந் தம்பியர்க ளுடன்றோற்றுத் தனையுந் தோற்றான், மீன்படைத்த மதிமுகத்தா ளிவன் படைத்த தனமன்றி வேறே சொல்லோ!, வான்படைத்த நெடும்புரிசை மாநகரும் தனதில்லும் வழங்கு மாயின், யான்படைத்த மொழியன்றே யெங்கணுமில் லெனப் பட்டா ளில்லா ளன்றோ!"

தருமன் தனது பொருளனைத்தையும தம்பியரோடு தோற்றுத் தன்னையுந் தோற்றுவிட்டான். துரோபதை பெண்பாள் இவனது இல்லாளல்லவா? ஒருவன் தனது இல்லத்தைத் தோற்றுவிட்டால் இல்லாள் புறம்பாவாளா? பசுவை விற்றாற் கன்றுக்கு வழக்குமுண்டா? "சிறியோர்க் கினிமை காட்டாதே சேம்புக்குப் புளிவிட்டாக்காதே" என்பதற்கிணங்க உளறுகின்றாய்.

"மைக்கோதில் கலையுடையன் மதியுடையன் பொறையுடையன் வரிசையாகத், தக்கோனென் றரசரெல்லா முரைத்த பேர் இவன்றனக்கே தக்கதம்மா!, மிக்கோர்மற் றுங்களைப்போல் வேறுண்டோ மகிதலத்து வேந்தராகித், தொக்கோர்! யானுவன்றமொழிக் கெதிர்மொழிஉண் டாமாயிற் சொல்லுவீரே!"

ஏ இணையற்ற மகிதலத்து வேந்தர்களே! கலைப்பயிற்சியிலும் நுட்ப புத்தியிலும் பொறுதியிலும் மேம்பட்ட தக்கோனென்று நீவிர் புனைந்துரைப்பதற்கேற்றவன் இவ்விகர்ணனன்றோ! நன்று, நன்று, இப்போ யான் கூறிய மொழிகளுக்கு எதிர்மொழியுண்டாகிற் கூறுவீராக.

துரி:—தம்பி துச்சாதனா! சிறுவனாகிய விகர்ணனைத் தக்கோனென் றழைத்த இம்மகிபர் யாவரும் பார்க்கும்படி, இம்மானமிலா ஐவரையும் வழக்குவார்த்தை புகன்ற மடவாலையும் துகிலுரியக்கடவாய்.

நால்வர்:—(தத்தம் ஆயுதங்களையேந்தி) இதோவுனை எமனுலகுக் கனுப்புகின்றோம்.

தருமர்:—தம்பிமாரே அமருங்கள்! திரையாழி சூழ்ந்த இப்பூதலத்தோடும் அதன்கட்டோன்றிய சராசரப் பொருட்கள் யாவும் கொண்டலின் மேவிய மின்னலைப்போலத் தோன்றி மறைவனவாகும். ஆதலின் பாலாழியிற் றுயிலும் கொண்டல்வண்ணனை எஞ்ஞான்றும் இடையறாது தியானித்தலே அழியாத பேரின்பத்தை நல்குவதாகும். இப்பொழுதும் நீங்கள் எம்பிரானைத் தியானித்தவண்ணம் மனவமைதியோடு பொறுத்திருப்பதே தகுதியாகும். அன்றியும், "ஒறுத்தார்க் கொருநாளையின்பம் பொறுத்தார்க்குப் பூமியுள்ளமட்டும் புகழ்" என்பதையுந் தெளிவீராக.

துச்சா:— ஏ பஞ்சபாண்டவரே! உங்கள் உத்தரியங்களைக் களைந்து கொடுப்பீராக. (ஐவரும் உத்தரியங்களைக் களைந்தீந்தனர்.) துரோபதி! நீ அரசவுடை தரித்திருப்பது தகுதியன்று. ஆகையின் அதைக்களைந்து வேறுடையைத் தரித்துக்கொள்வாய். மன்னர்க்கு மன்னனும் வணங்காமுடியோனுமாகிய எம்மூத்தோனைப்பார்த்து ஓர்கால் நகைத்தனையன்றோ! ஆயின் பழிக்குப்பழி வாங்குவதே சாலும். (துகிலைப்பற்றிக் களைகின்றான்.)

(தொடரும்)

---

## கடவுள் வணக்கம்

காராரு மாணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் காரமென்னும்
கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி
கானத் திருத்திமென் மேல்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயைவன்
பறவையணு காதவண்ணம்
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமென்றும்
ஆராரு மறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறை
யானந்த மானபரமே. [வாகி

## நவாலி அரசினர்பாடசாலையும் நவராத்திரிக் கொண்டாட்டமும்

சமாசனக் குழப்பங் காரணமாக ஏறக்குறைய ஒருவருடகாலம் நவாலி அரசினர்பாடசாலை 18பிள்ளைகளுடன் நடைபெறவேண்டியதாயிற்று. இப்பாடசாலையின் நிலைமையினை உணர்ந்த வித்தியாபகுதியார் மேற்படி பாடசாலையை மூட எண்ணங்கொண்டனர்.

இவ்வெண்ணத்திற்கு இடங்கொடாத நம் வடபகுதிப் பிரதமவித்தியா தரிசியாம் ஸ்ரீமான் கே. எஸ். அருள்நந்தி அவர்கள் மேற்படி பாடசாலையை எதுவிதமும் முன்னைய நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்னும் ஆவலால், நெல்லியடி அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியர் திருவாளர் எஸ். ஏ. சின்னையா அவர்களை நவாலி யரசினர்பாடசாலைத் தலைமையாசிரியராகச் சென்ற ஆனிமாதத்தில் நியமித்துள்ளார்.

குறித்த ஆசிரியர் நவாலி அரசினர் பாடசாலையை அடைந்ததும் பாடசாலைத் தூக்கத்தையும் ஊர்ச்சனங்களின் வெறுப்பையும் நன்குணர்ந்தார். உணர்ந்தும் "மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லையு முருகப் பாயும்" என்பதற்கிணங்கப் பாடசாலையை முன்னிலைமைக்குக் கொண்டுவர எண்ணங்கொண்டு ஆவனசெய்ய அருந்தொண்டாற்றினர்.

உபாத்தியாயரின் கனிவுமொழியினையும் இனிய பார்வையினையும் நைஷ்டிக ஒழுக்கத்தினையும் ஊரவர்கள் அவதானித்தனர். இவரிடமே எமது பிள்ளைகளைப் படிப்பிக்கவேண்டுமென்று துணிந்தனர்.

இதற்காக 25-9-35 இல் ஒரு பெருங் கூட்டத்தைக்கூட்டினர். இவ்வூர்க் கிராமச்சங்க அங்கத்தினரும் யோக்கியப் பூண்ட பெருமகனுமாய ஸ்ரீமான் மயில்வாகனம் அவர்கள் சபைத்தலைவராயிருந்து கூட்டத்தை நடத்தினுர்கள். தலைமை யாசிரியராம் ஸ்ரீமான் சின்னையா அவர்களால் உருக்கமானஉபந்நியாசம் நிகழ்த்தப்பட்டது. பின் எல்லாரும் பிள்ளைகளைப் பாடசாலைக்குவிட ஏகமனதான தீர்மானம் நிறைவேறியது. இப்போது இப்பாடசாலையில் 75 பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலை மேலோங்குமென்பதற்கறிகுறியாக நவராத்திரிக் கொண்டாட்டம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. பிள்ளைகளும் பெற்றாரும் நிறைந்திருந்த பாடசாலைக்காட்சி கண்டோரெவர்க்கும் களிப்பைக்கொடுத்தது. முறைப்படி கும்பம் வைத்துப் பூசைமுடிந்தவுடன் அங்குநின்ற பாலர்முதல் வயோதிபர் ஈறாகப் பழம், பலகாரம் அருந்தினர். தாம்பூலம் வழங்கப்பட்டது. தேவாரம் சிவநாம பஜனை முறைபாக ஓதப்பட்டது.

இப்போது புதிதாகப் பாடசாலைக்கு வந்த ஆசிரியர்க்கும் அவரை நியமித்த பிரதம வித்தியாதரிசி அவர்கட்கும் எமது நன்றி உரியதாகுக.

அன்றி இப்பாடசாலையைத் திருப்பவும் கூட்டிவைத்த தலைமையாசிரியர்க்கு வித்தியாபகுதியினர் செய்ய எண்ணியிருக்கும் சன்மானத்தை அறிய எவரும் ஆவலாகவும் இருக்கின்றார்கள். —கடிதம்.

## படக்காட்சி மனேசரிடம் பணம்பறிக்க எத்தனம்

யாழ்ப்பாணம் 8.

யாழ்ப்பாணம் படக்காட்சிச் சாலையாகிய 'றீகல்தியேட்டர்' மனேச்சர் திரு. S. அலோஸியஸ் என்பவர் நேற்றையஇரவு இரண்டாவதுகாட்சி முடிந்ததின்பின்னர் இரண்டு மணியளவில் இரு வேலைக்காரர்களுடன் வீட்டுக்குச் சென்றார். அப்போது அவரது மடியில் ரூபா 500 அடங்கிய பணப்பை இருந்தது. அவர் 'யூனைற்றெற்கிளப்' புக்கருகில் செல்லும்போது காத்திராப்பிரகாரம் ஓர் மனிதன் தோன்றி அவரைச் சருவினன். உடனே அலோசியஸ் என்பார் சப்தமிடவே அவன் ஓட்டம்பிடித்தான். அவனுடன் வந்த வேறு மூவரும் சிறிது தூரத்திற்கப்பாலுள்ள பாலத்து மதிலின்மீது உட்கார்ந்திருந்தவர்களும் அவனுடன்கூட ஓட்டமெடுத்தார்கள். அலோசியஸ் என்பார் அவர்களைப் பிடிக்கமுடியாதும், யார் யார் என மட்டிட்டுக்கொள்ளாதும் போய்விட்டார். ந—தி.

## சச்சிதானந்த வாசிகசாலை.

களபூமிவாசிகள் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமாக சச்சிதானந்த வாசிகசாலை என்னும் பெயருடன் ஓர் வாசிகசாலையை புரட்டாதிமீ 21-ந்உ (7-10-35) திங்கட்கிழமை விஜயதசமியன்று களபூமி ஏலச்சிட்டுக் கம்பெனி மண்டபத்தில் நிறுவியிருக்கின்றனர். —கடிதம்.

## உபசரணைக் கொண்டாட்டம்

வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச (நாவலர்) வித்தியாசாலையில் சென்ற பதினைந்து ஆண்டுகளாகத் தலைமையாசிரியராய்ச் சீரிய தொண்டாற்றிவந்து இது சமையம் இளைப்பாறுகின்ற ஸ்ரீமான். கா. இளையதம்பி உபாத்தியாயர் அவர்களுக்கு மேற்படி வித்தியாசாலையில் நிகழும் யுவஹு புரட்டாதி மீ 12உ (28-9-35) சனிக்கிழமை பிற்பகல் 4-மணியளவில் ஓர் உபசரணைக் கொண்டாட்டம் நிகழ்ந்தது.

அவ்வமையம் மண்டபம் நன்கலங்கரிக்கப்பட்டிருந்தது. சங்கீத வல்லுநர் சிலர் தம் இசைக்கருவிகளோடு கூடிய இனிய கீதங்களாற் சபையோரை மகிழ்வித்தனர். இரண்டாவதாக, பிரசித்திபெற்ற இருநாதசுர வித்துவான்களால் மேளக்கச்சேரி மிக்க திறமையோடு நடத்தப்பெற்றது. அதேசமயத்தில் பழவர்க்கங்கள் வழங்கப்பட்டன. பின்னர், வடபகுதித் தலைமைத் தமிழ் வித்தியாதரிசி திரு. M. தம்பிப்பிள்ளை அவர்கள் அக்கிராசனராயமர, தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. அக்கிராசனர் அவர்களுக்கும் பாடசாலை அதிபர் அவர்களுக்கும் திரு. கா. இளையதம்பி உபாத்தியாயர் அவர்களுக்கும் நறுமலர் மாலைகளைச் சூட்டினர். பாடசாலை அதிபதி திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தைச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தார். அதன்மேல் மேற்படி பாடசாலை உபாத்தியாயர் திரு. சி. வைத்திலிங்கம் அவர்கள் உபசாரப் பத்திரத்தை வாசித்து வழங்கினர். மாணுக்கர் சிலர் திரு. கா. இளையதம்பி உபாத்தியாயரைப்பற்றிய வாழ்த்துப்பாக்களைப் பாடிச் சபையாரை இன்புறச்செய்தனர். மேற்படி வித்தியாசாலை உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ. க. வை. ஆத்மநாதசர்மா அவர்களும், சாவகச்சேரி சின்னத்தம்பி ஞாபகார்த்த ஆசிரியகலாசாலை அதிபர் ஸ்ரீமான். J. C. அமரசிங்கம் B. A. அவர்களும், வண்ணை வைத்தியேஸ்வர வித்தியாலயத் தலைமையாசிரியர் ஸ்ரீமான். P. இரகுபதி B. A. அவர்களும் குறித்த உபாத்தியாயரின் கல்வி, ஒழுக்கம், ஆற்றல் உபாத்திமைத் தொழில் என்பவற்றைப்பற்றி மிக்க விரிவாக எடுத்துக் கூறினுர்கள். அவற்றுள் இவ்வுபாத்தியாயர் மாணுக்க நிலையிலேயே இப்பொழுதும் இருந்துவருகிறாரென்பதும்; ஆசிரிய உலகுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கிவந்தார், வருகின்றாரென்பதும்; உலகில் ஒரு சான்றோனுக மதிக்கப்பட்டு வருகிறாரென்பதும்; மாணுக்கரின் இடர்ப்பாட்டை நீக்கவல்ல புதிதுபுதிதான பல நூல்களை ஆக்கிவந்தார், ஆக்கிவருகின்றார் என்பதும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டன. அக்கிராசனரவர்கள் இப்பாடசாலையின் ஞாபகார்த்தமாகச் சில புத்தகங்களை உபாத்தியாயர் அவர்களுக்குப் பரிசிலாக அளித்தார்கள்.

திரு. கா. இளையதம்பி உபாத்தியாயரவர்கள் மாறுத்தரமாக உபாத்திமையின் அமைதி, உயர்வு, பொறுப்பு, என்பவற்றைப் பற்றியும், மாணுக்கரின்கடன், பிள்ளைகளின் படிப்பு விஷயமாக அமைய வேண்டிய பெற்றாரின் ஒத்துழைப்பு என்பவற்றைப் பற்றியும் தகுந்த உதாரணங்கள் வாயிலாக விளக்கிப் பேசினுர்.

பின் "சைவசமயமுந் தமிழ்க்கல்வியும்" என்னும் விஷயமாக திருவாளர்கள் கா. அருளம்பலம் அத்துவக்காத்து; பண்டிதர் க. கனகசபாபதி என்பவர்கள் சுருக்கமாகப் பிரசங்கித்தார்கள். இறுதியாக அக்கிராசனரவர்கள் தமது குறிப்புரையில் குறித்த உபாத்தியாயர் அவர்களின் தொண்டு பலராலும் பாராட்டற்பாலதென்றும், கற்பிக்கும் முறையிற் புதிய பல திருத்தங்களை இவ்வாசிரியர் கையாண்டு வந்திருக்கிறாரென்றும், இவரை முன்மாதிரியாகப் பின்பற்றி வருங்கால உபாத்தியாயர்களும் தொண்டாற்றுதல் நலமெனவுங் கூறி முடித்தார். இப்பாடசாலை உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ ச. கணேசஐயர் அவர்கள் சபைத்தலைவருக்கும் சபையோருக்கும், இக்கூட்டம் இனிது நிறைவேறுதற்குச் சார்பாயிருந்த பாடசாலை அயலவர்க்கும், பாடசாலையின் சார்பாக நன்றியறிதல் கூறினுர்கள். தேவாரபாராயணத்துடன் இரவு 8½ மணியளவில் கூட்டம் இனிது நிறைவேறியது.

குறித்த உபாத்தியாயர் அவர்களின் உபசரணை விஷயத்தில் வண்ணார்பண்ணைக் கிராமத்தவர்களும், உபாத்தியாயர் அவர்களின் பழைய மாணுக்கரிற் பெரும்பாலானோர்களும், அவரை யறிந்த பல பெரியார்களுமாக ஏறக்குறைய ஆயிரக்கணக்கானோர் ஏகோபித்து வந்து குழுமியிருந்தமையே இப்பெரியாரின் குணவிசேடங்கள் சாலவுஞ் சிறந்தன என்பதை விளங்கக் காட்டுகின்றது. —கடிதம்.

## வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி உதைபந்தாட்டச் சங்கம்

இச்சங்கம் முதன்முறை சங்கத்தை உதைபந்தாட்டச் சங்கத்தாருடன் யாழ்ப்பாணம் முற்றவெளியில விளையாடி ஒருகோலால் வெற்றியும், பின்பு யாழ்ப்பாணம் பொலிஸ்காரருடன் விளையாடி ஒருகோலால் வெற்றியும், பின்பு நவாலிதெற்கு நட்சத்திர உதைபந்தாட்டச் சங்கத்தாருடன் சென்ற 15-ந் திகதி ஸ்ரீமான் M. பாலசிங்கம் அவர்களை மத்தியட்சகராகக்கொண்டு விளையாடி இரண்டு கோலால் வெற்றியும் பெற்றது. பின்பு மேற்படி சங்கத் தலைவராயிருந்த ஸ்ரீமான் T. சண்முகலிங்கம் அவர்களுக்கு ஓர் பிரியாவிடைக்கூட்டமும் நடத்தபபட்டது என்று மேற்படி சங்க அங்கத்தவருள் ஒருவராகிய செ. அப்புத்துரை என்பவர் அறிவிக்கின்றார்.


### திருநெல்வேலி ஒற்றுமைநிதி
(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்த ரூ. 25ம் ஆதாயமும் தரப்படும்.

தனிக்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்
**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசியகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும் ஆதலால்

முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும் சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி.

(30) 18-11-34—11-35



### SRI LANKA BOOK DEPOT
### ஸ்ரீ லங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்

பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும், வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பென்சில், பேனு முதலியனவும், கொப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்.

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்.

அதிபர், ஸ்ரீ லங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35


துன்பத்தை நீக்கினவர் சிநேகத்தை எழுபிறப்பினும் நினைப்பர் பெரியோர்.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 13th October 1935, Sunday. { No. 15

## லங்கா பினன்ஸ் கம்பெனி

The
**Lanka Finance Company**
Stanley Street, Grand Bazaar
JAFFNA

காரியாலயம் :
காங்கேசன்துறை ரோட்டு, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புச்சீட்டுகள் இப்போது அமைக்கப்படுகின்றன :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A வகு. | ரூ. 1000/- | ரூ. 40/- | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B ,, | ,, 500/- | ,, 20/- | ,, | 25 | ,, |
| C ,, | ,, 250/- | ,, 10/- | ,, | 25 | ,, |
| D ,, | ,, 125/- | ,, 5/- | ,, | 25 | ,, |
| E ,, | ,, 75/- | ,, 3/- | ,, | 25 | ,, |
| F ,, | ,, 100/- | ,, 10/- | ,, | 10 | ,, |
| FNC ,, | ,, 250/- | ,, 10/- | ,, | 12½ | ,, |
| WC ,, | ,, 250/- | ,, 5/- | ,, | 50 | கிழமைகட்கு |
| WD ,, | ,, 125/- | ,, 5/- | ,, | 25 | ,, |
| தினசரி B1&2 ,, | 100/- | ,, 1/- | ,, | | |

கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதி
வேண்டிய விபரங்களை அறிந்துகொள்ளலாம்.

மனேஜர், லங்கா பினன்ஸ் கம்பெனி,
ஸ்ரான்லி ஸ்றீற், யாழ்ப்பாணம்.

(33) 22-9-35

## அகில இலங்கை
## ஆதாய எலச்சீட்டுக் கம்பனி

THE LANKA BENEFIT CO.,
GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | 5-ம் வகு. | 1000/- | ரூபா 40/- | ரூபா வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் ,, | 500/- | ,, 20/- | ,, ,, | 25 | ,, |
| C | 14-ம் ,, | 250/- | ,, 10/- | ,, ,, | 25 | ,, |
| D | 7-ம் ,, | 125/- | ,, 5/- | ,, ,, | 25 | ,, |
| BMC | 2-ம் ,, | 250/- | ,, 10/- | ,, ,, | 12½ | ,, |
| WC | 3-ம் ,, | 250/- | ,, 5/- | ,, ,, | 50 | கிழமைகட்கு |
| WD | 4 ,, | 125/- | ,, 5/- | ,, ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் ,, | 100/- | ,, 1/- | ,, ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.
மனேஜர், அகில இலங்கை ஆதாய எலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திர மல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைபபற்றி விளம்பரப் படுத்தினேம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித, கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசா ..., சபம்பமுதஸலி, பிஸதாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாளி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸபம, அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அனேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம, கைகால காநதல வலி, இடுபபுவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸதிரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோயகள தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.


இதன விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தாபாற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினங்கு, முதலிய தொடுவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம இல்லாததினால முன மணியார்டர் அனுப்புதல் வேண்டும.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P.O. Batticaloa, Ceylon

(25) 21-1-34.

## பவுண்மார்க் ஓடுகள்



இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதேனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்
**சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்**

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு }
பருத்தித்துறை ....
வலவெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

## இந்திய வங்கி லிமிற்றெட்
**THE INDIAN BANK Ltd.**
[Incorperated in British India in 1907]

ஷை வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற ஜூன்மீ 13உ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(2) 2 6-35.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி" யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் ஞு அக்டோபர் மீ 13-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.